# இந்தியாவே போற்றும் ஈடில்லாப் பணி

இந்தியாவே பாராட்டும் வகையில் நமது முதலமைச்சர் அவர்களும் அமைச்சர் ராசாராம் அவர்களும் குடிசை மாற்று வாரியத் தலைவர் அரங்கண்ணல் அவர்களும் நாமெல்லாம் பெருமைப்படும் அளவுக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் குடிசை மாற்று வாரியமும்-வீட்டு வசதி வாரியமும்-எப்படி இவ்வளவு சிறப்புமிக்க காரியங்களைச் செய்கின்றன என்று என்னைப் பார்க்கிற மற்ற மாநிலத்துக்காரர்கள் கேட்கிறார்கள்.

குடிசை மாற்று வாரியத்தின் மூலம் 4 கோடி ரூபாயும்-வீட்டு வசதி வாரியத்தின் மூலம் 9 கோடி ரூபாயும் செலவிடப்படுவது பெரிய காரியமல்ல; ஆனால் இந்தப் பணத்தைச் செயல்படுத்துகிற முறைதான் புகழுக்குரியதாகும்.

குடிசை வாழ் மக்களின் கஷ்டங்களைப் போக்கி விடுவோம் என்று பேசுவது எளிது. ஆனால் அந்த அடிப்படையில் காரியங்களைச் செய்து காட்டுவது அரிதானதாகும்! ஆனால் இந்த அரசு ஏழை மக்களுக்கான இது போன்ற பணிகளைச் செய்து வருவது சிறப்பான முறையில் குறிப்பிடத்தக்கதாகும்.

அரசியல்வாதிகளைப் பற்றிக் கவலையில்லை. ஏழை எளிய மக்களின் முகங்களில்-அவர்களின் கண்களில் இருக்கிற ஒளியைப் பார்க்கிறோம். அவர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்யாமல் நாமெல்லாம் ஏன் இருக்க வேண்டும்? இன்றைய தினம் இந்த ஏழை மக்களெல்லாம் அமைதியோடு இருக்கிறார்கள் என்றால் அவர்கள் வாழ்வில் தமிழக அரசு பெரிய நம்பிக்கையை உருவாக்கியிருக்கிறது.

குடிசைப்பகுதிகள் நாட்டில் உருவாகக் காரணம் என்ன? ஏழை எளியவர்கள் வாழ்கின்ற கிராமப்புறங்களில் அவர்களுக்குப் போதிய வேலை வாய்ப்புக் கிடைக்காததால் அந்த மக்கள் இதுபோன்ற நகரைத் தேடி வருகிறார்கள்.

## ஆளுநர் கே.கே.ஷா பெருமிதம்

அங்கே வேலை வாய்ப்பு இல்லை-இங்கே வேலை கிடைக்கிறது. கிராமப்புறங்களிலும் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டால் அவர்கள் இங்கே வரமாட்டார்கள்.

இதுபோன்ற ஏழைகளுக்கு வீடுகளைக் கட்டித் தருவது மாத்திரமல்ல; அவர்களுக்கு நல்வாழ்வு தரும் பணியையும் இந்த அரசு செய்து வருகிறது.

''ஒருவர் வாழ்வதற்கு மிகக் குறைவான இடவசதி யென்றால் கூட 27 சதுர அடி தேவை. ஆனால் அது இந்தியாவில் கிடைக்கிறதா? இப்போது, இந்தியா மாளிகையில் இருக்கிறதா-குடிசைப் பகுதியில் இருக்கிறதா என்றால் குடிசைப் பகுதியில்தான் இந்தியா இருக்கிறது. அந்த அளவுக்கு இந்தியாவில் குடிசைகள் தான் அதிகமாக இருக்கின்றன. இதை மாற்றாவிட்டால் இந்தியா இப்படித்தான் இருக்கும்.

இதுபோன்ற ஒரு நல்ல நிலையை-சீர்திருத்தத்தை நாம் புகழா விட்டால் என்ன பயன்? ஆகவே இதுபோன்ற வீடு கட்டும் முயற்சியைக் கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

மத்திய அரசில் நான் பொறுப்பில் இருந்தபோது நாட்டிலுள்ள குடிசைப் பகுதிகளையெல்லாம் மாற்ற என்ன செலவாகும் என்று கணக்கிட்டபோது பதினோராயிரம் கோடி ரூபாய் தேவையென்று கணக்கிட்டேன்-ஆனால் அதற்கு எங்கே போவது என்று கருதினேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரை இதுபோன்ற அரிய காரியத்தைச் செய்து வரும் முதல்வரையும் வீட்டு வசதி அமைச்சரையும்-வாரியத் தலைவரையும் நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்!

[சென்னை காசிமேடு குப்பத்தில் குடிசைமாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட 464 குடியிருப்புக்களை திறந்து வைத்து ஆற்றிய உரை.]

தமிழரசு
மலர்.6 இதழ்.3
1-8-75



# ஏழை எளியோருக்கு
# ரூ 27 கோடி செலவில் 25 ஆயிரம் வீடுகள்



## முதல்வர் கலைஞர் உரை

சென்னை மாநகரில் மக்கள் வாழ்வதற்கு, அதிலும் முக்கியமாக வசிப்பதற்கு இடம் இல்லாத காரணத்தால் எவ்வளவு சங்கடங்கள் இருந்தது என்பதையும், இன்னும் அந்தச் சங்கடங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்பதையும், ஆனால் அவைகளை நாம் நீக்குவதற்குச் சபதம் எடுத்துக் கொண்டு, பெரும் பகுதி அதிலே வெற்றி கண்டு, எஞ்சியுள்ள பகுதியையும் வெற்றிகரமாக ஆக்குவதற்கு முனைந்து செயல்படுகிறோம்.

பத்தாண்டுக் காலத்திற்கு முன்பு இரண்டரைக் கோடி என்ற அளவில் தமிழகத்தில் இருந்த மக்கள் தொகை, இப்போது மேலும் ஒன்றரைக் கோடி பேர் அதிகமாகி இருக்கிறார்கள். கிராமப்புற மக்கள் வேலை வாய்ப்புக்களைத் தேடி, நகர்ப் புறங்களை நாடி, குறிப்பாக சென்னைக்கு வந்தால் ஏதாவது ஒரு செய் தொழில் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு வந்து, தொழில் கிடைத்தவுடன் வசிப்பதற்கு இடம் கிடைக்காத காரணத்தால் தாங்களே புறம்போக்கு இடங்களில் அப்படிப்பட்ட இடங்களை உருவாக்கிக் கொண்டு விடுகின்ற காரணத்தால் ஆயிரக்கணக்கான குடிசைகள் சென்னையில் தோன்றி, அந்தக் குடிசை வாழ் மக்களுடைய அல்லலைத் துடைக்க கழக அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகள்தான் குடிசை மாற்றுவாரியத் திட்டமாகும்.

இந்தத் திட்டத்தைச் செம்மையாக, வேகமாக, பாராட்டத்தக்கமுறையில் அமைத்துத் தரக்கூடிய ஆற்றல் பெற்றவராக சகோதரர் அரங்கண்ணல் திகழ்வார் என்ற நம்பிக்கை இருந்த காரணத்தால் அந்தப் பொறுப்பை அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டேன். அந்த நம்பிக்கை வீண் போகவில்லை என்பதற்கு அடையாளமாகத்தான் கோபுரம் போலக் கட்டடங்கள் எழுந்திருக்கிற இந்தக் காட்சிகளாகும்.

நேற்று பேராசிரியர் அன்பழகன் அவர்களுடைய தொகுதியிலும், அதற்கு முன்தினம் அரங்கண்ணல் அவர்களுடைய பழைய மயிலாப்பூர் தொகுதியிலும், நாளைய தினம் (9-7-75) என்னுடைய தொகுதியிலும் குடியிருப்புகள் திறந்து வைக்கப்படுகின்றன. ஆனால் எங்கள் தொகுதிகளில் எல்லாம் உள்ள குடியிருப்புகள் நான்கு மாடிக் கட்டடங்கள்தான்; ஆனால் இன்று திறக்கப்படுகின்ற அரங்கண்ணல் தொகுதியில் மாத்திரம் ஐந்து மாடிக் கட்டடங்களாகும். இதனைச் சுயநலம் என்று சொல்லமாட்டேன். இங்கே ஐந்து மாடிக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்றால், நான்கு மாடிக்கட்டடம் கட்டினால் பல வீடுகளுக்கு இடம் கீழே இல்லாத நிலைமை ஏற்படக்கூடிய நெருக்கடி ஏற்படும் என்பதற்காகத்தான் அகலப் போவதைவிட உயரமாகப் போவோம் என்று மாடிகளை அதிகமாக ஆக்கியிருக்கிறார்கள்.

நாம் நெருக்கடியைத் தீர்ப்பதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்குப் பொது மக்களுடைய உதவி நிரம்பத் தேவை. அழகான வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. நாம் குடும்பத்தைக் கட்டுப்பாட்டோடு வைத்துக் கொண்டால்தான் இந்த வீடுகள் போதும்; அருமையான வீடு கிடைத்து விட்டதே என்ற அகமகிழ்ச்சியில் குடும்பக்கட்டுப்பாட்டை மறந்துவிட்டால் மகிழ்ச்சி நீண்ட நாள் நிலைக்காமல் போய்விடும்.

வீட்டு வசதிகளை நகரங்களோடு மாத்திரம் நிறுத்திக் கொள்ளாமல் கிராமங்களுக்கும் நாம் இன்றைக்கு விரிவுபடுத்தியிருக்கிறோம். அதற்கு அடையாளம்தான் அரிசனங்களுக்காக வீடு கட்டித் தருகின்ற பிரம்மாண்டமான திட்டம். தமிழ் நாட்டில் இருக்கின்ற அரிசன மக்களுக்குத் தேவையான வீடுகள் பத்து

# ஐந்தாண்டுகளில் தமிழக அரசின் அருஞ்சாதனை



மயிலைத் தொகுதி குப்பைமேடு குடியிருப்புகள்.

இலட்சம். இந்தப் பத்து இலட்சம் வீடுகளை அப்போது கட்டத் தொடங்கியிருந்தால் இன்று எல்லா அரிசனங்களுக்கும் வீடு கிடைத்திருக்கும் என்று எண்ணிப்பார்த்தால், சுதந்தரம் 1947-ல் கிடைத்து, ஓராண்டு அதற்கான விழாவைக் கொண்டாடி முடித்து விட்டு 1948-ஆம் ஆண்டில் இதற்கான திட்டத்தைத் தொடங்கியிருந்தால் இதனை நிறைவேற்றியிருக்க முடியும். இந்த இருபத்தேழு ஆண்டுக் காலத்தில் இந்தியாவிலே இருக்கிற ஏழ்மையை விரட்டி விட்டு மற்ற நாடுகளைப் பார்த்து மார் தட்டிக் கொள்ளலாம்.

கழக அரசு இந்த ஐந்தாறு ஆண்டுக் காலத்தில் தன்னுடைய சக்திக்கேற்ப-நிதி நிலைக்கேற்ப, இந்த மாநிலத்திற்கு இருக்கிற–வரை முறைப்படுத்தப்பட்ட–வரையறைக்கு உட்பட்டுள்ள குறுகிய அதிகாரங்களை வைத்துக் கொண்டு செய்திருக்கிற காரியங்களை, அகில இந்திய மட்டத்தில் யார் செய்திருக்கிறார்கள் என்று தான் அறைகூவல் விட்டுக் கேட்கிறேன்.

இங்கே காந்தியின் சிலை இருக்கிறது. அந்தச் சிலையின் சார்பாகக் கேட்கிறேன். காந்தியடிகளின் திட்டங்களை, அவர் யாருக்காகப் பாடுபட வேண்டுமென்று சொன்னாரோ, அந்தப் பணிகளை, நாங்கள் காந்தியடிகளின் நேரடி வாரிசுதாரர்களாக இல்லா விட்டாலும், காந்திக்குத் துணைவராகஇருந்த தந்தை பெரியாருக்கும், அவரால் உருவாக்கப்பட்ட தென்னாட்டு காந்தி அண்ணாவிற்கும் வாரிசுதாரர்களாக இருந்து இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

“ஏன் சுதந்தரம் கேட்கிறாய்? எவ்வளவோ நன்மைகளை வெள்ளைக்காரன் செய்திருக்கிறானே” என்று கேட்டபோது, “ஏழை யெளிய மக்கள் வசதியோடு வாழ, கூரை வீடுகளுக்கு ஓடுகள் வேய நான் சுதந்தரம் கேட்கிறேன்”என்றுகாந்தியடிகள் சொன்னார். ஆனால் காந்தியடிகளின் வாரிசுகள் அவரது வார்த்தைகளை மறந்தார்கள்; ஏன் காந்தியையே மறந்தார்கள்.

ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் சென்னைக்கு ராஜாஜி நினைவாலயத்தைத் திறந்து வைக்க வந்த போது “இந்தியாவிலேயே காந்தியடிகளின் மதுவிலக்குத் திட்டத்தை அமல்படுத்துகின்ற மாநிலம் காந்தி பிறந்த குஜராத் மாநிலமும், தமிழ்நாடும்தான்” என்று சொன்னார். குதிரைப் பந்தயம் இல்லாத மாநிலம் குஜராத்தும், தமிழ்நாடும் தான் என்று சொன்னார். குஜராத் மாநிலத்தில் குதிரைப் பந்தயம் இல்லவே இல்லை. ஆகவே அது ஒழிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனால் தமிழ் நாட்டில் அப்படி அல்ல. ஏறத்தாழ 200 ஆண்டுக் காலமாக இருந்த குதிரைப் பந்தயத்தை—1948—49-ஆம் ஆண்டில் குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட வேண்டுமென்று சட்டத்தை நிறைவேற்றி வைத்துக்கொண்டு ஆனால் அதை ஒழிக்காமல் இன்னும் இரண்டு ஆண்டு, இன்னும் இரண்டு ஆண்டு என்று நீடித்துக் கொண்டே போனார்கள்.

நான் பாளையங்கோட்டைச் சிறைச்சாலையில் இருந்தபோது, பத்திரிகையில் ஒரு செய்தி படித்தேன். சட்ட சபையில் அப்போது கழகத்தைச் சேர்ந்தவர்கள் நாவலரும், அரங்கண்ணலும்இருந்தபோது, அமைச்சர் வெங்கட்ராமனைப் பார்த்து குதிரைப்பந்தயத்தை ஏன் ஒழிக்கக் கூடாது என்று கேள்வி கேட்டு, அதற்கு அவர் “குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிட்டால் பிறகு நல்ல உயர்வான—பலம்பொருந்திய குதிரைகள் வளர்க்கப்படாமல் அந்தக் குதிரைகளின் வமிசம் அழிந்துவிடும் ; ஆகவே குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கு இல்லை” என்று பதில் சொல்லியிருந்தார். அதனைப் பத்திரிகையில் படித்து விட்டு பாளையங்கோட்டைச் சிறைச்சாலையில் ஒரு குறிப்பு எழுதி வைத்தேன். அதாவது “அப்படியானால் இன்றைக்கு எத்தனையோ இடங்களில், பொங்கல் நேரத்தில் மாடுகளை அவிழ்த்து விட்டு அவற்றுடன் மனிதர்கள் மோதுகின்ற நிகழ்ச்சிகள் போன்றவைகளை நிறுத்தி விட்டு பழையகோட்டை மன்றாடியார் பண்ணையில் மாடுகளை எல்லாம் சாதாரணமாகவே வளர்க்கின்றார்களே; அவைகளும் வளர்கின்றனவே அதைப்போல குதிரைப் பந்தயத்தை நடத்தாமல், அவைகளை வளர்க்கக் கூடாதா? என்று எழுதி வைத்தேன்; “அடுத்த வரியில் மது குடிக்கிறவன் கொஞ்சம் கொஞ்சமாகச் சாகிறான்; குதிரைப் பந்தயத்தில் தோற்கிறவன் அதே இடத்தில் செத்துவிடுகிறான்; ஆகவே குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட வேண்டாமா?” என்று எழுதி வைத்தேன். ‘பாளை நினைவுகள்” என்கிற புத்தகத்தில், அவைகள் எல்லாம் வெளிவந்தன.

ஆக நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது என்ன என்ன நினைத்தோமோ அதையெல்லாம் செய்கிறோம் என்பதற்கு அடையாளமாகத்தான் குதிரைப் பந்தயத்தை ஒழித்தோம்.



புரசைத்தொகுதி காந்திநகர் குடியிருப்புகள்.

மதுவிலக்குப் பற்றியும், குதிரைப் பந்தயம் பற்றியும் குறிப்பிட்ட ஜெயப் பிரகாஷ் அவர்கள் அதே விழாவில் பரிசுச் சீட்டையும் ஒழித்துவிட்டால் தமிழ்நாடு காந்தி பிறந்த குஜராத்திற்கு நிகராக விளங்கும் என்றார். நான் உடனே அதனால் எவ்வளவு நஷ்டம் வரும் என்று கூட கருதாமல், அதே இடத்தில் பரிசுச் சீட்டுகள் ஒழிக்கப்படும் என்று அறிவித்தேன். அதற்கும் அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், தமிழ்நாடு காந்தியடிகளுடைய கொள்கைகளை நிறைவேற்றி வருகிறது என்பதை எடுத்துக் காட்டத்தான்; காந்தி பிறந்த அக்டோபர் 2-ஆம் தேதியோடு அரிசனங்களுக்காக முப்பதாயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட விருக்கின்றன.

விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு மனை 1,75,000 பேர்களுக்கு நாம் வழங்கியிருக்கிறோம். இரண்டு நாளைக்கு முன்புதான் விவசாயத்தொழிலாளர்கள் என்ற பட்டியலில் விவசாயத்திற்குத் துணை நிற்கிறவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்; கிராமப் புறத்தில் இருக்கிற கருமான், கொத்தனார், முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளிகள் என்று இப்படிப்பட்ட கிராமப்புறத்தில் இருக்கிற சிறு கருவி தொழிலாளர்கள் அனைவரையும், விவசாயத் தொழிலாளர்களாகவே கருதி, அவர்களுக்கும் குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்க அரசு விரைவில் சட்டம் செய்ய் இருக்கிறது என்று அறிவித்தேன்.

ஆக, கிராமங்களிலிருந்து—பேரூர்களிலிருந்து—பட்டினக் கரைகள் வரை மக்களுடைய வீட்டு வசதிகளைப் பெருக்க எடுத்துக் கொண்டிருக்கிற இந்த முயற்சிகளில் இப்போது வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக, நாம் பல்வேறு கட்டங்களில் பல்வேறு வகையான வருவாய் உள்ளவர்களுக்கும் வீடுகள் கட்டித் தருகிறோம்.

இன்றைக்குப் பொருளாதாரதில் பலவீனப்பட்டுள்ள (எக்கனமிக்கலி வீக்கர்செக்ஷனுக்கு) வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. அதை மேலும் விரிவாக்கும் வகையில், நானும் அந்தத் துறை அமைச்சரும் கலந்து பேசி, அதையும் சென்னையில் விரிவுபடுத்துகின்ற ஒரு திட்டத்தை வெகு விரைவில் இந்த அரசின் சார்பில் நிறைவேற்ற இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**[சென்னை எழும்பூர் தொகுதி கொய்யாத் தோப்புப் பகுதியில் குடிசைமாற்று வாரியத்தின் சார்பில் ரூ. 20 இலட்சம் செலவில் கட்டப்பட்ட 190 குடியிருப்புக்களை 8-7-'75 அன்று திறந்து வைத்து முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.]**

கடந்த மூன்று நாட்களில் சென்னையில் மயிலை தொகுதியிலே குப்பைமேடு பகுதியில் 344 வீடுகளையும், புரசைத் தொகுதியிலே காந்தி நகரில் 496 வீடுகளையும், நேற்று எழும்பூர் தொகுதியில் கொய்யாத் தோப்பில் 192 குடியிருப்புகளையும், இன்று இங்கே 488 குடியிருப்புகளையும் ஆக மொத்தம் இந்த நான்கு நாட்களில் 1,520 வீடுகளையும் ஏழை எளிய குடிசை வாழ் மக்களுக்காக நாம் திறந்து வைத்திருக்கிறோம்.

மேலும் இந்தத் தொடர் விழாக்கள் 15-ஆம் தேதி ஆலையம்மன் பகுதியில் 308 வீடுகளும், 16-ஆம் தேதி பார்த்தசாரதி நகரில் 120 வீடுகளும், 17-ஆம் தேதி கிரே நகர் பள்ளம் என்ற பகுதியில் 440 வீடுகளும், 22-ஆம் தேதி காசிமேடு குப்பம் பகுதியில் 464 வீடுகளும் திறக்கப்பட்டு இந்த மாதத்திலே மாத்திரம் 2,852 வீடுகள் திறக்கின்ற ஒரு பெரும் சாதனையைக் குடிசை மாற்று வாரியம் செய்திருக்கிறது.

சில பல ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட திட்டத்தின் காரணமாக நகரம் அழகாக இருக்க வேண்டும் என்கிற எண்ணத்தோடு நகரத்திலே சாலையோரத்திலே, குடிசைகளிலே வாழ்ந்த மக்களை அப்புறப்படுத்தி, வேறு பகுதியில் போய் குடிசைகளைப் போட்டுக் கொள் என்று சொல்லிவிட்டால் மாத்திரம் நகரத்தின் அழகைக் காப்பாற்றி விடலாம் என்று முன்பிருந்தவர்கள் கருதினார்கள்.

அதன் மூலம் நகரத்தின் அழகைக் காப்பாற்றலாம்; ஆனால் நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்ற முடியாது. நாட்டின் பெருமையைக் காப்பாற்றவும், மனிதாபிமான உணர்வுகளைக் காப்பாற்றவும், அதிக அக்கறை கொண்ட இந்த அரசு சென்னையிலே மாத்திரமல்லாமல், தமிழகத்திலே உள்ள பல்வேறு நகரங்கள், கிராமப் புறங்கள் உட்பட எல்லா இடங்களிலும் மக்களுடைய மிக அத்தியாவசியமான தேவைகளில் ஒன்றான வீட்டு வசதித் தேவையை நிறைவேற்றி வைக்கும் பணியை மேற்கொண்டிருக்கிறது.

**எழும்பூர்தொகுதி கொய்யாத் தோப்பு குடியிருப்புகள்.**



சமுதாய நலத் தொண்டுகளில் இது மிக முக்கியமான தொண்டாகும். பாம்புக்குக் கூட வாழ்வதற்கு ஒரு புற்று இருக்கிறது; பயங்கரமான புலிக்குக் கூட குகை இருக்கிறது. எறும்புகளுக்குக் கூட வளை இருக்கிறது. ஆனுல் மனிதர்களாகப் பிறந்தவர்களுக்கு தாங்கள் வாழ்வதற்கு ஓர் இடம் கிடையாது. அப்படி ஓர் இடம் கிடைத்தாலும் அது சுகாதார வசதியோடு கூடியதாக இருப்பதில்லை. பன்றிகளை விடக் கேவலமாக, ஆடுமாடுகளைவிடக் கேவலமாக, வாழ வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலை மனிதர்களாகப்பிறந்தவர்களுக்கு ஏற்படுகிறதென்ருல், அந்தக் கஷ்டத்தை அனுபவிப்பவர்களுக்கு ஏற்படுகின்ற வேதனையைவிட, அந்தக் கஷ்டத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிற நமக்குத் தான் அதிக வேதனை ஏற்பட்டாகவேண்டும்.

அந்த வேதனையை எப்படித் துடைப்பது? கண்ணீர் விடுவதால் அந்த வேதனை நீங்கி விடுமா? நீங்காது. அனுதாப வார்த்தைகளைச் சொன்னுல் போதுமா? போதாது. ஆனுல் அவைகளைக் கூடச் சொல்லாதவர்கள் நாட்டில் இருக்கிருர்கள். அந்தக் கண்ணீரை வடிக்கக் கூடத் தயாராக இல்லாதவர்கள் உலகத்திலே வாழ்கிருர்கள்.

இன்று பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற இந்த அரசு, நீண்ட நெடுங்காலமாக அதாவது 18 ஆண்டுக் காலத்திற்கு மேலாக ஒரு அரசியல் கட்சி வடிவிலும், அதற்கு முன்பு 40, 50 ஆண்டுக் காலமாக ஏழை எளிய மக்களுக்குப் பாடுபட வேண்டும் என்ற பொதுநோக்கோடும், அதிலும் குறிப்பாக அடித்தளத்தில் இருக்கிற மக்கள்—சமுதாயத்தால், பொருளாதாரத் துறையால் பின் தங்கிக் கிடக்கிற மக்கள்—ஆகியோரை வாழ வைக்க வேண்டும் என்றமுனைப்போடு, எவையெவை இந்த நாட்டு மக்களுக்காக நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னேமோ, அதை நிறைவேற்றுகின்ற இடத்தில் அமர்ந்ததும் சொன்னவைகளை மறந்து விடாமல், முடிந்த வரை செய்து காட்டுகின்ற தன்மையைத்தான் இந்த நாடு காண்கிறது.



சைதாப்பேட்டை பகுதி
கலைஞர் கருணாநிதி நகர்
குடியிருப்புகள்.

இந்த அரசைப் பொறுத்த வரையில் இதனுடைய பார்வை எந்தப் பக்கம் செல்கிறது என்பதை ஏழெட்டு ஆண்டுக்காலம் கழக ஆட்சியை உன்னிப்பாகக் கவனிப்பவர்கள் புரிந்து கொள்ள முடியும். எங்கே பிச்சைக்காரர்கள், தொழு நோயாளிகள், கண்பார்வை மங்கியவர்கள், மாடுகளைவிடக் கேவலமாக கைரிக்ஷாக்களை இழுப்போர், அனதைச் சிறுவர்கள், ஆதரவற்ற கைம் பெண்கள் இருக்கிருர்கள் என்று தேடிப் பார்த்து, அவர்களுக்கு வாழ்வளிக்கும் முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டு வருகிறது.

இப்படி இந்த நாட்டில் சமுதாயத்தில், அடித்தளத்தில் வாழ்கிறவர்கள், அனதைகளாக விடப்பட்ட என்ற வகையில் யார் யார் புறக்கணிக்கப் பட்டுக் கிடக்கிருர்களோ, அப்படிப் புறக்கணிக்கப்பட்டவர்கள் பக்கம்தான் இந்த அரசின் பார்வை எட்டாண்டுக் காலமாகச்சென்று கொண்டிருக்கிறது.

இதற்கு என்ன காரணம்? நாங்களே ஒரு காலத்தில் புறக்கணிக்கப் பட்டவர்களாக இருந்தோம். ஆகவேதான் புறக்கணிக்கப்பட்டவர்களால் தான் புறக்கணிக்கப்பட்டவர்களை உணர முடியும்; அவர்களுடைய கஷ்டம் தெரியும் என்ற வகையில்தான் இந்த அரசு அந்தப் பெரும் முயற்சியில் இன்றைக்கு ஈடுபட்டிருக்கிறது.

ஆனுல் எல்லாவற்றையும் செய்து விட்டோம் என்ற மன நிறைவு எங்களுக்கு ஏற்பட்டு விட்டதா என்ருல் இல்லை. இந்த அரசுக்கு இருக்கிற அதிகாரத்தைக் கொண்டு, நிதி ஆதாரங்களைக் கொண்டு இயன்ற அளவிற்கு நாட்டு மக்களுடைய கஷ்டத்தைப் போக்கும் தொண்டை செய்துவருகிறேம்.

இங்கே கட்டப்பட்டிருக்கிற இந்த எழில் மாடங்களைக் காண்கிறேன். இந்த மாடங்களில் உள்ள பால்கனியில் இங்கே வாழப் போகிறவர்கள் நின்று கொண்டு, இந்தக் கூட்டத்தினைக் கவனித்துக் கொண்டிருக்கிருர்கள். இவ்வளவு அழகான கட்டடங்கள் குடிசைகளில் வாழ்கிற மக்களுக்குக் கிடைக்குமா என்ற ஏக்கப் பெருமூச்சு ஒருகாலத்தில் எங்களுடைய உள்ளத்தில் எழுந்தது. அந்த ஏக்கத்தைத் துடைக்கின்ற முதல் முயற்சியாகத் தான் இந்த வாரியத்தை நாங்கள் உருவாக்கினேம்.



தியாகராயநகர் பகுதி
சீலையம்மன் கோயில்
குடியிருப்புகள்.



**பேசின்பிரிட்ஜ் தொகுதி பார்த்தசாரதிநகர் குடியிருப்புகள்.**

இந்த வாரியம் உருவாக்கப்பட்டபோது, ''இதென்ன குடிசை மாற்று வாரியம்? ஏதோ அரங்கண்ணலுக்கு ஒரு தலைவர் பதவி கொடுக்க இந்த வாரியம்'' என்று சிலர் சொன்னார்கள். ''இது வாரியம் மாத்திரமல்ல; இதோ பாருங்கள், இதனுடைய தலைவர் அரங்கண்ணல் செய்திருக்கிற காரியம் எவ்வளவு மேலானது'' என்பதைக் காட்டும் வகையில் தான் இந்த எழில் மாடக்கூடங்கள் இங்கே அமைந்திருக்கின்றன.

இவைகளைப் பார்க்கும்நேரத்தில் சிலருக்கு இவர்களால் இதை எப்படிச் செய்ய முடிந்தது என்று கேட்கத் தோன்றும். இன்னும் சிலர் இதென்ன பிரமாதம் என்று நினைப்பார்கள். எப்போதுமே ஒன்றைச் செய்து முடித்த பிறகு அது சாதாரணமாகத் தோன்றும். சில காரியங்கள் முடிக்கின்ற வரையில் பிரமாதமாகத் தோன்றும். செய்து முடித்த பிறகு சாதாரணமாகத் தோன்றும். உலகத்திலே எல்லாமே அப்படித்தான்.

காதலர்களுக்குக் கூட — முதலில் அவர்கள் காதல் கைகூடுகிற வரையில் அதனுடைய சிரமங்களை உணர்வார்கள் ; கடிதப் போக்குவரத்து, சந்திப்பு, பெற்றோர்களின் சம்மதம் என்று பல சிரமங்கள் இருக்கும். பிறகு திருமணம் முடிந்து, ஒரு குழந்தையும் பிறந்த பிறகு, இது என்ன பிரமாதம் என்று சொல்லத் தோன்றும். அதற்காக முதலில் பட்ட கஷ்டங்கள் தெரியாமல் போய்விடும்.

அந்த வகையில் தான் இந்தக் காரியங்கள் எவ்வளவோ நெருக்கடிகளுக்கு இடையே நடைபெறுகின்றன. இந்தியாவில் தமிழ்நாடு, குஜராத் ஆகிய மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்கள் மதுவிலக்குக் கொள்கையைக் கடைப்பிடிக்காத காரணத்தால், கோடிக்கணக்கான ரூபாய்களை ஆண்டுதோறும் வருமானமாகப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாம் 58 கோடி ரூபாய் ஆண்டு வருமானத்தை இழந்துவிட்டு, மதுவிலக்கை அமல்படுத்தி இந்தக் காரியத்தைச் செய்கிறோம்.

அதைப் போல குதிரைப் பந்தயத்தை ஒழித்து, அதன் மூலம் இரண்டு, மூன்று கோடியையிழந்து விட்டும் இந்தக் காரியத்தைச் செய்கிறோம். பரிசுச் சீட்டுகளை வருகிற செப்டம்பரோடு நீக்கி விட்டு, அதிலே கிடைக்கக் கூடிய இரண்டு மூன்று கோடி ரூபாயையிழந்து விட்டு இந்தக் காரியத்தைச் செய்கிறோம். இந்த ஐந்தாண்டுக் காலத்தில் நாம் கட்டி முடித்திருக்கிற இந்த வீடுகளுக்கு ஆகியிருக்கிற செலவு மாத்திரம் ஏறத்தாழ பதினேழு கோடி ரூபாயாகும்.

இன்னும் பல குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. அங்கெல்லாம் நம்முடைய செயல் திறன்கள் சென்றாக வேண்டும். அந்தக் குடிசைகள் எல்லாம் கோபுரங்களாக மாறிட வேண்டும். இவ்வளவு மாநில அரசின் சார்பிலே செய்யப்பட்டிருக்கிற காரியங்கள்.

இன்றைக்கு ஒரு வீட்டின் செலவு 12,000 ரூபாய் என்ற அளவிற்கு ஆகி இருக்கிறது. இதே காரியத்தை ஒரு பதினைந்தாண்டுகளுக்கு முன்பு செய்திருந்தால், நான்காயிரம் ரூபாய்க்குள் முடிந்திருக்கும். இன்று ஏறியிருக்கிற சிமெண்ட் இரும்பு விலைகளின் காரணமாக ஒரு வீட்டிற்கு ஆகியிருக்கும் செலவு பன்னிரண்டாயிரம் ரூபாயாகும். இந்தியா சுதந்தரம் பெற்றவுடன் இந்தக் காரியங்கள் எல்லாம் தொடங்கப்பட்டிருக்குமானால், நாம் இன்றைக்குத் தான் குடிசைகளை மாற்றி இது போன்ற பெரிய வீடுகளைக் கட்டவேண்டும் என்ற நிலைமை இல்லாமல் இந்த அடிப்படைக் காரியங்கள் எல்லாம் என்றைக்கோ முடிந்து இப்போது மேல்நாடுகளோடு போட்டி போடத் தக்க வகையில் வேறு பல விஞ்ஞான சாதனைகளில் நம்முடைய கவனத்தைச் செலுத்தியிருக்க முடியும்.

சுதந்தரம் என்பது அன்னியனை வெளியேற்றி விட்டு, நாம் நம்முடைய அரசை அமைத்துக் கொள்வது என்பது மாத்திரமல்ல; சுதந்தரம் என்பதற்கு உண்மையான பொருள், அன்னியன் வெளியேற வேண்டும்; இந்த மண் நமக்குச் சொந்தமாக வேண்டும்; இந்த மண்ணில் வாழ்கிற மனிதர்களும் சுதந்தரமாக இருக்க வேண்டும்; சுகமாக வாழ வேண்டும்; சுகமாக வாழ்வதிலும் சுதந்தரம் இருக்க வேண்டும். அந்தச் சுதந்தரம் நிலைத்தால்தான் அந்தச் சுதந்தரம் வழங்கப்பட்டால்தான் ஆடுமாடுகளை விடக் கேவலாக நடத்தப்படுகின்ற மனிதனுடைய வாழ்வு உயர்த்தப்பட்டால்தான் அதற்கு உண்மையான சுதந்தரம் என்று பெயர். இந்தச் சுதந்தரத்தைத்தான் கனவு கண்டார் காந்தி அடிகள். அந்தக் கனவை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பில் இன்றையச்

...முதாயம் இருக்கிறது. காந்தியடிகளின் கனவுகளுக்குப் பல திட்டங்களை வகுத்துத் தந்தார் தென்னாட்டுக் காந்தி பேரறிஞர் அண்ணா. அவரே இருந்து அதனை நிறைவேற்ற முடியாவிட்டாலும், அவருடைய உண்மையான தம்பிகள் அந்தக் காரியங்களைத் தொடர்ந்து செய்து வருகிறோம். இன்னும் தொடர்ந்து செய்து வருவோம். எந்த நிலையிலும் செய்வோம்; எந்தக் கஷ்டத்திலும் செய்வோம் ; எவ்வளவு நெருக்கடி வந்தாலும் செய்வோம்!

**சைதைத்தொகுதி கலைஞர் கருணாநிதி நகர் குடியிருப்புத் திறப்பு விழாவில் ஆற்றிய உரை.]**

* * *



பெரம்பூர் தொகுதி
பெரியார் நகர் குடியிருப்புகள்

இந்தியாவிலேயே முதல் தடவையாக, மற்ற மாநிலங்களெல்லாம் பின்பற்றும் வண்ணம் நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு குடிசை மாற்று வாரியத்தை நாம் தொடங்கினோம். இதனை வெற்றிகரமாக நிறைவேற்றிடும் ஆற்றல் கொண்ட சகோதரர் அரங்கண்ணல் அவர்களும் அவருடன் பணியாற்றுகின்ற குழுவினரும், அதிகாரிகளும், இந்தத்துறையின் அமைச்சர் நண்பர் இராசாராம் அவர்களும் காட்டுகின்ற அக்கறையும், வெளிப்படுத்துகின்ற ஆர்வமும், இன்னும் பல கோடி ரூபாய் தமிழக அரசின் கருவூலத்தில் இருந்தால், இந்தப் பணிக்காக வாரி வாரி வழங்கலாமே என்று எண்ணத் தோன்றுகிறது. அந்த ஆசையோடு கருவூலத்தைத் திரும்பி பார்த்தால் நிதியாதாரம் பல்வேறு துறைகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டியிருப்பதால், இதற்கென எல்லா நிதியாதாரத்தையும் திருப்பி விடுவதற்கு இயலாத நிலையில் இந்த அரசு இருக்கிறது. எனினும் கிட்டத்தட்ட 25,000 வீடுகள்கட்டி முடிக்கப்பட்டு, முடிவடையும் தருவாயில் 2,000 வீடுகளும் ஆக மொத்தம் 27,000 வீடுகளை இந்த ஐந்தாண்டுக் காலத்தில் கட்டியிருக்கிறோம் என்பது பெருமைக்குரிய, வாழ்த்துவதற்குரிய,பாராட்டுவதற்குரிய மிகப்பெரிய காரியம்; இந்தியாவில் வேறெங்கும் நடைபெறாத செயல் இங்கே நடைபெற்றிருக்கிறது.

இதனை நானல்ல, ஆளுநர் அவர்களே கூட வெளி மாநிலங்களுக்கெல்லாம் செல்கிற நேரத்தில் எடுத்துச் சொல்லி வருகிறார்கள். இந்த 25,000 குடியிருப்புகளுக்குத் தமிழக அரசு சார்பில் செலவு செய்யப்பட்டிருக்கிற தொகை இருபத்தேழு கோடி ரூபாய்.

இதைத் தவிர வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் மதுரை, சேலம், திருச்சி, கோவை, தஞ்சை ஆகிய இடங்களிலும் இப்படிப்பட்ட குடிசைமாற்று வாரியப் பணிகள்நடை பெற்றிருக்கின்றன.

நியாயங்களைப் பேசுகிறோம்; உண்மைகளைப் பேசுகிறோம்; ஆகவே நியாயங்களுக்கு, உண்மைகளுக்கு, மதிப்பளிப்பக் கூடியவர்தான் தமிழகத்தின் ஆளுநர் கே.கே. ஷா. என்பதை நாடு நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறது. ஏழையெளியவர்களுக்காகக் கட்டப்பட்ட இந்த வீடுகளைத் திறந்து வைக்க அவரை அழைத்ததற்குக் காரணமே, இந்தத் திங்களில் தொடர்ச்சியாக, ஏறக்குறைய 2,800 வீடுகள் கட்டி, திறந்து வைக்கப்படும் விழாக்களில் இறுதி நாளாக நடைபெறும் இந்த விழாவில் கவர்னர் அவர்கள் கலந்து கொள்ள வேண்டுமென்று நாங்கள் விரும்பினோம்.

இன்றைய சூழ்நிலையில் ஒரு அரசு- மக்கள் நல அரசு என்கிற பெயரால் செயல்பட்டாலும், அல்லது சோஷலிச அரசு என்ற பெயரால் செயல்பட்டாலும், தலைப்பு எதுவாக இருந்தாலும், அதனுடைய பணிகள், பணிகளால் ஏற்படுகிற விளைவுகள், போய்ச் சேர வேண்டிய இடம், அடித்தள மக்களுடைய இடம். ஏழையெளியவர்களுடைய இடம்; பாட்டாளி மக்களுடைய இடம்; அங்கேதான் சமதர்ம அரசின் திட்டங்களின் விளைவுகள் சென்றடைய வேண்டும்.

தமிழகத்திலே இருக்கிற மீனவ மக்கள் கடலின் கொந்தளிப்பு; புயல் பேரலைகள் ஆகியவற்றை தாக்குப்பிடிக்க வேண்டிய இடத்தில் தங்களுடைய தொழிலை நடத்த வேண்டியிருப்பதால், கடற்கரையோரத்தில் வாழ வேண்டியவர்களாக இருக்கிறார்கள் அவர்கள் தினந்தோறும் தங்களுடைய தொழிலுக்காக வரவேண்டிய இடத்திற்கு அவர்கள் செலவழிக்க வேண்டிய நேரம், பணம், இதைக் கணக்கிட்டுப் பார்த்தால், அது முடியாத காரியம், ஆகவே அவர்கள் தொழில் நடத்தும் கடற்கரையோரத்தில் வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என்று திட்டமிட்டு, சென்னையில் மாத்திரமல்லாமல், கன்னியாகுமரியிலிருந்து கோவளம் வரை உள்ள எல்லா இடங்களிலும் மீனவர்களுக்கான வீடுகளை அமைப்பது என்று திட்டமிட்டு அதற்காக இந்த ஆண்டு இரண்டு கோடி ரூபாய் முதற்கட்டமாக ஒதுக்கப்பட்டு, ஐந்தாயிரம் வீடுகள் மீனவர்களுக்காகக் கட்டித் தரப்பட இருக்கின்றன.

**[சென்னை காசிமேடு குப்பத்தில் குடிசைமாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட 464 குடியிருப்புகளின் திறப்பு விழா 22—7—75 அன்று நடைபெற்ற பொழுது ஆற்றிய உரையிலிருந்து.]**



# LIC கட்டடம் தீ விபத்து



தீக்கிரையான மேஜை நாற்காலிகள்.

சென்னை மாநகரத்திலேயே மிக உயரமான கட்டடம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்குச் சொந்தமான பதினான்கு மாடிக் கட்டடமாகும்.

174 அடி உயரமுள்ள இந்தக் கட்டடத்தில் கடந்த ஜூலை 11-ஆம் நாள் இரவு 8.15 மணி அளவில் தீ பிடித்தது. இந்தப் பயங்கரத் தீயை அணைக்கத் தீயணைப்புப் படை வீரர்கள் மொத்தம் 22 மணிநேரம் இடைவிடாமல் போராடி வென்றனர்.

1958-ஆம் ஆண்டில் ஆயுள் காப்பீட்டு நிறுவனம் தனியார் துறை நிறுவனமாக இருந்த பொழுது சட்டப்பட்ட கட்டடம் இது. அப்பொழுதே இதன் மதிப்பு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாயாகும்.

இந்தக் கட்டடம் ஓரியண்டல் பயர் அண்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனியில் ரூ. 1 கோடியே 20 இலட்சத்துக்கு 'இன்ஷூர்' செய்யப் பட்டுள்ளதாம்.

நாடு சுதந்தரம் அடைந்த பிறகு இவ்வளவு பெரிய தீ விபத்து சென்னை நகரில் ஏற்பட்டதில்லை.

சென்னை நகரிலுள்ள எல்லாத் தீயணைப்பு வண்டிகளும் இத்தீயைத் தடுக்கக் கடுமையாகப் போராடின. ஏறத்தாழ 40 யூனிட் தீயணைப்புப் படையினர் இப்பணியில் ஈடுபட்டனர்.

தீயணைப்புத் துறையில் கடுமையான உழைப்புப் போன்று, தமிழ்நாடு காவல்துறையினரும் அரும்பாடுபட்டனர். இவர்கள் அனைவருக்கும் ஆயுள் காப்பீட்டுக் கழக நிருவாகிகள் நன்றி தெரிவித்துள்ளனர்.

உயிரைப் பணயம் வைத்துத் தீத்தணிப்புப் பணியில் ஈடுபட்ட தீயணைப்பு வீரர்களுக்குத் தமிழக மக்கள் அனைவரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்கள்.

சென்னை மாநகர வரலாற்றில் மிகக் கொடுமையான இத் தீவிபத்தில் ஓர் உயிரும் பலியாகவில்லை என்பது ஆறுதளிக்கக் கூடிய செய்தியாகும்.

தீவிபத்துக்கான காரணங்கள் பற்றித் தமிழகக் குற்றப் புலனாய்வுப் பிரிவைச்சார்ந்த காவல்துறையினர் ஆய்வு நடத்தி வருகின்றனர்.

தீவிபத்துக்குட்பட்ட கட்டடத்தின் உட்பகுதிகளை முதல்வர் பார்வையிட்டார்.





# கொடி கண்டேன்!



அழகொழுகுந் தாமரைப்பூ மலர்ந்து காட்ட
அதன்நடுவே இருகுவளை விரிந்தி ருக்க
எழில்தவழும் எள்ளின்பூ எடுப்பாய் நிற்க
இனியநிறத் தரக்காம்பல் அவிழ்ந்து தோன்ற
கொழுமுகைகள் செறிமுல்லை வரிசை காட்டக்
குவிகமலம் மலராது நிமிர்ந்து நிற்கச்
செழுமையுறு செங்காந்தள் விரிந்து தோன்றச்
செப்பரிய மெல்லியநல் லனிச்சம் தாங்கி,

ஒசிந்தாடி வருகின்ற கொடியைக் கண்டேன்
உள்ளமெலாம் நயந்தோடி உருகி நின்றேன்;
கசிந்தோடி அன்புக்குக் கரைகள் கட்டிக்
காப்பமைத்தேன்; ஆயினுமவ் வன்பு பொங்கி
வசங்காணுக் காதலெனும் வடிவங் கொண்டு
வாட்டியதால் அக்கொடியின் மலர்கள் தம்மைக்
கசங்காமல் நுகரஎழும் ஆசை காட்டிக்
கண்ணிமைக்க மனமின்றி நோக்கி நின்றேன்.

அவள்முகத்தில் மாங்கதுப்பில் அரும்பி நின்ற
அணிமிகுந்த இளஞ்சிவப்பை, மலையில் மண்ணில்
தவழ்நிறத்துப் பூவிலெலாங் கண்ட தில்லை!
தமிழச்சி நாணத்தின் வண்ணம் போலும்!
குவளைமலர்க் கருவிழியை ஓரம் போக்கிக்
குனிந்துநிலம் கால்விரலால் கிளறி நின்றாள்
தவளமலர் நகைமறைத்து இதழ்கள் மீது
தனித்துடிப்பை முறுவலொடு தவழ விட்டாள்.

பூப்பொறித்த மேலாடை திருத்தி விட்டாள்
புறமுதுகில் தொங்குகிற சடையை மார்பின்
மேற்புறத்துப் படரவிட்டாள்; பார்த்த பின்னர்
மேலுமதைப் பின்புறத்தே புரள விட்டாள்;
யாப்புறுத்த என்மனத்தைத் துடிக்க வைத்தாள்;
எழிலெல்லாந் தன்னிடத்தே படைத்து வைத்துக்
காப்பளிப்பாள் செய்கின்ற செய்கை எல்லாம்
காதலுக்கோர் அறிவிப்பாம் என்று கண்டேன்.

செம்புலத்துப் பெயல்நீர்போல் இருவர் நெஞ்சும்
சேர்ந்தமையால் இல்லறத்துப் பள்ளி புக்கோம்
ஐம்புலத்தை ஒருபுலமே யாக்கி யங்கே
அளப்பரிய கலைபலவுங் கற்று வந்தோம்
அம்புவிக்கு விளக்காக விளங்குந் திங்கள்
அளவில்பல விண்மீன்கள் அகன்ற வானம்
எம்முளத்தில் புதியகதை பலவுஞ் சொல்ல
இணைகூற முடியாத உலகஞ் சென்றோம்!

கவியரசு முடியரசன்





# தமிழ்நாடு அரசின் கூட்டுத் துறையைச் சார்ந்த தொழிற்சாலைகள்!

— ஆர். எம். —

**(1) சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேசன் லிமிடெட்:—**

யூரியா, என்.பி.கே. கூட்டு உரம் போன்ற மிகத் தேவையான உரவகை உற்பத்தி செய்வதற்குக் கூட்டுத்துறையில் ஊக்குவிக்கப்பட்டுள்ளன. மிக முதன்மையான முக்கியத் தொழில் முயற்சிகளில் 'ஸ்பிக்' (SPIC) ஒன்ருகும். இத்திட்டத்தின் மூலதன முதலீடு ரூபாய் 90 கோடி அளவில் இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. தூத்துக்குடியில் நிறுவப்பட்டுள்ள இத்திட்டம் அதன் முதற்கட்டத்தில் நாளொன்றுக்கு 1,100 டன் அமோனியாவையும், நாளொன்றுக்கு 1,600 டன் யூரியாவையும், நாளொன்றுக்கு 600 டன் DAP/NPK உரங்களையும், நாளொன்றுக்கு 470 டன் கந்தக அமிலத்தையும், நாளொன்றுக்கு 165 டன் பாஸ்பாரிக் அமிலத்தையும் உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிறுவனம் இங்கிலாந்திலிருந்து தேவையான இயந்திரங்களைத் தருவித்ததில் சில இடர்ப்பாடுகளை ஏற்க நேரிட்டது. இதன் காரணமாக இத்திட்டம் கால அட்டவணைப்படி உற்பத்தியைத் தொடங்க இயலவில்லை. இந்த இடர்பாடுகள் இப்பொழுது இந் நிறுவன நிருவாகிகளால் தீர்க்கப்பட்டுவிட்டன. 1975 ஜூன் மாதத்தில் யூரியா உற்பத்தியைத் துவங்கிய இத் திட்டம் இவ்வாண்டு செப்டம்பர் மாதத்தில் கூட்டு உர உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் உரவகைகளில் 60 சத அளவு தமிழ் நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக வழங்கப்படும். இத்திட்டம் ஏறத்தாழ 1,200 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

**(2) தூத்துக்குடி ஆல்கலி கெமிகல்ஸ் லிமிடெட்:—**

இந்த நிறுவனம் தூத்துக்குடி கடற்கரைப் பகுதிகளிலிருந்து கிடைக்கும் உப்பையும், 'ஸ்பிக்' நிறுவனத்திலிருந்து உபரியாகக் கிடைக்கும் அமோனியாவையும் பயன்படுத்தி சோடா ஆஷ், அமோனியம் குளோரைடு ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்காக 'டிட்கோ', 'ஸ்பிக்' ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகப் பதிவு செய்து நிறுவப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 70,000 டன் சோடா ஆஷ், 70,000 டன் அமோனியம் குளோரைடு ஆகியவற்றை உற்பத்தி செய்யும். மற்றும், இது ஆண்டொன்றுக்கு 5,000 டன் மெலாமைன் ( Melamine ), ஆண்டொன்றுக்கு 1,200 டன் எல்-லைசின் (L. Lysine) ஆகியவற்றையும் கூடுதலாக உற்பத்தி செய்யும் எனக் கருதப்படுகிறது. சோடா ஆஷ், அமோனியம் குளோரைடு ஆகியவற்றிற்காக மொத்த திட்ட செலவு ரூபாய் 28.80 கோடி என்று மதிப்பிடப்படுகிறது. இதில் வட்டி இல்லாத மூலதனம் ஏறத்தாழ ரூபாய் 10 கோடியாகும். இத்திட்டம் தூத்துக்குடியில் 'ஸ்பிக்' தொழிற்சாலைக்குப் பக்கத்தில் நிறுவப்படும். சோடா ஆஷ், அமோனியம் குளோரைடு ஆகியவற்றிற்காக ஜப்பானிலுள்ள திருவாளர்கள் ஹித்தாச்சி ஜோசன் என்கிற நிறுவனத்திடம் வெளிநாட்டுத் தொழில் நுட்ப உத்தியைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் முடிவு செய்யப் பெற்றுள்ளது. இத்தொழிலுக்கான வெளிநாட்டு உடனுழைப்புச் செயற்குறிப்புகளுக்கு இந்திய அரசு ஏற்பளிப்பு வழங்கிவிட்டது. இத்தொழிற்சாலை 1977-78-இல் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது ஏறத்தாழ 600 பேருக்கு வேலை வர்ய்ப்பு அளிக்கும்.

**(3) தமிழ்நாடு கெமிக்கல் பிராடக்ட்ஸ் லிமிடெட்:—**

இராமநாதபுர மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள கழனிவாசல் கிராமத்தில் ஆண்டொன்றுக்கு 3,300 டன் சோடியம் ஹைட்ரோ ஸல்பைட்டை இந்நிறுவனம் உற்பத்தி செய்யும். இந்த இரசாயனப் பொருள் பஞ்சாலைத் தொழிலுக்குத் தேவையான 'வாட்' (Vat) சாயங்களில் பயன்படுத்துவதற்காகத் தேவைப்படுகிறது. துத்தநாகத்தைப் பயன்படுத்தாமல் சோடியம் ஹைட்ரோ ஸல்பைட்டை உற்பத்தி செய்யும் இந்தியாவிலுள்ள முதல் தொழிற்சாலை இதுவாகவே இருக்கும். இதன் விளைவாக அந்நியச் செலாவணி பெரிதும் மிச்சப்படும். ஜப்பானிலுள்ள திருவாளர்கள் மிட்சுபிஷி கார்ப்பரேஷன் என்கிற நிறுவனத்துடன் வெளிநாட்டு உடனுழைப்பு ஏற்பாட்டிற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 1.30 கோடியாகும். திருவாளர்கள் 'டேவி பவர்காஸ் லிமிடெட்' நிறுவனத்தினர், விரிவான பொறியியல் பணிகளை மேற்

கொள்ளுமாறு நியமிக்கப்பட்டுள்ளனர். கருவிகள் பெறுவதற்கான ஆணைகள் அனுப்பப்பட்டு விட்டன. நிதி உதவும் நிறுவனங்கள் தவணைக் கடன்களுக்கு ஒப்பளிப்பு வழங்கி விட்டன. இந்த நிறுவனத்தின் வட்டி இல்லாப் பங்கு மூலதனம், முன்னுரிமைப் பங்கு மூலதனம் ஆகியவற்றிற்கும் இவை உத்திரவாதம் அளித்துள்ளது. இந்தத் தொழிற்சாலை, 1976 பிப்ரவரியில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏறத்தாழ 500 பேருக்கு இது வேலை வாய்ப்பு அளிக்கும்.



### (4) தமிழ்நாடு ரப்பர் லிமிடெட்:—

டயர்கள், ட்யூப்புகள் உற்பத்தி செய்வதற்கான பெரிய கூட்டுத்துறைத் திட்டங்களில் இது ஒன்றாகும். இத் தொழிற்சாலையின் திறனளவு ஆண்டொன்றுக்கு டயர்கள், ட்யூப்புகள் ஒவ்வொன்றிலும் 4 இலட்சம் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாகும். இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்திலுள்ள காரியூர் கிராமத்தில் இத் தொழிற்சாலை நிறுவப்படுகிறது. இப்பகுதி தொழிற்துறையில் பின்தங்கியதாகும். அமெரிக்காவிலுள்ள 'ஜெனரல் டயர்ஸ் இன்டர்நேஷனல் கம்பெனி' என்கிற புகழ்பெற்ற வெளிநாட்டு நிறுவனத்துடன் தொழில்நுட்ப உடனுழைப்பு உடன்பாடு செய்துகொண்டு இத்தொழிற்சாலை 1976-77-ல் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 25.50 கோடியாகும் என்று மதிப்பிடப்படுகிறது. இதில் வட்டி இல்லா மூலதனம் ரூபாய் 8.50 கோடியாகும். இந்திய அரசு மூலதன சரக்குகள் விண்ணப்பத்திற்கும் ஏற்கெனவே ஒப்புதல் அளித்துவிட்டது. ரூபாய் 6.20 கோடி மதிப்பிற்கு மூலதனச் சரக்குகளை இறக்குமதி செய்வது பற்றி முடிவு செய்யப்பட்டு வருகிறது. உள்நாட்டு இயந்திரங்கள் நீண்டநாள் அடிப்படையில் ஒப்படை தர வேண்டி இருந்ததால், அத்தகைய பலவகை இயந்திரங்களுக்கும் ஆணைகள் அனுப்பப்பட்டு விட்டன. நிதி உதவி பெறுவதற்காக கடன் வழங்கும் நிறுவனங்களிடம் ஏற்கனவே இந்த நிறுவனம் தேவையான மனுக்களைத் தாக்கல் செய்துள்ளது. அனுமதிக் கடிதம் தொழில் உரிமமாக மாற்றப்பட்டு விட்டது. இத்திட்டம் ஏறத்தாழ 800 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

### (5) தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட்:-

இந்த நிறுவனம் வடஆர்க்காடு மாவட்டம் இராணிப்பேட்டை தொழிற்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ளது. தென் இந்தியாவில் உள்ள சாயத் தொழிற்சாலைகளில் ஆண்டொன்றுக்கு மிகுதியாகத் தேவைப்படுகிற அடிப்படை குரோமியம் ஸல்பேட் சாயத்தூள் 3,300 டன்னும், சோடியம் 'டைக்ரோமேட்' 2,500 டன்னும், சோடியம் [illegible] 2,400 டன்னும் உற்பத்தி செய்யும். இத்திட்டத்தின் மூலதனச் செலவு ஏறத்தாழ ரூபாய் 154 இலட்சம். இதற்கு வெளிநாட்டு உடனுழைப்புத் தேவையில்லை. இதற்குத் தேவையான மூலப்பொருட்களும் உள்நாட்டிலேயே கிடைக்கின்றன. இத்தொழிற்சாலை பெரும்பாலும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. இது விரைவில் உற்பத்தியைத் தொடங்கும். ஏறத்தாழ 500 பேருக்கு இது வேலை வாய்ப்பு அளிக்கும்.

### (6) பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட்:—

ஆண்டொன்றுக்கு 1,825 டன் பொட்டாஷியம் குளோரைடு உற்பத்தி செய்யும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்தில் உள்ள நரசிங்கம்பட்டி கிராமத்தில் இது அமைக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவு ரூபாய் 80 இலட்சமாகும். இந்நிறுவனத்தின் கட்டட வேலைகள் பெரும்பாலும் முடிவடைந்துவிட்டன. இதில் உற்பத்தி ஆகும் பொட்டாஷியம் குளோரேடு, இதற்கு அருகிலுள்ள பகுதிகளில் செயல்படும் எண்ணற்ற தீக்குச்சித் தொழிற்சாலைகளுக்குப் பெரிதும் தேவைப்படுகிறது. 1975 ஏப்ரல்திங்களுக்குள் இத்தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏறக்குறைய 200 பேருக்கு இதில் வேலைவாய்ப்பு கிட்டும்.

### (7) சதர்ன் போராக்ஸ் லிமிடெட்:-

இந்த நிறுவனம் ஆண்டொன்றுக்கு 15,000 டன் 'போராக்ஸ்'



3,000 டன் 'போரிக் அமிலம்' ஆகியவற்றை உற்பத்தி செய்யும். இவ்விரண்டும் கண்ணுடி உற்பத்தியிலும், மருந்துப் பொருள்கள் தொழிலிலும் பெரிதும் பயன்படுகின்றன. இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 94 இலட்சம் என்று மதிப்பிடப்படுகிறது. செங்கற்பட்டு ... மாவட்டம் சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தச்சூர் கிராமத்தில், இத்தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. கட்டட வேலைகள் நடந்தேறி வருகின்றன. 1975 ஜூலைத் திங்களில் இத்தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிட்டத்தட்ட 150 பேருக்கு இது வேலைவாய்ப்பு அளிக்கும்.

**(8) தமிழ்நாடு புளோரின் அண்டு அலைடு கெமிக்கல்ஸ் லிமிடெட்:-**

இந்நிறுவனம் தயாரிக்கவிருக்கும் பொருள் அலுமினியம் புளோரைடு ஆகும். இது அலுமினிய உற்பத்திக்குத் தேவைப்படுகிறது. இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 5.50 கோடியாகும். இராமநாதபுரம் மாவட்டம் மணலூர் கிராமத்தில் இத்தொழிற்சாலை நிறுவப்பட்டு வருகிறது. இப்பகுதி தொழில் துறையில் பின் தங்கிய பகுதியாகும். இத்தொழிற்சாலையின் ஆண்டு உற்பத்தி அளவு 6,000டன் ஆகும். ஸ்விட்சர்லாந்திலுள்ள திருவாளர்கள் ஏ.ஜி. பஸ் (Buss) நிறுவனத்தார் தொழில் நுட்ப அறிவுரையும், அடிப்படைப் பொறியியல் உதவிகளும் அளிப்பதாகச் சொன்னதன் பேரில் 1973 ஆகஸ்ட் திங்களில் எஃப். ஐ. பி. (FIB) மனு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இந்திய அரசின் ஏற்பளிப்பு எதிர்பார்க்கப்படுகிறது. திருவாளர்கள் 'இண்டஸ்ட்ரியல் அண்டு அக்ரிகல்சுரல் கன்சல்டன்ட்ஸ்' என்னும் நிறுவனம் இத்திட்டத்திற்கான இந்திய ஆலோசகர் ஆவர். 1977 ஏப்ரல் திங்களில் இத்திட்டம் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் சுமார் 300 பேருக்கு வேலைவாய்ப்பு கிட்டும்.

**(9) மிக நுண்ணிய அளவைக் கருவிகள் நிறுவனம்:—**

மைக்ரோ மீட்டர்கள், வெர்னியர் காலிப்பர்கள், டையல் கேஜிகள், ஸ்லிப் கேஜுகள், போர் கேஜுகள் (Bore gauges) போன்ற பொறியியல் துறைகளில் பயன்படுத்தும் மிக நுண்ணிய அளவைக் கருவிகளை (Fine measure Instrument Ltd.) இந்நிறுவனம் உற்பத்தி செய்யும். சென்னை அடையாற்றிலுள்ள 'இன்ஸ்ட்ரானிக்ஸ் கேம்பஸ்' வளவில் இத்தொழிற்சாலை அமைக்கப்படும். இதன் மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவு ரூபாய் 80 இலட்சமாகும். 1976 மார்ச் திங்களில் இத்தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, ஏறத்தாழ 100 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்.

**(10) தமிழ்நாடு தாதா பார் மாஸ்யூடிக்கல்ஸ் லிமிடெட்:—**

இம்மாநிலத்தில் மருந்து பொருள்கள் உற்பத்தித் தொழிலை மேம்படுத்தவும், தரமான மருந்துகளும், உயிர் காக்கும் மருந்துகளும் தொடர்ந்து கிடைத்து வரவும் 'டிட்கோ' நிறுவனம், மருந்துப் பொருள் உற்பத்தித் தொழிலில் புகழ்பெற்ற நிறுவனமான திருவாளர்கள் 'தாதா மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்கள் பிரைவேட் லிமிடெட்' என்கிற நிறுவனத்துடன் சேர்ந்து 1973, மே திங்களிலிருந்து இது உற்பத்தியைத் தொடங்கிற்று. செங்கற்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் இதன் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. இது 500 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது. இதன் செயல் முறைகளை விரிவாக்கவும், இடைப் பொருட்கள், அடிப்படை ரசாயனப் பொருட்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி பல வகை உற்பத்திப் பொருட்களை தயாரிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரிவுபடுத்தப்பட்ட திட்டத்தின் மொத்தச் செலவு ரூபாய் 3.20 கோடியாகும் என்று மதிப்பிடப்படுகிறது.

**(11) டைனுவிஷன் லிமிடெட்:—**

அடையாற்றிலுள்ள 'இன்ஸ்ட்ரானிக்ஸ் கேம்பஸ்' வளவில் டைனுவிஷன் லிமிடெட் (Dynavision Ltd.) நிறுவனம் அமைந்துள்ளது. ஆண்டொன்றுக்கு 10,000 டெலிவிஷன் பெட்டிகளை இது உற்பத்தி செய்யும். இத்திட்டத்தின் மொத்தச் செலவுரூபாய் 96 இலட்சமாகும். இத்திட்டத்திற்கான மூலதனச் சரக்குகள் விண்ணப்பத்திற்கு இந்திய அரசு ஏற்பளிப்பு வழங்கிவிட்டது. இயந்திரத் துணைப் பகுதிகளுக்கான உத்தரவுகள் அனுப்பப்பட்டுவிட்டன. மாதிரி டெலிவிஷன் பெட்டி முடிவு செய்யப்பட்டு, சோதனை அடிப்படையில் டெலிவிஷன் பெட்டிகளை உற்பத்தி செய்ய இந்நிறுவனம் தொடங்கிவிட்டது. 1975 ஏப்ரல் திங்களில் வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. சுமார் 80 பேருக்கு வேலைவாய்ப்பு கிட்டியுள்ளது.



**(12) தமிழ்நாடு இன்டர்நேஷனல் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட்:—**

அதிக 'வோல்டேஜ்' மின் அழுத்தம் வழங்குமானிகள், மின்மாற்றிகள், அச்சு மின் ஒட்டங்கள் (Printed circuits) கம்பாஸிடர்கள், பிற மின் அணுச்சாதனங்கள், துணைக் கருவிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்காக முழு அளவுக்கும் ஏற்றுமதிப் பாங்குள்ள இந்நிறுவனம் அமைக்கப்பட்டது. தருமபுரி மாவட்டம் ஒசூருக்கு அருகில் இது அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதி தொழில்துறையில் பின் தங்கிய பகுதியாகும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 2 கோடியாகும். தொழில் நுட்ப அறிவுரை, அடிப்படைப் பொறியியல் இயந்திரங்கள், கருவிகள் வழங்குதல் போன்றவற்றிற்காக 'F I B' மனு இந்திய அரசிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை 1976 டிசம்பர் திங்களில் உற்பத்தியைத் தொடங்கும். கிட்டத்தட்ட 200 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

**(13) மார்த்தி க்ரிஸ்டல்சால்ட் கம்பெனி லிமிடெட்:—**

மிக நவீன இயந்திரத் தளவாடங்களைப் பயன்படுத்தி ஆண்டொன்றுக்கு 1,20,000 டன் தொழில் உப்பு தயாரிக்கவிருக்கும் இத்தொழிற்சாலை, இவ்வகையில் இந்நாட்டிலுள்ள முதல் தொழிற்சாலையாக அமையும். இத்தொழில் மிக விஞ்ஞான முறையிலும், பொருளதார ரீதியில் ஆதாயம் தரும் வகையிலும் அமைவதற்காக இதனுடன் இரசாயனப் பொருட்கள் உற்பத்திக்கான தொழிற்சாலை ஒன்றும் இணைக்கப்படும். இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 60 இலட்சமாகும் என்று மதிப்பிடப்படுகிறது. இதன் கட்டட வேலைகள் நடந்தேறி வருகின்றன. பெரும்பாலான இயந்திரங்களை அனுப்பும்படி ஆணைகள் அனுப்பப்பட்டுவிட்டன. 1975 மே திங்களில் இது உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 100 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். செங்கற்பட்டு மாவட்டம் கோவளம் பகுதியில் 4,000 ஏக்கர் பரப்பளவில் இது அமைந்துள்ளது.

**(14) ஆசியா புகையிலை நிறுவனம லிமிடெட்:—**

ஆண்டொன்றுக்கு 450 கோடி சிகரெட்டுகளைத் தயாரிப்பதற்காக இந்நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவு ரூபாய் 2.50 கோடியாகும். தொழில் துறையில் பின்தங்கிய பகுதியான தருமபுரி மாவட்டத்தில் ஒசூருக்கு அருகில் இத்திட்டம் அமைக்கப்படும். இத்திட்டத்தை நிறுவுவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் அனைத்தையும் இந்நிறுவனம் இறுதி செய்துவிட்டது. 1975 மே திங்களில் இது உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏறத்தாழ 400 பேருக்கு இது வேலைவாய்ப்பு அளிக்கும். தவிர இதன் அண்டைப் பகுதிகளில் புகையிலைச் சாகுபடிக்கும் பெரும் ஊக்கம் அளிக்கும்.

**(15) கடல் சார்ந்த பெரும் இழுபடகு கட்டும் தளம், மண்டபம் லிமிடெட்:—**

இப்போது ஆழ்கடலிலும், தொலைகடலிலும் சென்று மீன் பிடிக்க மீன்பிடி கப்பல்கள் போதிய அளவில் கிடைப்பதில்லை. மீன்பிடி தொழில் மேம்பாட்டிற்கு இது பெரிதும் தடையாய் உள்ளது. இந்த இடைவெளியை நிரப்புவதற்காக இக்கூட்டுத்துறை நிறுவனம் உருவாவதற்கு ஊக்கமளிக்கப் பட்டுள்ளது. உருக்கிலேயே கட்டப்பட்ட நடுத்தர அளவுள்ள மீன்பிடி இழுபடகுகள் ஆண்டொன்றுக்கு 16 படகுகளைக் கட்டுவதற்கு இதில் வகை செய்யப்பட்டுள்ளது. மண்டபத்தில் உள்ள படகுத்துறை வசதிகள், கடற்கரையிலிருந்து படகுகள் உட்செல்லும் வசதிகள், கெய்ஸன் வாயில் (Caissen gate) வசதி, தொழிற்பட்டறை வசதி போன்ற பல அடிப்படை வசதிகளை இந்நிறுவனம் பயன்படுத்திக் கொள்ளும். இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 80 இலட்சமாகும் என்று மதிப்பிடப்படுகிறது. இது ஏறத்தாழ 300 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். 1976-77 இல் இழுபடகுகள் கட்டும் பணி தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(16) தமிழ்நாடு ஆல்கலைன் பாட்டரீஸ் லிமிடெட்:—**

இளம் தொழில்நுட்ப வல்லுநர்களைச் சேர்த்துக் கொண்டு கூட்டுத்துறையில் இந்நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. சின்டர்ட் பிளேட் (Cintered Plate), வென்டட் மின்கலங்கள் (Vented cells) பாக்கெட் பிளேட், பித்தான் வகை மின்கலன்கள், உருளை வகை மின்கலன்கள் போன்ற எல்லா வகை நிக்கல் காட்மியம் மின்கலன்களைத் தயாரிப்பதற்காக காரைக்குடியிலுள்ள மின்-ரசாயன ஆராய்ச்சி நிலையத்தின் உதவியுடன் மேற்சொன்ன தொழில் நுட்ப வல்லுநர்கள் உள்நாட்டு வணிக ரீதியிலான செய்முறை ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்கள். இத்தகைய மின் கலங்கள் பாதுகாப்புத்துறை, ரயில்வேத்துறை, பிற நுகர் பொருள் துறைகளுக்குத் தேவைப்படுகின்றன. 50 இலட்சம் மின்கலங்கள் உற்பத்தி செய்யும் திறனளவைப் பெற்ற இத்திட்டம் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் நிறுவப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 1.65 கோடி அளவில் மதிப்பிடப்படுகிறது. இத்திட்டம் 1975 ஜூலைத் திங்களில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது ஏறத்தாழ 250 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்.



**(17) ஏஷியன் பேரிங்ஸ் லிமிடெட்:-**

இந்நாட்டில் பொறியியல் தொழில்களில் பெரிதும் தேவைப்படுகிற பால்பேரிங்குகள் (Ball bearings) உருளை ரோலர் பேரிங்குகள், ஊசி ரோலர் பேரிங்குகள், கோள ரோலர் பேரிங்குகள் போன்ற பற்பல வகையான 50 இலட்சம் பேரிங்குகளை இந்நிறுவனம் உற்பத்தி செய்யும். இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 10 கோடியாகும். தருமபுரி மாவட்டம் ஒசூருக்கு அருகில் இது அமைக்கப்படும். இதில் அமைப்பதில் வெளிநாட்டு தொழில்நுட்ப அறிவு பெறப்படும். சுமார் 1,100 பேருக்கு இது வேலைவாய்ப்பு அளிக்கும். 1977 ஏப்ரல் திங்களில் இது உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(18) அரக்கோணம் வார்பட கொல்லுலைத் தொழிற்சாலை:—**

'டிட்கோ', 'கே.சி.பி.' நிறுவனம் ஆகியவற்றின் கூட்டு முயற்சி இது. ஆண்டொன்றுக்கு 1,000 டன் வரை கனரக வார்ப்படங்களைத் தயாரிப்பதற்காக அரக்கோணத்திலுள்ள தமிழ்நாடு உருக்காலை நிறுவனத்தின் மின்ஒளி உலையில் கிடைக்கக்கூடிய உலோகத்தை உருக்கும் வசதியைப் பயன்படுத்திக் கொள்வதற்கு இந்நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 1 கோடியாகும். இந்நிறுவனம் சோதனை அடிப்படையில் கனரக வார்ப்படங்களை உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளது. இதில் ஏறத்தாழ 100 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

**(19) ஸ்டைரோ பிலிம்ஸ் லிமிடெட்:-**

இத்தொழிலை கூட்டுத்துறையில் மேம்படுத்துவதற்கான செயற்குறிப்பை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 1,000 டன் திறனளவு கொண்ட ஈரிருசுப் பாங்குள்ள பாலிஸ்டீரின் படச்சுருள்களை உற்பத்தி செய்வதற்கு திருவாளர்கள் 'இண்ஸ்ட்ரியல் கெமிக்கல்ஸ்' நிறுவனத்தைச் சேர்ந்த திரு. என். சங்கர் அவர்களுடன் சேர்ந்து இத்தொழில் மேம்படுத்தப்படும். ஸ்டைரோ பிலிம்ஸ் லிமிடெட் என்கிற பெயரில் இந்நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 1.70 கோடியாகும். அடையாறு 'இன்ஸ்ட்ரானிக்ஸ் கேம்பஸ்' வளவில் இத்தொழிற்சாலை அமையும். இத்திட்டத்திற்கான மூலதனச் சரக்குகள் மனுவிற்கு இந்திய அரசு ஏற்பளிப்பு வழங்கிவிட்டது. இந்நிறுவனம் நிதி உதவி பெறுவதற்காக கடன் வழங்கும் நிறுவனங்களை அணுகியுள்ளது. 1976 ஏப்ரல் திங்களுக்குள் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



**(20) இன்டர் காண்டினென்டல் லெதர்ஸ் லிமிடெட்:—**

கையுறைத்தோல், ஆடைகள் தோல், மேல் தோல், உட்புறத்தோல் போன்ற தோல் வகைகளை உற்பத்தி செய்வதற்கான முழு அளவு ஏற்றுமதிப் பாங்கு கொண்ட திட்டத்தை இந்நிறுவனம் செயல்படுத்தும். இது ஆண்டொன்றுக்கு 36.20 இலட்சம் சதுர அடி தோல் உற்பத்தி செய்யும் திறனளவைக் கொண்டிருக்கும். இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 155 இலட்சமாகும். இத்திட்டம், ருமேனியாவில் புக்காரஸ்டிலுள்ள திருவாளர்கள் 'லெதர் சென்ட்ரல்' என்கிற நிறுவனத்தின் தொழில்நுட்ப உடனுழைப்புடன் அமைக்கப்பட்டு வருகிறது. செயற்குறிப்புகளுக்கு இந்திய அரசு ஏற்பளிப்பு வழங்கிவிட்டது. 1976-77-ல் இத்தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏறத்தாழ 100 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

## சிறுதொழில்களைத் தொடங்குவதற்கான நடைமுறை

அரசு நிருவாகச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பரிவுரையின்பேரில், சிறுதொழில்களைத் தொடங்குவதற்கான நடைமுறை எளிதாக்கப்பட்டுள்ளது. அதன்படி, தற்போது தொழில் முனைவோர், தங்கள் பகுதியைச் சார்ந்த தொழில் வணிகத்துறை உதவி இயக்குநர் அவர்களை மட்டும் அணுகினால் போதுமானது. அவர், தொழில்முனைவோர் சார்பில் மற்ற எல்லா அலுவலர்களுடனும் தொடர்புகொண்டு தேவையான அனுமதியைப் பெற்றுத் தருவார்.

# மின்சார, மின்னணுத் தொழில்களின் வளர்ச்சி!

தமிழ்நாட்டில் மின்சார, மின்னணுத் தொழில்களின் வளர்ச்சிக்குப் பெரும் வாய்ப்புள்ளதால் தொழில் -வணிக இயக்குநர் அலுவலகத்தில் 1-12-1972 முதல் செயல்பட்டு வரும், மின்சார மின்னணுப் பிரிவு இம்மாநிலத்தில் மின்சார மின்னணுத் தொழில் மேம்பாடு தொடர்பான பணிகள் அனைத்தையும் கவனிக்கிறது. மின்சார, மின்னணுத் தொழில் பிரிவு அடைந்த முன்னேற்றத்தின் முக்கியமான கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**குறிப்பிட்ட தொழில்களுக்கான தொழில் பேட்டைகள் : (அ) மின்சாரக் கருவிகள், பேட்டை-** பதினான்கு தொழிற்சாலைகளுடன் காக்கலூரில் அமைக்கப்பட்ட மின்சாரக் கருவிகளுக்கு உரித்தான தொழில்பேட்டை, மின்னணுக் கருவிகளுக்கு வேண்டிய உலோக ஆக்ஸைடுரெஸிஸ்டர்கள், பாலிஸ்டர், கபாஸிட்டர்கள், மின்கம்பித் துணைச் சாதனங்கள், மின்கம்பிக் காப்புறைப் பொருட்கள், ‘ஸிவிட்சிகியர்’ ஆகியவற்றை உற்பத்தி செய்து, மிகவும் திறம்படச் செயல்பட்டு வருகிறது. இது 100 பேருக்கு நேரடியாகவும், 200 பேருக்கு மேல் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு அளித்து வருகிறது. ஆண்டொன்றுக்கு மொத்த வியாபாரத் தொகை ரூபாய் 8.00இலட்சமாக இருந்து வந்துள்ளது. அடுத்த இரு ஆண்டுகளுக்குள் இது ரூபாய் 35 இலட்சமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**(ஆ) இன்ஸ்ட்ரானிக்ஸ் எஸ்டேட் அடையாறு:** மின்கருவிகள், மின்னணுக் கருவிகள் தயாரிக்கும் விக்ரம் சாராபாய்தொழில் பேட்டை தொழில் நுட்ப வல்லுநர்களுக்காக முதல் கட்டத்தில் 37 தொழிற்சாலைகளைக் கொண்டு செயல்படத் தொடங்கியுள்ளது. இரு கட்டங்களுக்குமாக இந்த தொழிற்பேட்டையின் மொத்த முதலீடு ரூபாய் 45 இலட்சமாகும். முடிவாக நன்கு அமைந்த மின்னணு மின்கருவித்தொழிற்சாலைகள் 65-ஐ இந்தத் தொழில்பேட்டை கொண்டிருக்கும்.

இந்தத் தொழில்பேட்டையில் உள்ள தனியார் தொழிற்சாலைகள் நவீன ‘‘பிராசஸ் கண்ட்ரோல்கள்’’, டெலிவிஷன் பெட்டிகளுக்கு வேண்டிய ‘டிஃப்ளக்ஷன்’ கருவிகள், வீனியாரிடி கண்ட்ரோல்கள், தொழில் சார்ந்த வெப்பமானிகள், பொடி மின்குமிழ்கள், கார் வானொலிப் பெட்டிகள், சிறப்பு மின் அணுக் கருவிகள் கண்ணாடிக் கருவிகள் முதலியவற்றை இப்போது தயாரித்து வருகின்றன. கார் வானொலிப் பெட்டிகள் இங்கிலாந்துக்கும் ஏனைய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

இந்தத் தொழிற்சாலைகள் 300 பேர்களுக்கு நேரடியாகவும், 1,000-க்கும் அதிகமான பேர்களுக்கு மறைமுகமாகவும்வேலையளித்து வருகின்றன. அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் இத்தொழிற்சாலைகள் 1,500 பேருக்கு நேரடியாகவும், 3,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பளிக்கும் வளம் பெற்றிருக்கும்.

**2. கருவிகளைச் சோதித்துப் பார்க்கும் வசதிகள்**

காக்கலூரில் அமைக்கப்பட்ட மத்திய மின்கருவிச் சோதனை ஆய்வுக்கூடம் செயல்படத்தொடங்கி, மின்கருவிகள், பாகங்கள், கூட்டமைப்புகள், அமைப்புகள் ஆகியவைகளின் தயாரிப்புக்குப் பிறகு சோதித்து சரிபார்க்கும் வசதிகளை அளித்து வருகிறது.

இந்த ஆய்வுக் கூடத்தை சோதனை சான்றுகள் வழங்கும் நிறுவனமாக இந்தியத் தர நிறுவனம் ஏற்றுள்ளது. மின்சாரத் தொழிலுக்குக் குறிப்பாக சிறு தொழிலுக்கு இந்த ஆய்வுக் கூடம் மிகவும் பயனுள்ளதாக உள்ளன.

அடையாறில், ரூபாய் 35 இலட்சம் செலவில் சோதனையிடல்-சான்றளித்தல்-பொருள் வளர்ச்சிக்குரிய மைய ஆய்வுக் கூடம் (Central Testing Certification and Product Development Laboratory) ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. இதில் ரூபாய் 14.83 இலட்சம், தனிச் சோதனைக் கருவிகளை வாங்குவதற்காக இந்தியா அரசின் மின்னணுவியல் துறையிடமிருந்து மானியமாகப் பெறப்பட வேண்டும். மின்னணுவியல் கருவிகள், பாகங்கள், மனமகிழ் சாதனங்கள் (Entertainment Equipment) ஆகியவற்றைச் சோதனை செய்வதற்கான வசதிகளுடன் அடையாறில் உள்ள டாக்டர் விக்ரம் சாராபாய் இன்ஸ்டிரானிக்ஸ் எஸ்டேட்டில் இந்த ஆய்வுக்கூடத்திற்கான முதல் நிலைப் பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. பொருள் வளர்ச்சி ஆலோசனை பரிசோதனைக்கான இயங்கும் ஆய்வுக்கூட வசதிகள் ஆகியவை இந்த ஆய்வுக்கூடத்தில் உள்ளன. இது 1975-ஆம் ஆண்டு மத்தியில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தகுதி பெற்ற 75 பொறியாளர்களுக்கும், கைவினைஞர்களுக்கும் நேரடியாக வேலை அளிப்பதோடு மின்னணுத் தொழிலுக்கும் குறிப்பாக சிறு தொழிலுக்கு சோதனை —வளர்ச்சி வசதிகளை அளிக்கும்.

**3. மின் மருத்துவச் சாதனங்களுக்கான செப்பனிடு நிலையம்.**

கிண்டியில் மின் மருத்துவச் சாதனங்களைச் செப்பனிடுவதற்காக ரூபாய் 16 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட மத்தியக் குழுவும், தஞ்சை, மதுரை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட துணைப் பிரிவுகளும், இம்மாநிலத்திலுள்ள மருத்துவ, கால்நடை மருத்துவ, ஏனைய நிறுவனங்களிலிருந்து வரப்பெற்ற மொத்தம் ரூபாய் 15.00 இலட்சம் மதிப்புடைய 16,000-க்கும் மேற்பட்ட சாதனங்களுக்கு மேல் இதுவரையில் பழுது பார்த்துச் செப்பனிட்டுக் கொடுத்துள்ளன. இம்மூன்று

தொழிற்சாலைகளும் ஓரளவு ஆதாயம் பெற்று பணிகளை அவ்வப்போது, உடனுக்குடன் செவ்வனே நிறைவேற்றுகின்றன என்ற புகழ்பெற்றுள்ளன.

**4. மின்சார, மின்னணுத் தொழிலுக்கான தகவல் பிரிவு:**

மின்னணுத் தொழில் குறித்த தகவல் அளிக்கும் நிலையமாக பணி புரியும் நோக்குடன் இம் மாநிலத்தில் உள்ள மின்சார மின்னணுக் கருவிகள் தொழில் குறித்த தகவலைச் சேகரிப்பதற்கான தகவல் பிரிவு ஒன்று, கருவிகள் தொழிற்பேட்டையில் அமைக்கப்பட்டு வருகிறது. எல்லா பிரிவுகளிலும் உள்ள 1000-க்கும் மேற்பட்ட பிரிவுகளிலிருந்து ஏற்கெனவே தகவல் சேகரிக்கப்பட்டுள்ளது. இத்தகவலைப் பரப்புவதற்காக, அவை தொகுக்கப்பட்டு வருகின்றன.

நவீன தொழில் நுட்ப உத்திகள், பொருள் வளர்ச்சி, நடைமுறை அலுவல்கள் ஆகியவை குறித்த தகவலைச் சேகரித்து வழங்குவதில் மின்னணுவியல் குழு உயர் தொழில் நுட்ப நிறுவனங்கள், தேசீய ஆய்வுக்கூடங்கள், நிதி வழங்கல் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

**5. புதிதாக அனுமதிக்கப்பட்ட திட்டங்கள்**

(1) துணைத் தொழில் பேட்டை, சென்னை ஃடிரான்ஸ்பார்மர், ஸ்விச்கியர் போன்றவற்றிக்குத் தேவைப்படும் துணைப் பிரிவுகளும், துணைக் கட்டுமான ஏற்பாடுகள், கருவிகள் போன்ற துணைப் பகுதிகளைத் தயாரிப்பதற்கான தனித் தொழிற்பேட்டை ஒன்று பலகைவாரவதிக்கருகே- கருவிகள் தொழிற்பேட்டைக் கருகாமையில் — அமைக்கப்பட்டு வருகிறது. அங்கு 8 பிரிவுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொழிற் பேட்டைக்கான தொடக்கப் பணி விரைவாக நடந்தேறி வருகிறது.

(2) சென்னைக்கருகே மின்சார மின்னணுவியல் கருவிகள் தொழிற்சாலைக்கான மேம்பாடுப்படுத்தப்பட்ட மனைகள் தொழிற்பேட்டை:- மின்சாரப் பொருள்கள், மின்னணுவியல் கருவிகள், ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்காக சென்னை, மகாபலிபுரம் சாலையில் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் மின்சார, மின்னணுவியல் கருவிகள் தொழிற்சாலைக்கான தனிப்பட்ட மேம்படுத்தப்பட்ட தொழிற்பேட்டை, ஒன்றை ஏற்படுத்துவது குறித்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. செப்பனிடு பணி வசதிகளும் அளிக்கப்படும். நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வருவாய்த்துறை எடுத்து வருகிறது.

(3) மின்சாரப் பொருட்களைப் பயன்படுத்துவோர் தொழிற்பேட்டை திருச்சி:— மின்சாரப் பொருட்களைப் பயன் படுத்துவோருக்கான தொழிற்பேட்டை ஒன்றை திருச்சியில் அமைப்பதற்கான திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. துவாக்குடியில் உள்ள மேம்படுத்தப்பட்ட மனைகள் எஸ்டேட்டுக்குப் பக்கத்தில் இத்தொழிற் பேட்டையை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. முதல் நிலையில் ஐந்து பிரிவுகள் கட்டப்படும். மேற் கொண்டும் பிரிவுகள் கட்டும் பணி, தேவைகேற்ப கட்டப்படும். கட்டுமானப்பணிகள் 1975 டிசம்பரில் தொடங்கும். மின்சாரப் பொருட்கள், மின்னணுவியல் பொருள்கள், கருவிகள் ஆகியவற்றைத் தயாரிப்பதையும், கோப்பதையும் இத்தொழிற் பேட்டை ஊக்குவிக்கும்.

(4) மதுரையில் மின்னணுவியலுக்கான சோதனை, சான்றளிப்பு பொருள் வளர்ச்சிக்கான, ஆய்வுக்கூடம் ஏற்படுத்துதல்: — உற்பத்திக்குப் பின் சோதனை, சான்றளிப்பு, பொருள் வளர்ச்சி வசதிகளைத் தற்போதைய தரத்தையொட்டி அளிப்பதற்காக மதுரையில் ரூபாய் 7.25 இலட்சம் செலவில் மின்னணுவியலுக்கான, சோதனை, சான்றளிப்பு, பொருள் வளர்ச்சி ஆய்வுக் கூடம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

(5) மின்சார சிறப்புத் துணைப் பகுதிகள், கருவிகள், தொழிற்பேட்டை:— ஒசூர்: தொழில் துறையில் பின்தங்கிய பகுதியான ஒசூரில் மின்சார துணைப் பகுதிகள், கருவிகளுக்கான தனித் தொழிற் பேட்டை ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது. ஒசூர் பெங்களூருக்கு அருகே அமைந்திருப்பதால், இந்தியன் டெலிபோன் இன்டஸ்ட்ரீஸ், பாரத் எலக்ட்ரானிக் நிறுவனம், இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலை போன்ற பெரிய தொழிற்சாலைகளுக்கு வேண்டிய துணைப்பகுதிகளை அளிப்பதற்கு இங்கு துணைத் தொழில்களை ஆரம்பிக்க வாய்ப்புள்ளது. 5 ஏக்கர் பரப்பளவில் இத்தொழிற்பேட்டை அமைக்கப்படும்.

(6) மின்சார, மின்னணுவியல் தொழிற்பேட்டை, சேலம்:— சேலம் உருக்காலைத் திட்டத்தினுல் உருவாகக்கூடிய தொழில் வளத்தைக் கருத்திற் கொண்டு சேலத்தில், மின்சார மின்னணுவியல் தொழிற் பேட்டை ஒன்று நிறுவுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. தொழிற்துறையில் பின்தங்கிய பகுதியான சேலத்தில் தொழில் வளம் உருவாக்க இது பெரிதும் உதவும். இத்தொழிற் பேட்டையை சேலம் உருக்காலைத் தொகுதியின் அருகே அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. தொடக்கத்தில் இத்தொழிற் பேட்டையில் சுமார் 15 தொழிற்சாலைகள் இருக்கும்.

(7) கோயம்புத்தூர், மின் மருத்துவச் சாதனத்திற்காக செப்பனிடுதல்—பணி துணை நிலையம்.

கோயம்புத்தூர், சேலம், நீலகிரி மாவட்டங்களில் மருத்துவ, கால் நடை, ஏனைய நிறுவனங்களின் மின் மருத்துவச் சாதனங்களைச் செப்பனிடுதலுக்காக மின்மருத்துவச் சாதனைச் செப்பனிடு துணை நிலையம் ஒன்று கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்குத் தேவையான சாதனங்களை வரவழைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**6. தமிழ்நாடு மின்னணுவியல் கழகம்**

இம்மாநிலத்தில் உள்ள மின்னணுவியல் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்குடன், புதிய கழகம் ஒன்றை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. மேற் சொன்ன மின்சார, மின்னணுவியல் பிரிவுகள் அனைத்தும் இக் கழகத்திற்கு மாற்றப்படும். இக்கழகம் தனக்கென்று புதிய பிரிவுகளையும் ஏற்படுத்துவதுடன், மின்னணுவியல் துறையில் உள்ள தனியார் தொழிற்சாலைகளுக்கும் உதவும். இக் கழகம் விரைவில் பதிவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்புறவுக்குப் பாலத்தை நாரணம் காட்டுகிறோம்.

காரணம், ஒன்றிலிருந்து ஒன்றை அடைந்திடப் பாலம் பெரிதும் உதவுவதுதான்.

நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு உறுதுணையாக விளங்குகின்ற வாணிபத்தின் வளர்ச்சிக்கும், நாடுகளின் உறவுக்கும், பயணிகளின் தொடர்புக்கும் பெரிதும் துணைபுரிவது போக்குவரத்தாகும். இவைகளில் சாலைப் போக்குவரத்து, கடல் போக்குவரத்து, ஆகாயப் போக்குவரத்து ஆகியவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம். சாலைப் போக்குவரத்து என்கின்றபோது பாலம் இன்றியமையாத ஒன்றாக இருக்கின்றது.

தேன்பாக்கத்தையும், தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள மரக்காணத்தையும் இணைக்கின்ற சாலையில்—கழிமுகத்தில் கட்டப்பெற்றுள்ளது. இச்சாலை கீழ்க்கடற்கரைச் சாலையின் ஒரு பகுதியாக அமைந்து உள்ளது.

கீழ்க்கடற்கரைச் சாலை நம் நாட்டினுடைய பாதுகாப்புக்கு முக்கிய உறுப்பாகக் கருதப்படுவதால் இதனைத் தேசிய நெடுஞ்சாலை அளவுக்கு மேம்பாடு செய்து பாலங்கள் கட்டுவதற்கென ரூபாய் 16 கோடிக்குத் திட்டம் வகுக்கப் பெற்று மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இச்சாலையின் மொத்த நீளம் ஏறத்தாழ 768 கிலோ மீட்டர்களாகும்.

நாதபுரம், கீழக்கரை, திருச்செந்தூர், கன்னியாகுமரி போன்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுடன் இணைக்கிறது. இத்தகு வரலாற்றுச் சிறப்புள்ள இடங்களையும், சுற்றுலாத் தலங்களையும் இணைப்பதால் ஏராளமான சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திட இச்சாலை பயன்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் தற்சமயம் இந்தச் சாலையில் சுமார் 261 இலட்சம் ரூபாய் செலவில் 40 பாலங்கள் பல்வேறு இடங்களில் கட்ட ஒப்புதல் பெறப்பட்டு, 33 வேலைகள் விரைவாக நிறைவேறி வருகின்றன. இங்குக் கட்டப்பெற்று உள்ள பாலங்களில் ''கலைஞர் கருணாநிதி பாலம்'' ஒன்றாகும்.




# இரு மாநிலங்களை இணைக்கும் இணையற்ற பாலம்

சாலைப் போக்குவரத்தில் தடங்கல் ஏற்படாமலிருக்கவும், இவைகளில் செல்லுகின்ற ஊர்திகள் சீராகச் சென்றிடவும் தேவைப்படுகின்ற இடங்களில் பாலங்களை உருவாக்கிட வேண்டும். இந்த வகையில் உருவாக்கப் பெற்றது தான் செங்கற்பட்டு மாவட்டம் தேன்பாக்கத்திலுள்ள 'கலைஞர் கருணாநிதி பாலம்'.

இந்தப் பாலம் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள

இச்சாலை கல்பாக்கம் அனல் மின் நிலையம், புதுவையிலுள்ள ஆரோவில் நகரம் ஆகியவைகளையும், கீழ்க்கடற்கரையின் துறைமுகங்களான பாண்டிச்சேரி, கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி போன்றவைகளையும் இணைத்து, வசதியான—துரிதமான கடல் போக்குவரத்துக்கு வழிகோலுகிறது. மேலும், இச்சாலை சென்னை மாநகரை மாமல்லபுரம், மரக்காணம், காரைக்கால், முத்துப்பேட்டை, தொண்டி, இராம

கழிமுகத்தில் கட்டப்பெற்று உள்ள இந்தப் பாலத்தின் முதன்மைப் பகுதி 8 மீட்டர் நீளமுள்ள 45 கண்கள் கொண்டது. தவிர அணுகுச் சாலையில் 8 மீட்டர் நீளங் கொண்ட இரண்டு கண் பாலமும் அமைக்கப்பெற்று உப்பளங்களுக்குத் தண்ணீர் செல்ல வசதி செய்து தரப்பட்டுள்ளது.

இப்பாலத்தின் மேல் தளம் 18 அங்குல சதுரமும், 53 அடி நீளமும் கொண்ட கான்கிரீட் தூண்களின் அடிப்படையினால்

தாங்கப்படுகிறது. மேல் தளம் கம்பிகளால்வலுவேற்றப்பட்ட கான்கிரீட் கலவையினுல் ஆன தாகும். இப் பாலத்தின் மீது 7.5 மீட்டர் அகலத்தில் இரண்டு வழித் தளங்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

இப்பாலத்தின் அணுகுச் சாலைகள் 1,341 மீட்டர் நீளம் கொண்டதாகும். இந்த அணுகுச் சாலைக்கு அப்பால் மரக்காணத்திற்குச் செல்லுகின்ற 2.7 கி.மீ. நீளமுள்ள சாலை மைய உப்பளத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் பகுதி வழியே செல்லுகிறது. இதனை நெடுஞ்சாலை அளவுக்கு உயர்த்த மைய அரசிடம் மாநில அரசு கேட்டு உள்ளது குறிப்பிடத் தக்கது.

இத்தகு சிறப்புக்கள் வாய்ந்த—முக்கியத்துவம் பெற்ற கலைஞர் கருணாநிதி பாலத்தினை உருவாக்கிட ரூபாய் 75 இலட்சம் செலவாகியுள்ளது.

வாணிபத்தின் வளர்ச்சிக்கும், பயணிகளின் வசதிக்கும் வழி செய்கின்ற இந்தப் பாலத்தினை 4—7—75-ஆம் நாளில் மேதகு தமிழக ஆளுநர் கே.கே. ஷா அவர்கள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் ப.உ. சண்முகம் அவர்களின் தலைமையில் திறந்து வைத்துப் பேசுகையில் ''வரலாற்று முக்கியத்துவம் உடையதாகவும் பொருளாதார மேம்பாட்டிற்கு உறுதுணையாக விளங்குகின்றதாகவும் உருவாக்கப்பெற்றுள்ளது இந்தப்பாலம். இந்தக் கிழக்கடற்கரைச் சாலை நாட்டின் பல முக்கியப் பகுதிகளை இணைப்பதாலும், நாட்டின் வணிக வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் பெரிதும் பயன்படுவதாலும் இங்குப் பாலம்அமைக்கப்பெற்றுள்ளது பெரிதும் பாராட்டத்தக்கது. அதிலும் இந்தப் பாலத்திற்குத் தமிழகத்தின்முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளது மிகவும் பொருத்தமானதாகும்' என்று குறிப்பிட்டார்கள்.

—ஆயிரம்

# தமிழ்நாட்டில் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி!

பல்வேறு வகைப்பட்ட சிறு தொழிற்சாலைகள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், கைவினைஞர்கள் ஆகியோரின் பயனுக்காகப் பல தொழில் கூட்டுறவுச் சங்கங்களை தொழில் வணிக இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்தி வருகிறது. தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் தொழிலாளர்கள் உறுப்பினர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளிப்பதற்கும் வாணிபத்தில் அவர்களது திறமையை வளர்ச்சியடையச் செய்வதற்கும் தொழில்-வணிக இயக்குநர் அலுவலகம் பல பயிற்சித் திட்டங்களை நடத்துகிறது. சிறு அளவில் தீக்குச்சி உற்பத்தி செய்வோர் பணிச் சங்கங்கள், சிறு அளவில் தேயிலை பயிரிடுவோருக்கான கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் போன்ற கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொடக்கச் சங்கங்கள், மத்திய சங்கங்கள், தலைமைச் சங்கங்கள் ஆகியவை ஏற்படுத்தப்பட்டன. இச்சங்கங்களுக்குக் கடன் உதவித் தொகை வடிவில் நிதி உதவி அளிக்கப்பட்டது. குறிப்பிட்ட காலத்துக்கு நிருவாகப் பணியாளர்கள், தொழில் நுட்பப் பணியாளர் ஆகியோரின் பணிகளும் இலவசமாக அளிக்கப்பட்டன. இங்சங்கங்களின் பங்கு மூலதனத்தில் மாநில அரசும் முதலீடு செய்துள்ளது. கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பொருள்களையும், மிகவும் அரிதாகக் கிடைக்கும் மூலப் பொருள்களையும் இச்சங்கங்களுக்கு வழங்கத் தொழில் - வணிக இயக்குநர் அலுவலகம் ஏற்பாடு செய்கிறது.

தற்போதுள்ள தொழிற் கூட்டுறவுகளைஒருங்கு திரட்டிச் சீரமைக்கும் பொருட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக இச்சங்கங்கள் பொதுவாகச் செயல்படும் நிலை ஆண்டுக்காண்டு படிப்படியாக மேம்பட்டு வந்துள்ளது. இதனை கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்.

| ஆண்டு | சங்கங்கள் எண்ணிக்கை | உற்பத்தி | விற்பனை | அவ்வாண்டில் இலாபத்தில் செயல்பட்ட சங்கங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1967—68 | 395 | 350.00 | 401.00 | 60 |
| 1968—69 | 367 | 358.00 | 414.00 | 96 |
| 1969—70 | 338 | 411.37 | 480.00 | 113 |
| 1970—71 | 337 | 578.51 | 564.38 | 125 |
| 1971—72 | 313 | 483.77 | 593.33 | 121 |
| 1972—73 | 325 | 451.36 | 548.76 | 143 |
| 1973—74 | 336 | 543.22 | 609.46 | 155 |



தமிழ்நாட்டில்

# பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் தொகுதிகளின் வளர்ச்சி!

பின்தங்கிய மாவட்டங்களில் தொழில்கள் தழைக்க வேண்டுமென்பதற்காக, பின்தங்கிய பகுதிகளைத் தொழில் தொகுதிகளாக (Industrial Complexes) உருவாக்கி விரிவுபடுத்தும் பேராவல் திட்டத்தைச் செயல்படுத்துவதில் 'சிப்காட்' முனைப்பாக உள்ளது. தற்பொழுது குறைந்த அளவில் உள்ள வசதிகளில் கணிசமாகப் பயன்களைப் பெற வேண்டுமெனில், பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் வளரும் வாய்ப்புடைய இடங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றில் தொழில் தொகுதிகளை உருவாக்கி விரிவுபடுத்தும் திட்டம் சிறந்தது என உணரப்பட்டது. ஆகவே 'சிப்காட்' பின்தங்கிய பகுதிகளை விரிவுபடுத்த, பொருத்தமான வழி வகைகளை வகுத்துள்ளது. தொழில் வாய்ப்புடைய இடங்களைத் தொழில் தொகுதிகளாக உருவாக்குவதற்குத் தேர்ந்தெடுத்தல், அவ்விடங்களில் பல்வேறு இன்றியமையா அடிப்படை வசதிகளைப் பெருக்குதல், குறிப்பிட்ட குறைந்த காலத்தில் தன்னைத் தானே விரிவுபடுத்திக் கொள்ளும் அளவுக்கு தொழில் தொகுதிகளில் வளரும் தொழிற்சாலைகளை அமைத்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கியமான அம்சங்களாகும். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் சில தொழில் வளரும் வாய்ப்புடைய தொகுதிகளைச் 'சிப்காட்' தேர்ந்தெடுத்திருக்கிறது.

### ஆனைக்காரன்பட்டியில் ஒரு தொழிற்பேட்டை

பின்தங்கிய பகுதிகளில் தொழில்தொகுதிகளை உருவாக்கும் முயற்சியில் முதற்கட்டமாக, 1972-73-ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆனைக்காரப்பட்டி என்னுமிடத்தில் ஒரு தனியார் தொழிற்பேட்டையை உருவாக்க மிகுந்த முயற்சியுடன் 'சிப்காட்' நிறுவனம் உதவி செய்து. அங்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு பெரிய இயந்திர தொழிற்சாலையும், 2 நடுத்தரப் பகுதிகளும், 16 சிறு தொழில் பகுதிகளும் 1973-இல் உற்பத்தியைத் துவங்கியுள்ளன. இந்தத் தொழில் பேட்டையில் சுமார் ரூபாய் 2.4 கோடி மூலதனம் போடப்பட்டு, 980 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டியுள்ளது.

### இராணிப்பேட்டை தொழில் தொகுதி

'சிப்காட்' நிறுவனத்தால் துவக்கப்பட்ட முதலாவது பெரிய தொழில் தொகுதி வட ஆர்க்காடு மாவட்டம் இராணிப்பேட்டையில் அமைந்துள்ளது. தொழில் பெருக்குவதற்குத் தேவையான பல்வேறு இன்றியமையா அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்கு திட்டமிடப்பட்டு, அவைகள் 712 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் இராணிப்பேட்டை தொழில் தொகுதியில் தொழில் நிறுவனங்கள் ஏற்படுத்த தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அவைகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும், ஆலோசனைகளையும், உதவியையும் 'சிப்காட்' நல்கியுள்ளது. இந்த முயற்சிகளின் பலனாய் விற்பனைக்குள்ள மொத்தம் 480 ஏக்கர் பகுதியில், 221.76 ஏக்கர் நிலம் 27 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளின் மின்சாரத் தேவையை நிறைவு செய்ய 110/11 கிலோ வாட் துணைமின் நிலையம் ஒன்றை அமைப்பதற்காக சிப்காட் விற்பனைக்குரிய 480 ஏக்கர் பரப்பில் 15 ஏக்கர் அளவுள்ள தனிப் பகுதியை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்கியுள்ளது. இந்தத் துணை நிலையம் அமைக்கப்பட்டு இந்த தொழில் தொகுதிக்கு மின்சாரம் கொடுக்கத் தயாராக உள்ளது.

இத்தொழில் தொகுதியை ஒட்டிய பகுதியில் 71 ஏக்கர் கொண்ட அடக்கப்பகுதி ஒன்று சிறுதொழில்களுக்குத் தேவையான கட்டடங்கள் அமைப்பதற்காக, ''சிட்கோ''விற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. முதலில் 12 தொழிற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, இரண்டாவது முறையாக மேலும் 25 தொழிற்





கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அவைகள் 'சிட்கோ' மூலம் சிறுதொழிற்சாலைகளுக்காக ஒதுக்கப்பட்டு வருகின்றன.

தொழில் தொகுதிகளில் அமையவிருக்கும் தொழில் பிரிவுகளின் பணியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் 25 ஏக்கர் பரப்புள்ள பகுதியில் வெவ்வேறு அளவில் வீடுகள் கட்டும் பணியை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மேற்கொண்டிருக்கிறது. தொழில் முனைவோர்களைக் கலந்தாலோசித்ததின் பேரில், இந்தப் பரப்பில் ஒரு பகுதியை மேம்பாடடையச் செய்து அதில் வீட்டுமனைகளைத் தொழில்முனைவோர்களுக்கும், அவர்களது அதிகாரிகளுக்கும் வீடுகட்டிக் கொடுப்பதற்காக ஒதுக்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. தொழில் தொகுதிக்கு எதிர்புறம் வீட்டு வசதி வாரியம், பணியாளர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டும் பணியைத் துவக்கியிருக்கிறது.

தொழில் தொகுதியை முறையாகத் தொடங்கி வைத்த பொழுதே பலவகை தொழில் பிரிவுகளும் தங்கள் துவக்கப் பணியை ஆரம்பித்ததால், மனைகள் ஒதுக்கப்பட்ட 27 தொழில் பிரிவுகளில் 7 பிரிவுகள் உற்பத்தித் தொடங்கியுள்ளன. மேலும் 7 பிரிவுகள் கட்டடங்கள் கட்டும் பலவித நிலைகளில் இருப்பதால் அவை 1975-76-ஆம் ஆண்டில் உற்பத்தியைத் துவக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மற்ற மனை ஒதுக்கப்பட்ட 13 தொழில்முனைவோர்கள் அவர்களுடைய தொழிற்சாலைகளுக்கு வரும் ஆண்டில் கட்டடங்கள் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். இந்த எல்லாப் பிரிவுகளும் உற்பத்தியைத் துவக்கினால் இவை ரூபாய் 25.00 கோடி முதலீடு செய்து 3,000 பேர்களுக்கு மேல் நேரிடையாக வேலை வாய்ப்பும், அநேகருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ஓசூர் தொழில் தொகுதி

இம்மாநிலத்திலும் பிற மாநிலங்களிலும் உள்ள

STATE INDUSTRIES PROMOTION CORPORATION OF TAMIL NADU LIMITED

தொழில் முனைவோர்களிடமிருந்து இராணிப்பேட்டையில் துவக்கப்பட்ட முதல் தொழில் தொகுதிக்குக் கிடைத்த உற்சாகமான ஆதரவினால் உந்தப்பட்டு, 1,257 ஏக்கர் பரப்பில் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஓசூர் அருகே ஒரு தொழில் தொகுதியைத் துவக்கிட 'சிப்காட்' திட்டமிட்டது. நில ஆர்ஜித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் இத்தொழில் தொகுதியில் அடிப்படை வசதிகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். பல்வேறு வசதிகளை அமைக்கும் முன்பே, அநேக தொழில் முனைவோர்கள் இந்த தொழில் தொகுதியில் தொழிற்சாலைகளை நிறுவத் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த தொழில் தொகுதியில் நிலங்கள் ஒதுக்குமாறு 47 மனுக்கள் இதுவரை வந்துள்ளன. இவர்களில் சில தொழில் முனைவோர்கள் அவர்களுடைய தொழிற்சாலைகளை இங்கு உருவாக்குவதில் பூர்வாங்கப்பணிகளை துவக்கியுள்ளனர்.

ஓசூர் தொழில் தொகுதியை உருவாக்க 2.3 கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டியிருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் பணிகள் யாவும் இரண்டு ஆண்டு காலத்தில் முடிவுபெறும்.

### மானாமதுரை தொழில் தொகுதி

'சிப்காட்' தனது மூன்றாவது தொழில் தொகுதியை இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மானாமதுரைக்கருகே நிறுவ திட்டமிட்டுள்ளது. 732 ஏக்கர் அரசின் நிலங்களையும், 112 ஏக்கர் தனியார் நிலங்களையும் நில ஆர்ஜிதம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இங்கு அடிப்படை வசதிகளை பெருக்குவதற்கான தொடக்கப்பணிகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்படும்.

### மறைமலை நகர் தொழில் தொகுதி

சென்னை பெருநகர வளர்ச்சி மன்றத்தினால் (Madras Metropolitan Development Authority) புதிதாக உருவாக்கப்படும் 'மறைமலை நகரத்தில்' தொழில் தொகுதி ஒன்றை நிறுவும் பொறுப்பு 'சிப்காட்' நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

### புதிய தொழில் தொகுதிகள்

தமிழ்நாடு அரசு, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இன்னும் மூன்று தொழில் அபிவிருத்தி தொகுதிகளை மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் நிறுவும்படி 'சிப்காட்'டிற்குப் பணித்துள்ளது. விரைவில்

இந்த மாவட்டங்களில் தொழில் வளரும் வாய்ப்புடைய இடங்களைத் தேர்ந்தெடுத்து ஒன்றன்பின் ஒன்றாக விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் அடங்கிய தொழிற்பேட்டை**

அம்பத்தூர், கிண்டி, மதுரை மேட்டூர் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு சுலபமாகப் பணம் செலுத்தும் வகையில் அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் அடிப்படை வசதிகளோடு கிடைக்கின்றன. 31-5-74 வரை இந்த அபிவிருத்தி செய்யப்பட்ட தொழிற்பேட்டைகளில் அபிவிருத்தி, பராமரிப்பு, மனைகள் ஒதுக்குதல் ஆகிய பணிகளை தொழில் வணிக இயக்குனர் கவனித்து வந்தார். 1.6.74 முதல் இந்த அபிவிருத்திச் செய்யப்பட்ட தொழிற்பேட்டைகளின் நிருவாகத்தை தமிழ்நாடு அரசு 'சிப்காட்' நிறுவனத்திடம் ஒப்படைத்தது. அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் ஒதுக்குவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| | அம்பத்தூர் | கிண்டி | மதுரை | மேட்டூர் | திருச்சி |
|---|---|---|---|---|---|
| நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட பரப்பு | 963 | 171 | 525 | 184 | 418 |
| விற்பனைக்குரிய பரப்பு | 773 | 80 | 188 | 118 | 359 |
| அரசினரால் (தொழில் வணிகத்துறையால் ஒதுக்கப்பட்ட பரப்பு) | 686 | 70 | 36 | 24 | 206 |
| 1-6-74 முதல் 31-1-75வரை 'சிப்காட்' நிறுவனத்தால் ஒதுக்கப்பட்ட பரப்பு | 14 | 1 | 12 | 1 | 6 |
| எஞ்சியுள்ள பரப்பு* | 73 | 9* | 140 | 93 | 1-47 |

*(தொழிற் நுட்ப பயிற்சியாளர்களுக்கு ஒதுக்கப்பட்டது)



அபிவிருத்தி செய்யப்பட்ட தொழிற்பேட்டையின் பராமரிப்பை 'சிப்காட்' எடுத்துக் கொண்டதன் பயனாக, இம் மாநிலத்தின் முக்கிய இடங்களில் அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் வழங்க முடிகிறது.


# Indco Brick

## வெங்கடாஜலப்புரம் அரிசன செங்கல் தொழிலாளர் குடிசைத் தொழிற் கூட்டுறவு சங்கம், இண்ட் No. 502

வெங்கடாஜலப்புரம், சொன்னைக்குடி (PO), லால்குடி தாலுக்கா,
திருச்சிராப்பள்ளி ஜில்லா.

எங்களிடம் தரமான செங்கற்கள் குறைந்த விலையில் கிடைக்கும். ஆர்டர்களுக்கு குறித்த நேரத்தில் செங்கல் கொடுக்கப்படும்.

எங்களிடம் கிடைக்கும் செங்கற்களின் விவரம் :

**தரைக் கற்கள்**

| | |
|---|---|
| $8\frac{3}{4}'' \times 4\frac{1}{4}'' \times 3''$ | $8\frac{3}{4}'' \times 4\frac{1}{4}'' \times 2''$ |
| 19 × 9 × 9 செ.மீ. | 19 × 9 × 5·7 செ.மீ. |
| ஒட்டுக் கல் | இதரக் கற்கள் (Half Bricks) |

அ. இராமகிருஷ்ணன், B.A., (Hons.)
உதவி இயக்குநர்/செயலர்.

வெ. ந. முத்தமிழ்செல்வன், M.L.A,
தலைவர்.

(இது தொழில் வணிகத்துறை இயக்குநரின் கீழ் இயங்கும் ஒரு தொழிற் கூட்டுறவுச் சங்கம்.)

இதோ, இந்தியாவின் பசுமைப் புரட்சிக்கு ஒரு விஞ்ஞானரீதியான துணை

# எக்ரோமின்®
## சிலேடெட் தாவர உணவு

**பயிர் விளைச்சலை 20% அல்லது அதற்கு மேலும் அதிகமாக்குகிறது.**



நீங்கள் ஒரே வாரத்தில் பயனைக் கண்கூடாகக் காணலாம்!




- எக்ரோமின், ஒரே சிலேடெட் தாவர உணவாகும், தண்ணீரில் கரைகிறது. கரைக்கும் மற்றும் பரப்பும் சாதனம் சுலபமாக கிரகிக்கப்பட உதவுகிறது
- எக்ரோமின் இலைத்தெளிப்பாகும். மற்ற எக்ரோ கெமிகல்களுடன் இதை உபயோகிக்கலாம்
- எக்ரோமின், தானியங்கள், எண்ணைவித்துக்கள், மசாலாப் பொருள்கள், இழைப் பயர்கள், பழங்கள் மற்றும் தோட்டப் பயிர்களுக்கென வெவ்வேறு அமைப்புகளில் கிலோ கிராம் பேக்குகளில் கிடைக்கிறது.

**எக்ரோமின்**

சிக்கனமாக பயிர் விளைச்சலை அதிகமாக்கும் சிலேடெட் தாவர உணவு.

Sms.1.(R)TM

® ரெஜிஸ்டர்ட் டிரேட் மார்க்



எக்ரோமின் பற்றிய அதிகப்படி விவரங்களை அறிய இந்த முகவரிக்கு எழுதவும்:
**ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் ப்ரை. லிட்.**
தபால் பெட்டி எண் 9417,
பம்பாய் 400 093.

**DISTRIBUTORS: VORION INDUSTRIES & CHEMICALS, 55/1, Mogapperi, Madras-600 050. S. L. N. S. AGENCIES, 19, Municipal Buildings, Srinivasa Park, Salem-636 002. INDOMAG CORPORATION, 3, Kollanpattarai Street, East Veli Street, Madras-1.**

# இராஜாஜி மண்டபத்தில் புதிய படங்கள்

— டாக்டர் ந. சஞ்சீவி —

இராசாசி மண்டபத்தில் 27—6—1975 அன்று திறக்கப்பட்ட புதிய படங்களின் திறப்பு விழா ஓசைப்படாப் புரட்சி—புரட்சி என்ற சொல்லுக்கே உண்மைப் பொருள்—உயர் பொருள்—புதுப் பொருள்—உணர்த்தும் புரட்சி.

தமிழ்த்தாய் நமது முதல்வர் கலைஞர் வாயிலாகப் புரட்சியினைச் செய்து கொள்ள வேண்டுமென்று இத்தனை ஆண்டுகளும் தவமிருந்தாள் போலும்!

நாம் உயிரினும் சிறப்புடையதாய்ப் போற்றும் தமிழினத்திற்கும் மகிழ்வு தரும் வகையில் செய்துள்ளார் என்பதை எண்ணும் பொழுது, உடம்பெல்லாம் உயிராகிறது. மாண்புமிகு கலைஞர் அவர்கள் பன்னிரண்டு படங்களைத் தேர்ந்தெடுத்துள்ள திறமும் அவற்றை எதிரெதிராக வைத்துள்ள அருமையும் எண்ணியெண்ணி அறிவு படைத்த ஒவ்வொரு தமிழனும் பெருமை கொள்ளத்தகும்.

| வலம் | இடம் |
|---|---|
| 1. பெரியார் | பாரதிதாசன் |
| 2. திருவள்ளுவர் | அவ்வையார் |
| 3. பாண்டியன் நெடுஞ்செழியன் | கரிகாற் சோழன் |
| 4. பாரதியார் | வ.உ.சி. |
| 5. சேரன் செங்குட்டுவன் | வீரபாண்டியக் கட்டபொம்மன் |
| 6. கம்பர் | இளங்கோவடிகள் |

இளங்கோவடிகள் இயற்கை முடியையும் செயற்கை அரசியல் முடியையும் துறந்து நிற்பதுடன் வாளையும் கீழே வைத்துவிட்டு நூலைக் கையில் ஏந்தி இன்றும் சேர நாட்டில் இலங்கும் உடையுடன் காட்சி தரும் வகையில் ஓவியம் தீட்டப்பட்டிருப்பது ஓவியருக்கும் உணர்வு கொடுத்த கலைஞர் கலைநயத்தைக் காட்டுவதாகும். சேரன் செங்குட்டுவன் இமயப் பகைப் புலத்தில் தோற்றத்துடனும் சீற்றத்துடனும் விளங்கும் காட்சி ஏற்றம் மிகுந்ததாகும். தந்தை பெரியாரின் மெய்ப்பாடும், புரட்சிக் கவிஞரின் பொலிவும் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன. எனவே அவற்றைப் பற்றிச் சுருக்கமான சில குறிப்புகள்.

ஒவ்வொரு படத்தின் அடியிலும் அப் படத்திற்கு உரியவரின் காலக் குறிப்பு இருப்பது போற்றத்தக்கது.

## பெரியார்

1. இராசாசி மண்டபத்தின் உள்ளே நுழையும்போது வலப் புறத்தில் முதல் படமாகத் தந்தை பெரியார் படம் இருப்பது தனிச் சிறப்பு. இப்படத்தில் கருஞ்சட்டைத் தலைவர் சிவப்பு நாற்காலியில் உட்காராமல் எழுந்து நின்று தன் வலக்கை ஐந்து விரல்களையும் குவித்துக் கொண்டு எதன் கழுத்தையோ பிடிப்பது போல் இருப்பது ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது. கருஞ்சட்டையின் மேல் தந்தை பெரியார் போர்த்தி இருக்கும் சந்தனச் சால்வை மாற்றுரிடம் அவர் காட்டிய நாகரிகப் பண்பாட்டின் நல்ல அறிகுறி!

## திருவள்ளுவர்

2. திருவள்ளுவரின் திருவுருவப் படத்தில் எவ்விதப் பின்னணியும் இல்லாமல் இருப்பதுதான் பெருமையினும் பெருமை. அவர்தான் பொதுமைப் பின்னணியின் புதுமைப் பாவலர் ஆயிற்றே! திருவள்ளுவர் மிதியடி கூட இல்லாமல் இருக்கும் எளிமையும், ஏடும் எழுத்தாணியும் கையில் இருந்தாலும் ஏட்டையும் கூட மறந்து எங்கோ வெட்ட வெளியில் தோன்றும் ஆழ்ந்த கருத்தை ஊடுருவி ஆராய்ந்து பார்க்கும் பார்வையுடன் நிற்பதும் நம் உள்ளத்தையே ஊடுருவுவது ஆகும். அப் பெருஞானியின் தலையைச் சுற்றிலும் ஒளி வட்டம் அமைந்திருப்பதும் ஓர்தற்கு உரியது.

## பாண்டியன் நெடுஞ்செழியன்

3. பாண்டியன் நெடுஞ்செழியன், நீதி மன்னன் நெடுஞ்செழியன் என்பது எல்லோரும் அறிந்ததே. இதை நினைவூட்டுவது போல் மீன்கள் மின்னும் அமைப்புகளுடன் மீனவன் அரியணையிலிருந்து அகலும் கருத்துடன் எழுந்து நிற்கும் காட்சி கருதத்தக்கது.

## பாரதியார்

4. தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார் குத்து மீசையுடனும் குறுகுறுப்புப் பார்

வையுடனும் இருப்பது இயற்கையாய் உள்ளது. இவர் இருக்கும் அறையின் ஓரத்தில் பழங்காலத் தூண் ஒன்று இருப்பது பார்க்கத் தக்கது. ஆம்; அக்கால மரத் தூண்களுக்கு அடியில் உரல் போன்ற கல் தாங்கிகள் இருக்கும் (கழுவிவிடும் தண்ணீரால் மரம் பழுது பட்டுப் போகாமல் இருக்கவும் தளத்தின் பாரத்தைத் தாங்கவும்). தேசியக் கவி பாரதி விரும்பியதாகக் குறிப்புகள் கூறும் பழைய அல்பாக்கா அங்கி பார்க்கப் பார்க்க அழகாகத் தான் இருக்கிறது. பாரதியார் வலக் கரத்தின் கீழே மேசையின் மேல் புத்தகங்களுடன் பத்திரிகைகள் இருப்பதும் பார்த்துப் பூரிக்கத் தக்கது. காரணம், அவர் நூலாசிரியரோடு பத்திரிகையாசிரியரும் அல்லவா!

## சேரன் செங்குட்டுவன்

5. சேரன் செங்குட்டுவனின் சித்திரம் சினத்தின் சித்திரமாய் சிறந்திருப்பது சிந்தை கொள்ளத் தக்கது. நம் முதல்வர் மிக மிக அண்மையில்கூடப் பேசியுள்ள ஒரு பேச்சில் இன்றையத் தமிழகத்தின் மான அரசியலுக்குக் காரணம் வீர சிலப்பதிகாரம்தான் என்று விளம்பி இருப்பதை எந்தத் தமிழனால் மறக்க இயலும்? ஊக்க உயிர்ப்பாய் உள்ள வஞ்சிக் காண்டத்தின் வஞ்சினக் காட்சியாய் விளங்குவதே சேரன் செங்குட்டுவனின் சித்திரமாகும். அவன் உருவிய வாளுடன் துருவியகண்களுடன் உயிர்த் துடிப்போடு நிற்கும் காட்சியைக் கண்டால் பாரதிதாசனும் ஒரு காப்பியம் படைப்பார்.

## கம்பர்

6. கவிச் சக்கரவர்த்தி கம்பரின் படம் கண்ணையும் கருத்தையும் கவருவதாகும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் இருந்த அருந்தமிழ்ப் புலவரின் கோலம் எப்படியிருக்கும் என்று காட்டுவதாய் இலங்கும் எழில்கோலம் கம்பரின் திருக்கோலம். செம்பட்டுத் தலைப்பாகையும் மேல் அங்கியும் பட்டுச் சரிகையும் பளபளக்கும் காட்சி, கம்பரின் கலை உள்ளத்திற்குப் புற அழகு செய்யும் அழகே அழகு. ஒரு கம்பத்துக்கு அருகில் கம்பர் நிற்பது ஓர்தற்கு உரியது. தொலைவில் காணும் திருக்கோயில் அவர்தம் சமரச தெய்வ பக்தியின் அறிகுறி போலும். கம்பருக்குக் கைகளில் காப்புகள் இருப்பதும் காதுகளில் கடுக்கண்கள் இருப்பதும் சரி.

## பாரதிதாசன்

7. இராசாசி மண்டபத்தின் இடப்புறத்தில் முதல் படம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் படம். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் குத்துப் பார்வை எல்லோர் கண்களையும் குடைவதாகும். நண்பர்கள் கண்களையே அது நையாண்டி செய்யும் என்றால் பகைவர்களின் கண்களைப் பதம் பார்க்கும் விதம் விளம்பல் வேண்டுமோ?

## அவ்வையார்

8. அவ்வைப் பாட்டியின் படம்அவளைப் பற்றிக் காலம் காலமாக நமக்குச் சொல்லப் பட்டு வரும் செய்திகளின் சித்திரம். காலமெல்லாம் இலக்கியப் பயணம் செய்த காரணத்தால் என்றென்றும் நம் கருத்தில் இதயப் பயணம் செய்யும் அந்தத் தாயின் தவள வாள் நுதலில் பவளக் குங்குமம் பளிச்சிடுவதும் பக்தியின் பயனோமோ! அனைத்துலகப் பெண்கள் ஆண்டில் நம் முதல்வர் கலைஞர் செய்து உள்ள ஓசைப்படாப் படப்புரட்சியின் உயிராக விளங்குவது இந்த அவ்வையின் படம் எனலாமே? காரணம், அவ்வைக்கு நிகர் யார்?—எந்த நாட்டில்? எந்தக் காலத்தில்?

## கரிகாற்சோழன்

9. திருமாவளவன்—கரிகாற் சோழன்—திருவுருவப் படம். காவிரி நாட்டின் வளம் எல்லாம் காட்டும் பின்னணிக் காட்சி கவின் நிறைந்த காட்சி—கல்லணை—கால வெள்ளத்தால்—இல்லை—வரலாற்றில் மங்கிக் கிடக்கும் மலர்க் காட்சி.

## வ. உ. சிதம்பரனார்

10. கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் பாரதிக்குச் செய்யுள் செயல் வீரர். அவர் வலக்கை அருகே அவர் கனவு கண்ட கப்பல் காட்சி அளிப்பது மாட்சி தருவதாகும்.

பழங்கால வழக்கறிஞருக்கு உரிய கருப்பு அங்கி அணிந்துள்ளார். கப்பலோட்டிய தமிழர் பணி செய்வதே அணி செய்வது என்று கருதிய அந்த வித்தகர் சிறையில் பிணி செய்யப்பட்டபோதும் கைதிகளும் வாழக் கருத்து மிக்க செய்யுள் நூல்கள் செய்தார்.

## வீரபாண்டியக்கட்டபொம்மன்

11. வீரபாண்டியக் கட்டபொம்மன் உருவாத வாளுடன் உருத்துப் பார்ப்பதும் அவன் வரலாற்றைக் காட்டும் உயிர் ஓவியம்தான். ஆம்; அவன் வருந்தியது எல்லாம் பாஞ்சைப் பதியை விட்டுப் பக்கத்துத் தமிழனை நம்பி வெளியேறாமல் பார் அதிர உருவிய வாளுடன் போர் அதிரச் செயல்பட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் என்பதுதானே! வீரபாண்டியக் கட்டபொம்மன் உடலுக்கு உயிர் கொடுக்க முடியாவிட்டாலும் இன்று அவன் கட்டிய கோட்டைக்கு உயிர் கொடுத்துள்ளார் நம் கலைஞர். இந்த இராசாசி மண்டபத்திற்கு அந்த நாள் வீரபாண்டியக் கட்டபொம்மன் உயிருடன் வந்தானோ இல்லையோ, இன்று காப்பியமாய் ஓவியக் காட்சித் தருகிறான்!

## இளங்கோவடிகள்

12. இடப்புற வரிசையில் இறுதிப்படம் இளங்கோவடிகள் படம். இயற்கை முடியையும் செயற்கை முடியையும் துறந்து வாளை விட்டு நூலை எடுத்து நிற்கும் இளங்கோவடிகளின் காட்சியே காட்சி. அரசு துறந்தும் தமிழ் மறவாத அந்தக் கோலமே கோலம். சேர நாட்டு உடையும் உள்ளமும் நம்மைச் சேர அணைக்கும் அணைப்பே அணைப்பு!

அடுத்து வரும் பக்கங்களில் வண்ணப் படங்கள் →

























# தொழில்-வணிகத் துறையின் சீரிய பணிகள்!

தொழில்-வணிக இயக்குநர் அலுவலகம், குடிசைத்தொழில், சிறுதொழில் வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்து அவற்றைச் செயல்படுத்தும் தலையாய பொறுப்பை ஏற்று வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது. குடிசைத் தொழில்களையும், சிறு தொழில்களையும் இந்த அலுவலகம் பதிவு செய்து வருவதோடு, தொழிற்சாலைகளுக்கு அரசு உதவியளிக்கும் சட்டத்தின் கீழ், இந்தத் தொழில்களுக்கு நிதியுதவியும் அளித்து வருகிறது. அதோடு, தேவையான இயந்திரங்களையும், மூலப்பொருள்களையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்ள இன்றியமையாத தேவை பற்றிய தேவைச் சான்றிதழ்களையும் வழங்குகின்றது. இவை தவிர, பொருள்களைத் தனது பணி நிலையங்களில் பகுப்பாய்வு செய்யவும், சோதனையிடவும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இதுவரை தொழில்-வணிக இயக்குநரால் நிருவகிக்கப்பட்டு வந்த முறையான, பொதுத் தொழிற்பேட்டைகளும், மேம்படுத்தப்பட்ட மனைகளும், 1-6-1974-லிருந்து முறையே சிறு தொழில்கள் வளர்ச்சிக் கழகத்திற்கும், மாநிலத் தொழிலாக்கக் கழகத்திற்கும் மாற்றப்பட்டன.

தொழில்-வணிக இயக்குநர் இத்துறையின் தலைவராவார். இவருக்கு, ஒவ்வொரு தொழிலிலும் சிறந்து விளங்கும் தொழில் நுட்ப அதிகாரிகள் குழு உதவி செய்கிறது. இம் மாநிலம், ஐந்து கிராமத் தொழில் திட்டப் பகுதிகளாகவும், நான்கு வட்டாரங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரமும் ஒரு வட்டாரத் துணை இயக்குநராலும் ஒவ்வொரு கிராமத் தொழில் திட்டமும் துணை இயக்குநர் தரத்திலுள்ள திட்ட அதிகாரி ஒருவராலும் நிருவகித்து வரப்படுகின்றன. அவர்கள் தங்கள் வட்டாரத்தில் தொழில் வளர்ச்சி பெறுவதற்கான பல்வேறு திட்டங்கள் குறித்து வழிவகைகள் தெரிவிப்பதோடு மேற்பார்வையும் செய்து வருகின்றனர். அவர்களே தங்களது வட்டாரத்தில் தொழில் வளர்ச்சி குறித்த பல்வேறு திட்டங்களுக்கும் பொறுப்பாகயிருக்கிறார்கள்.

மாவட்டங்களில் இப்பணியைத் தொழில்-வணிக உதவி இயக்குநர்கள் மேற்பார்வை செய்து வருகின்றனர். இவர்கள் செவ்வனே பணியாற்ற தொழிற்சாலை ஆய்வாளர்கள், தொழிற் கூட்டுறவுச் சங்க ஆய்வாளர்கள், குடிசைத் தொழில் ஆய்வாளர்கள், குடிசைத் தொழில் அதிகாரிகள், ஆய்வு-புள்ளி விவர ஆய்வாளர்கள், மாநில உதவி ஆய்வாளர்கள் (கடன்கள்), சிறப்பு வட்டாட்சியாளர்கள் ஆகியோர் உதவி புரிகின்றனர்.

இம்மாநிலத்தில் இந்த இயக்குநர் அலுவலகத்தின் அலுவல்கள் பலவற்றை தொழில் ஊக்கக் கழகங்கள் தற்போது எடுத்துக் கொண்டுள்ள போதிலும், தொழில் வளர்ச்சியை, குறிப்பாக, சிறு தொழில் துறையில் தொழில்களை ஊக்குவிப்பதில், இந்த அலுவலகம் முக்கியமான பங்கு ஆற்றி வந்துள்ளது. சென்ற ஆண்டில் இம்மாநிலத்தில் மட்பாண்டத் தொழில் வளர்ச்சிக்காக மட்பாண்டத் தொழிற் கழகம் ஒன்றை உருவாக்குவதற்கு இந்த இயக்குநர் அலுவலகம் காரணமாக இருந்தது.

அதே போல, சிறு தொழில் துறையிலுள்ள மின்னணுவியல் தொழில் வளர்ச்சிக்கு ஒருமித்த நாட்டம் செலுத்துவதற்காக மின்னணுவியல் கழகம் ஒன்றை அமைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் தோல் தொழிலை மேம்படுத்த தொழில் வணிகத்துறை இயக்குநர் அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தோல் பதனிடுபவர்கள், பக்குவப்படுத்தப்பட்ட தோலை ஏற்றுமதி செய்ய இயலும் வகையில், அவர்களுக்கு அந்த வசதிகளையளிக்கும் பொருட்டு தோல் பக்குவப்படுத்தும் கூட்டுறவு நிலையங்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்த இயக்குநர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு சிறு தொழில் கழகத்தின் தோல் உற்பத்திப் பிரிவுகளை மேற்கொள்ளவும், தோல் உற்பத்திப் பொருள்களுக்கான பக்குவப்படுத்தும் நிலையங்களை ஏற்படுத்தவும் தோல் தொழிற் கழகம் ஒன்றை விரைவில் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

சிறுதொழில் குறித்த கணக்கெடுப்பைத் தொழில்-வணிகத் துறை கடந்த ஆண்டில் மேற்கொண்டது. இம்மாநிலத்தில் உள்ள சிறு தொழில்கள் அனைத்தையும் குறித்த முழு விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இறுதியான விவரங்ரங்கள் தொகுக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தொழிற் பிரிவும் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பளிக்கின்றது, ஒவ்வொரு தொழிற்பிரிவின் உற்பத்தி வகை, அதன் நிறுவனத் திறன், அதற்குத் தேவைப்படும் மூலப்பொருட்கள் ஆகியவற்றை முடிவு செய்ய இந்த விவரங்கள் உதவியாக இருக்கும். சிறுதொழில் நிருவாகத்தில் இந்த இயக்குநர் அலுவலகத்திற்கு ஆலோசனையையும் நல்கும்.

படித்து வேலையற்றிருப்பவர்களுக்கான வேலை வாய்ப்பு-பயிற்சி குறித்த 15 திட்டங்களை கடந்த ஆண்டில் இந்திய அரசின் வேலைவாய்ப்புப் பெருக்கத் திட்டத்தின்கீழ் இந்த இயக்குநர் அலுவலகம், செயற்படுத்தியுள்ளது. இத்திட்டங்களுக்காக மொத்தத்தில் ரூபாய் 38.7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. படித்து வேலையற்றிருக்கும் 421 பேருக்கு வேலை வாய்ப்பளிக்க திட்டமிட்டுள்ளது.

ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டத்தின் கீழ் இந்த இயக்குநர் அலுவலகம் ரூபாய் 41.18 இலட்சம் செலவில் 13 திட்டங்களை நிறைவேற்ற எடுத்துக் கொண்டு தொழிற் கூட்டுறவுத் துறையில் 900 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தது. 700 பேர் பயனடைவதற்காக ரூ. 10.58 இலட்சம் செலவில் பொறியாளர்களின் வேலை வாய்ப்பிற்கு மானியும் அளிக்கும் மற்றொரு திட்டத்தையும் நிறைவேற்ற எடுத்துக் கொண்டுள்ளது.

# எண்ணிலாப் பணிகள் என்றும் தொடரும்!

*சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள ஏழை, எளிய மக்களிலிருந்து அநாதைக் குழந்தைகள்வரை-அவர்கள் தம் வாழ்க்கையில் வளமும் நலமும் பெற்று விளங்கிடத் தமிழ்நாடு அரசு நாளும் நற்பணியாற்றி வருகிறது.*

*இதேபோன்று பிற்பட்டோர் நலனிலும் அக்கறையும் ஆர்வமும் கொண்டு பல்வேறுதிட்டங்களைச்செம்மையாகச் செயலாற்றி வருகின்றது. இதனை விளக்கிக் கூறுகிறார் பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர் திரு. வி. ஆறுமுகம், ஐ. ஏ. எஸ்., அவர்கள்.*



**பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர்**

**திரு. வி. ஆறுமுகம் ஐ.ஏ.எஸ்., அவர்களின் பேட்டி**

**கே: பிற்பட்டோர் நலத்துறை தோற்றம் பற்றிக் கூற இயலுமா?**

ப : பிற்பட்டோர் நலன் என்பது அரசைப் பொறுத்த வரை 31—3—1948 வரை அரைச் சம்பளச் சலுகை அளிக்கப்படும் அளவிலேயே இருந்தது. 1948—49 -ல் பழைய சென்னை மாநிலத்தில் பிற்பட்டோருக்குப் படிப்பிற்கு உதவிப் பணம் வழங்கும் முறை அதாவது 'ஸ்காலர்ஷிப்' வழங்கும் முறை, முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது. அரிசன நலனுக்கு அப்போது பொறுப்பாயிருந்த தொழிலாளர் நல ஆணையர் இந்த முறையைக் கவனிக்கலானார். 1—4—1949 முதல், மாநில அரிசன நலக் குழு பரிந்துரையின் மேல், அரிசன நலனையும், பிற்பட்டோர், மலைச் சாதியினர் இவர்களின் நலனையும் கண்காணிக்க அரிசன நலத்துறை ஏற்படுத்தப்பட்டது. இதன் பின் பற்பல சமயங்களில் பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழுவிலும், சட்ட மன்றத்திலும் பிற்பட்டோர் நலனைப் பாதுகாக்கத் தனித் துறை தோற்றுவிக்க வேண்டும் என வற்புறுத்தப்பட்டு வந்தது. இவ்வேண்டுகோளுக்கு இணங்கும் வகையில் 1969 மே மாதம் 2-ஆம் நாள் பிற்பட்டோர், முன்னாள் குற்றப் பரம்பரையினர் இவர்களின் நலன்களைப் பாதுகாக்க பிற்பட்டோர் நலத் துறை துவக்கப்பட்டது. ஆயினும் மாவட்டத்தில் அரிசன நலத்துறையைச் சார்ந்த அலுவலர்களே பிற்பட்டோரின் நலனையும் 1974 மே மாதம் வரை பார்த்து வந்தனர். 1974 ஜூன் மாதம் முதல் பிற்பட்டோருக்கென தனி மாவட்ட நல அலுவலர்களும் நியமிக்கப்பட்டு இன்று மாவட்ட அளவிலும் பிற்பட்டோர் நலத்துறை தனித்து இயங்கி வருகிறது.

**கே: இத்துறையின் நோக்கம் என்ன?**

ப : பிற்பட்ட வகுப்பினர், தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் சரிபாதிக்கு மேல் இருக்கிறார்கள். சமுதாய அமைப்பினாலும், அவர்கள் பரம்பரை பரம்பரையாகச் செய்து வந்த தொழிலினாலும் இவர்கள் பன்னெடுங் காலமாக இதர பிரிவினருடன் இணைந்து முன்னேற முடியாதவர்களாக இருந்துவிட்டார்கள். இதனால் இந்தப் பின்தங்கிய மக்கள் விவசாயம் முதலிய முக்கியமான தொழில்களில் ஈடுபட்டு நல்ல உழைப்பாளிகளாக இருந்தும் கூட கல்வியிலும், பொருளாதாரத்திலும் முன்னேற முடியவில்லை.

ஆகவே, சமூக, கல்வி நிலையில் பிற்பட்டுள்ள பிற்பட்டோரை கல்வி, பொருளாதார நிலைகளில், ஏனைய முற்பட்ட மக்களுக்கு ஈடாக முன்னேற வேண்டிய வழி வகைகளைக் காண்பதும் அவைகளைச் செயல்படுத்துவதுமே இத்துறையின் முக்கிய நோக்கமாகும். அதாவது, உயர் தரக்கல்வி, தொழில் நுட்பக் கல்வி போன்றவைகளில் முன்னேறுவதும், அரசுப் பணிகளில் போதிய இடங்களை இவர்கள் அடையச் செய்வதும், தொழில், வர்த்தகம் முதலிய பொருளாதாரத்துறைகளில் இவர்களை மேம்படுத்துவதும், இவர்களைச் சமூகத்தில் முற்பட்ட வகுப்பினருக்குச் சமமாகக் கல்வி நிலையிலும் பொருளாதார நிலையிலும் முன்னேற்றுவிப்பதும் இத் துறையின் நோக்கமாகும்.



பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கு இஸ்திரிப் பெட்டி வழங்குகிறார் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள்.

**கே: இத்துறை ஆற்றிவரும் பணிகள் என்னென்ன?**

ப : நமது மாநிலத்தில் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ 52 சதவிகித மக்கள் பிற்பட்டவர்கள். இவர்களில் பெரும்பாலோர் கிராமப்புறங்களில் விவசாயக் கூலி வேலை மற்றும் சிறு கைத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள். இவர்கள் நிலையை எண்ணிப் பார்த்தால் இவர்கள் பெற்ற வளர்ச்சி மிகக் குறைவானது என்பதும், இவர்கள் முன்னேற்றத்திற்குச் செய்ய வேண்டியது மிக அதிகம் என்பதும் தெரியும்.

இதை ஆழ்ந்து சிந்தித்த இன்றைய நம் தமிழகஅரசு, எந்த மாநிலத்திலும் இல்லாத முறையில் பிற்பட்டோர் நலனுக்காக ஒரு தனித் துறையை ஏற்படுத்தி அதற்கென தனியொரு அமைச்சரையும், தனியாக ஒரு இயக்குநரையும் நியமித்து அவர்களின் நலனுக்கு அவசியமான வழி வகைகளை ஆராய்ந்து பரிந்துரைகள் செய்வதற்கென ஒரு தனிக் குழு திருவாளர் ஏ. என். சட்டநாதன் அவர்கள் தலைமையில் அமைத்து அந்தக் குழுவின் பரிந்துரைகள் மீது ஆவன செய்து வருகிறது.

பன்னெடுங்காலமாகப் பிற்பட்ட வகுப்பினர் கல்வியில் போதிய அக்கறை காட்டாததனால் சமுதாயத்திலும் பொருளாதாரத்திலும் பிற்பட்டவர்களாக உள்ள இவர்கள் கல்வியிலும் பிற்பட்டவர்களாகவே இருக்கிறார்கள்.

1—8—72-ல் கல்வி இயக்குநரின் அறிக்கைப்படி, 1 முதல் 11-வது வகுப்பு வரை படிக்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் பிற்பட்டோர் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா?

1-ஆம் வகுப்பு 60 சதவிகிதம், 5-ஆம் வகுப்பு 52 சதவிகிதம், 8-ஆம் வகுப்பு 51 சதவிகிதம், 11-ஆம் வகுப்பு 47 சதவிகிதம்.

இதிலிருந்து பிற்பட்டோர் கல்வி கற்க வரும் நிலைமை உயர் வகுப்புகளுக்குச் செல்லச் செல்ல இந்நாளிலும் குறைந்து கொண்டே போகிறது என்பது தெளிவாகிறது. இதற்கு முக்கிய காரணம் பிற்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பலருக்கு உயர்தரக் கல்வி கற்கப் போதுமான வாய்ப்புகளும், வசதிகளும் பல ஆண்டுகளாய் உருவாகவில்லை என்பதுதான். ஆகவே பிற்பட்டோர் நலன் எனும்போது அவர்கள் கல்வி பெற வசதியுடன் படித்து முன்னேற அவசியமான உபகாரச் சம்பளம், உண்டி, உள்ளுறை போன்ற வசதிகளைத் தருவதையும், படித்து முன்னேறியவர்களுக்கு ஓரளவு அரசினரின் ஆதரவில் வேலை வாய்ப்புகள் கிடைக்கும் வகையில் ஒதுக்கீடுகள் செய்வதையும் முக்கியப் பணியாகக் கொண்டு இதில் நம் அரசு மிகுந்த அக்கறை செலுத்துகிறது.

**கே: இவை தவிர வேறு ஏதேனும் பணிகளை இத்துறை மேற்கொண்டுள்ளனவா?**

ப : ஆம். பொதுவாக மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தவிர இத்துறையின் மூலம் மேற்கொண்டுள்ள பணிகள் பலவாகும். அவை :

1. 9-ஆம் வகுப்பிற்கு மேல் பட்டப் படிப்பு, மேற்பட்டப் படிப்பு முதலியவற்றிற்குப் படிக்கும் இச் சமூக மாணவர்களுக்குப் படிப்பு உதவிப் பணம் பொருளாதார அடிப்படையில் அளித்தல்.

2. ஏழை, எளிய மாணவ, மாணவியர்கள் இலவச உண்டி, உறையுள் வசதி பெற்று கல்வி கற்க மாணவரில்லங்களைத் திறத்தல், பராமரித்தல்.

3. தனியார் மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் ஏழை மாணவ, மாணவியருக்கு உணவு மானியம் வழங்கல்.

4. பிற்பட்டோர் துறை அரசு மாணவரில்லங்களில் தங்கியிருக்கும் மாணவ மாணவியருக்குச் சீருடை வழங்கல்.

5. முன்னாள் குற்றப் பரம்பரையினருக்குப் பள்ளிகளையும் மாணவரில்லங்களையும் நடத்துதல்.

6. மேற்படி பள்ளிகள், மாணவரில்லங்களில் உள்ளவர்களுக்குச் சீருடை வழங்கல்.

7. இந்தப் பள்ளிகளில் உள்ளவர்களுக்கு மதிய உணவு, இலவசமாகக் கரும் பலகை, புத்தகங்கள் வழங்கல்.

8. முன்னாள் குற்றப் பரம்பரையினருக்குக் கிணறு வெட்ட, வீடுகள் கட்ட மானியம் வழங்கல்.

9. மருத்துவர்கள், சலவைத் தொழிலாளர்களுக்கு இலவசமாகத் தொழிற் கருவிகள் வழங்கல்.

10. சலவைத் தொழிலாளர் நலன் கருதி சலவைத் துறை கட்ட முன் வரும் நகராட்சி, ஊராட்சிக்கு மானியமும், கடனும் வழங்கல்.

11. முன்னாள் குற்றப்பரம்பரையினருக்குக் குறிப்பிட்ட இடங்களில் கைத்தொழில் கற்றுக் கொடுத்தல்.

12. ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ்., போன்ற மத்திய அரசுப் பணிகளுக்கு நடைபெறும் தேர்வுகளில் தேர்ச்சி பெற பிற்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

13. இந்திய இராணுவத் துறையில் கமிஷன் அந்தஸ்து அலுவலர்கள் தேர்வுக்குப் பயிற்சி அளித்தல்.

14. கல்லூரிகளில் ஒவ்வொரு பாட முறையிலும் குறைந்தது 31 சதவிகித இடங்கள் பிற்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும். கல்வி நிலையங்கள் இதைச் சரிவர அமல் செய்கின்றனவா என்பதைக் கல்வி நிலையங்கள் வாரியாக ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அனுப்புதல்.

15. அரசுப் பணிகளில் 31 சதவிகித இடங்கள் சில குறிப்பிட்ட இனங்களில் ஒதுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு பகுதியிலும் சேர்ந்துள்ள பிற்பட்டோரின் எண்ணிக்கை விதிகளின் படி

31 சதவிகிதத்துக்குக் குறைவில்லாமல் இருக்கிறதா என்று ஆராய்ந்து குறைவுக்குக் காரணங்களை அறிந்து அரசுக்கு அறிக்கை அனுப்புதல்.

**கே: பிற்பட்டோர் பட்டியலில் சுமார் எத்தனை சாதிப்பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன?**

ப : 124 சாதிப் பிரிவுகள் இன்றளவில் சேர்க்கப்பட்டு உள்ளன.

**கே: பிற்பட்டோருக்காக வழங்கப்படும் சலுகைகள் என்னென்ன?**

ப : பிற்பட்டோருக்குப் பல சலுகைகள் வழங்கி வருகின்றோம். அவை : 1. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் 1,500-க்குள் இருக்குமானால், மிகப் பிற்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த மாணவருக்கு முழுச் சம்பளச் சலுகையும், இதே வருமான வரம்புக்குட்பட்ட பிற்பட்ட மாணவர்களுக்கு அரைச் சம்பளச் சலுகையும் கல்வித் துறை மூலம் வழங்கப்படுகிறது.

2. பிற்பட்ட, மிகப் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 2,500-க்கு மேற்படாமலிருந்து, இம்மாணவர்கள் முந்திய ஆண்டு இறுதித் தேர்வில் சராசரி 40 சதவிகித மதிப்பெண்கள் எடுத்துத் தேர்ச்சி பெற்றிருப்பார்களானால் இவர்களுக்குப் படிப்பு உதவிப் பணம், பிற்பட்டோர் நலத் துறையால் வழங்கப்படுகிறது. இச்சலுகை 9-ஆம் வகுப்பு முதல் அமல்படுத்தப்படுகிறது; ஆனால், பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊதியத்தொகை படிப்பு உதவிப் பணம் வழங்குவதற்குக் கணக்கிடப்படுவதில்லை.

3. கலை, தொழில் கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் 31 சதவிகித இடங்கள் பிற்பட்டோருக்கு ஒதுக்கப்படுகின்றன.

4. அரசுப் பதவி நியமனங்களில் சம்பந்தப்பட்ட துறை விதிகளின்படி சில பணியிடங்களில் 31 சதவிகித இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

5. பணியாளர் தேர்வாணைக் குழுவினரால் நடத்தப்படும் தேர்வுகளுக்குக் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன :

அ. மேற்படி தேர்வில் கலந்து கொள்ள அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு வயது ஒரு ஆண்டும், அரசுப் பணியில் இல்லாதவர்களுக்கு 6 மாதக் காலமும் முன் அனுமதியுடன் தளர்த்தப்படுகிறது.

ஆ. மேற்படி தேர்வில் கலந்து கொள்வதற்கு விதிக்கப்பட்டுள்ள குறைந்த அளவு மதிப்பெண்கள் தகுதியில் அரசுப் பணியில் இருப்பவர்களுக்கு ஏதாவது ஒரு பாடத்தில் 5 மதிப்பெண்கள், அரசுப் பணியில் இல்லாதவர்களுக்கு 2 மதிப்பெண்கள் முன் அனுமதியுடன் தளர்த்தப்படுகிறது.

6. அ : பட்டப் படிப்புத் தேர்வில் கலந்து கொள்ளும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு முதல் மூன்று தேர்வுகளுக்குக் கட்டணமின்றி மனுச் செய்ய சலுகை அளிக்கப்படுகிறது.

ஆ. மேற்படி தேர்வுக்கு மனு செய்யும் பிற்பட்ட வகுப்பு மாணவர், எழுதுகின்ற தேர்வுக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி நிலைக்கு மேற்பட்ட கல்வி கற்றிருப்பின் அவருக்கு வயது வரம்பு கிடையாது.

**கே: பிற்பட்டோர் சொந்தமாகத் தொழில் நடத்த ஏதேனும் உதவிகள் அளிக்கப்படுகின்றனவா?**

ப : ஆம். சலவைத் தொழிலாளர், மருத்துவத் தொழிலாளர் ஆகியோருக்கு, அவர் தம் தொழிலைத் தன்னிச்சையாகச் செய்வதற்குக் கருவிகள் வாங்கி இலவசமாக வழங்கப்படுகின்றன. சலவைத்தொழில் கருவிகள் நபர் ஒன்றுக்கு ரூ. 240 மதிப்புள்ளதாகவும், முடிதிருத்தும் தொழிலுக்கு ரூ. 75 மதிப்புள்ளதாகவும் வழங்கப்படுகின்றன.

**கே: பின்தங்கிய வகுப்பைச், சார்ந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றனவா?**

ப : ஆம். பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2,500-க்குள் உள்ள மாணவ, மாணவியருக்கு அவர்கள் தங்கள் முந்தைய ஆண்டு இறுதித் தேர்வில், மொத்தத்தில் 40 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்று இருந்தால், படிப்பு உதவித் தொகை வரையறுக்கப்பட்ட விகிதத்தில் வழங்கப்படுகிறது. பள்ளிப் படிப்பில் 9 முதல் 11 வகுப்பு வரைதான் புத்தகங்கள் மற்றும் தேர்வுக் கட்டணங்களுக்கு மட்டும் உதவி அளிக்கப்படுகிறது. கல்லூரிகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லா முறைப் பாடங்களுக்கும், 'சார்ட்டட் அக்கவுண்டண்ட்' பயிற்சிக்கும் உதவி அளிக்கப்படுகிறது.

இது தவிர, மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற் படிப்பிற்கு, வருமானம் ரூபாய் 2,500-க்கு மேலும் 6,000-க்குள் உள்ள கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கப்படுகிறது. இப்படி வழங்கப்படும் தொகை ஆண்டிடிற்கு ரூ. 500 ஆகும். ஆண்டு ஒன்றுக்கு 250 பேருக்கு மட்டும் வழங்கப்பட்டு வருகிறது.

**கே: இதனால் இதுவரை எத்தனை மாணவர்கள் பயனடைந்துள்ளனர்?**

ப : இதன் மூலம் பல இலட்சம் மாணவர்கள் 1948—49 முதல் பயனடைந்துள்ளனர். ஆண்டு வாரியாகப் பார்த்தால் இதன் வளர்ச்சி நன்கு தெரிய வரும். அதாவது 1948—49-ல் படிப்பு உதவி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட

இ.ஏ.எஸ்., பயிற்சி வகுப்பு



பொழுது பயனடைந்தோரின் எண்ணிக்கை 607, செலவான தொகை ரூ. 1 இலட்சம். 1949—50-ல் ரூ. 5 இலட்சம் பயனடைந்தோரின் எண்ணிக்கை 2,908. இவை மெல்ல மெல்ல வளர்ந்து 1960—61-ல் 19,856 பேர், 1970—71-ல் 1,34,249 என்று உயர்ந்து கொண்டே சென்று 1974-75-ல் 1,75,391 பேர் பயனடையும் வகையில் வளர்ந்துள்ளதைப் பெருமிதத்தோடு குறிப்பிட வேண்டும்.

முன்னாள் குற்றப் பரம்பரையினருக்குப் படிப்பு உதவிப் பணம் ஆரம்ப வகுப்பு முதல் அளிக்கப்படுகிறது. அவர்களுக்குப் படிப்பு உதவி அளிக்க பிற்பட்டோருக்கான வருமான வரம்பே கடைப்பிடிக்கப்படுகிறது. 1955—56 வரை குற்றப் பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட பரம்பரையைச் சேர்ந்த மாணவர்களுக்கு, தாழ்த்தப்பட்டோருக்கு உதவித் தொகைக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலேயே சேர்த்து வழங்கப்பட்டது.

1956—57-ல் ரூ. 1.20 இலட்சம் செலவில் 822 பேர் பயன் அடைந்தனர். இந்த நிலை படிப்படியாக உயர்ந்து 1960—61-ல் ரூ. 3.70 இலட்சம் செலவில் 2,771 பேர் பயன் அடைந்தனர். 1970-71-ல் ரூ. 21.16 இலட்சம் செலவில் 44,189 பேர் பயனடைந்தனர். 1974—75-ல் ரூ. 35.66 இலட்சம் செலவில் 65,334 பேர் பயன் அடைந்துள்ளனர் என்ற வகையில் உயர்ந்துள்ளது.

இவ்விதம் பிற்பட்டோருக்கும், குற்றப் பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட பரம்பரையினருக்கும் அளிக்கப்பட்ட உதவிகளின் எண்ணிக்கை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் (1961—66) 2,08,700. இதே போல் இடை திட்டக் காலத்தில் (1966—69) உதவியளிக்கப்பட்ட எண்ணிக்கை 2,11,018 நான்காவது திட்டக் காலத்தில் (1969—74) அளிக்கப்பட்ட உதவிகளின் எண்ணிக்கை 10,68,158 சென்ற ஆண்டு (1974—75) மட்டும் வழங்கப்பட்ட உதவித் தொகைகளின் எண்ணிக்கை 240,725.

**கே: 'குற்றப்பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர்'- இதனைச்சற்று விளக்கிட முடியுமா?**

ப : பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மலைச்சாதியினர் ஆகியோர்களில் ஒரு சில பிரிவினர் வறுமையினாலும் தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையினாலும் கொலை கொள்ளை, வழிப்பறி முதலிய சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டதாக அன்றைய ஆங்கில ஆட்சியினர் கருதி 1911-ஆம் ஆண்டு அதற்கு என ''குற்றப் பரம்பரைச்'' சட்டமியற்றி அதன் மூலம் இவர்களைத் திருத்துவதற்கு முயற்சித்தனர். அதன்படி அம்மக்கள் காவலர் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டனர்.

நம் நாடு விடுதலை அடைந்த பின் குற்றம் பரம்பரைச் சட்டம் 1948-ல் நீக்கப்பட்டது. குற்றப் பரம்பரை என்ற அவப் பெயருக்கு ஆளாக்கப்பட்டு பழிச் சொற்களுக்கு உள்ளாகி வந்த மக்கள் தன்மானத்தோடு வாழ்ந்து முன்னேறுவதற்கு அரசு பல்வேறு வழிகளிலும் உதவி வருகிறது.

இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தொகை ஏறக்குறைய 27 இலட்சமாகும். தென் மாவட்டங்களில்இவர்கள்பெருமளவில் வசிக்கின்றனர். சுமார் 70 சாதியினர் இந்த வகையில் உள்ளடங்கியவர்கள். கொடுமையிலிருந்தும், பழியிலிருந்தும் நீக்கப்பட்ட பின்னர், தனி உதவிக்கு இலக்காகும் இவர்கள் "குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்கள்'' எனக் குறிப்பிடப்பட்டுகின்றனர்.

காவலர் கண்காணிப்பில் இருக்கும்பொழுதே இவர்களது கல்வி இன்மை, ஏழ்மை இவற்றைப் போக்க திட்டங்கள் வகுக்கப்பட்டன. இவர்களுக்காகப் பள்ளிகள் நடத்துவது, படிப்பதற்குப் படிப்பு உதவித் தொகை அளிப்பது, தேயிலை, காப்பித் தோட்டங்களில் வேலை வாய்ப்புகள் பெற்றுத் தருவது, விவசாயம் செய்யக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் அமைத்துத்தருவது, இதன்மூலம் கடன் வழங்குவது முதலிய செயல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இப்பிரிவில் தாழ்த்தப்பட்டவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மலைச்சாதியினர் ஆகிய மூன்று பிரிவினரும் அடங்குவர். இவ்வாறு தனிப்படுத்தப்பட்ட பிரிவினர், சாதிகளின் அடிப்படையிலின்றி அவர்களது முன்னோர்கள் ஈடுபட்ட சமூக விரோத நடவடிக்கைகளினால் சலுகை பெறும் தனிப்பட்டியலில் வருகின்றனர்.

ஆனால், வேலை வாய்ப்பு மற்றும் கல்வி நிலையங்களில் முன்னுரிமை போன்ற காரியங்களுக்கு இவர்கள் எவ்வகுப்பு அல்லது சாதியைச் சேர்ந்திருக்கின்றனரோ அதற்கேற்ப சலுகை அளிக்கப்படுகிறது. அதாவது, இவர்கள் பிற்பட்ட சாதிகளுள் ஏதாவது ஒன்றைச் சார்ந்திருந்தால் இவர்களுக்குப் பிற்பட்டோருக்கான ஒதுக்கீட்டிலும், அரிசனங்களாயின் அவர்களுக்கானஒதுக்கீட்டிலும் வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன.

ஒரே வகுப்பைச் சார்ந்தவர்கள் ஒரு மாவட்டத்தில் குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவராகவும் ஏனைய மாவட்டங்களில் இப்பிரிவில் அடங்காமல் உள்ளனர். குறிப்பாக மதுரை மாவட்ட 'மறவர்கள்' இப்பிரிவில் இல்லை. ஆனால், முகவை, நெல்லை மா



வேலூரிலுள்ள அரசினர் அரிசன மாணவர் விடுதி.

வட்டங்களில் 'மறவர்கள்' முன்னாள் குற்றப்பரம்பரையின ராவர். ஆகவே, எந்தப் பகுதி மக்கள் 1911-ஆம் ஆண்டு மத்தியக் குற்றப் பரம்பரைச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப் பட்டுக் கண்காணிக்கப்பட்டார்களோ, அவர்களைத்தான் அச் சட்டம் நீக்கப்பட்டபின் 'டினோடிபைடு ட்ரைப்ஸ்' அதாவது குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் என அழைக்கப்படுகின்றனர்.

இம் மக்கள் முன்னேற்றத்திற்கு நாடு விடுதலை பெறுவதற்கு முன் கல்வி, சிறிய அளவில் விவசாயம் செய்ய உதவிகள் அளிக்கப்பட்டன. விடுதலைக்குப் பின் கல்வி முன்னேற்றம் மட்டுமின்றி ஏனைய துறைகளிலும் இவர்கள் மேம்பாட்டிற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டன. கிறித்தவ மதம் மாறியவர்களுக்கு இத்துறையின் சலுகைகள் பொருந்தும்.

முதன் முதலில் 1922-ல் மதுரையிலும், 1923-ல் முகவையிலும் இவர்களுக்குப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன.

பிற்பட்டோர் நலத்துறை ஆரம்பிக்கப்பட்டபோது 232 ஆரம்பப் பள்ளிகளும், 33 இடைநிலைப் பள்ளிகளும், 5 உயர்நிலைப் பள்ளிகளும் இருந்தன. இப்போது 235 ஆரம்பப் பள்ளிகளும், 32 இடைநிலைப் பள்ளிகளும், 10 உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. இந்தப் பள்ளிகளின் மூலம் சுமார் 36,720 பேர் பயனடைகின்றனர். இந்தப் பள்ளிகளில் இதர மாணவர்களும் சேர்க்கப்படுகின்றனர். இவர்கள் சுமார் 10 சதவிகிதம் இருக்கலாம்.

இந்த ஏழை மாணவர்கள் தங்கள் பெற்றோரின் வறுமை காரணமாகப் படிப்பை நிறுத்திவிடாமல் இருக்க 1 முதல் 8 வகுப்பு வரை இந்தப் பள்ளிகளில் சாதி வேறுபாடு இன்றிப் பகலுணவு வழங்கப்படுகிறது. இந்தக் கல்விக் கூடங்களைப் பராமரிக்க ஆண்டுதோறும் மதிய உணவு, சீருடை வழங்குவது உட்பட சுமார் 72 இலட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது. அனைத்துப் பள்ளிகளும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**கே: 'பின்தங்கிய மாணவர்களுக்கான 'மாணவர் இல்லங்கள்' உள்ளனவா? இதனால் எத்தனை பேர் பயன்பெறுகின்றனர்?**

ப: ஆம். பின்தங்கிய மாணவருக்கென 979 மாணவ, மாணவியர் பயன் பெறும் வகையில் 11 இல்லங்கள்தான் 1969—70 வரை இருந்தன. தனித்துறை ஆரம்பித்த பின்னர் இவ்வெண்ணிக்கை இன்று 177 ஆக உயர்ந்து, 11,210 மாணவர்கள் பயன்பெற உதவுகிறது. மேலும் இவ்வாண்டில் 20 இல்லங்கள் திறக்கப்படும். அதன் மூலம் மேலும் 1,000 மாணவ, மாணவியர் பயன்பெறுவர்.

இவைகளில் 55 இல்லங்கள் கல்லூரி மாணவ, மாணவியருக்கு ஆனவை. இவை தவிர, முன்னாள் குற்றப் பரம்பரையினருக்கென 5,100 பேர் பயனடையும் வகையில் 54 இல்லங்கள் நடத்தப்படுகின்றன.

**கே: ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற வேலைகளுக்கான தேர்வுகளுக்குச் சிறப்புப் பயிற்சியளிக்கும் நிலையம் உள்ளதாமே?**

ப: ஆம். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற பதவிகளில் பிற்பட்டோரின் பிரதிநிதித்துவம் மிகக் குறைவு. இவ்வாண்டு இப்பதவிகளுக்கு மத்திய அரசின் தேர்வாணைக் குழுவினால் தேர்வு நடத்தப்படுகிறது. பிற்பட்டோருக்கென தனி ஒதுக்கீடும் இல்லை. அத் தேர்வில், பல முன்னேற்றம் அடைந்த வகுப்பு மாணவர்களுடன், பல வசதிகள் குறைவின் காரணமாகப் பிற்பட்ட மாணவர்கள் போட்டியிட்டுத் தேர்வு பெறுவது கடினம் என்பதை உணர்ந்து, அத்தேர்வுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கவே, "சிறப்புப் பயிற்சி நிலையம்" ஒன்று 1971-ல் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வகுப்பில் 50 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இலவச உண்டி, உறையுள் வசதியுடன் கூடிய இந் நிலையத்தில் நூலகமும், தேர்வுக்குப் பயன்படும் புத்தகங்களும் உள்ளன. ஆர்வமும் முன் அனுபவமும் திறமையும் மிக்க ஆசிரியர்களால் இம்மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்நிலையத்தை நடத்திச் செல்ல ஒரு ஆலோசனைக் குழு உள்ளது. அதில், சமூக நலத் துறைச் செயலர் தலைவராகவும், கல்லூரி இயக்குநர், காவல் துறைத் தலைவர், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் முதலானோர் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

முதன் முதலில் பயிற்சி 12—12—71-ல்தான் ஆரம்பிக்கப்பட்டது. சேர்க்கப்பட்ட 12 பேரில் எவரும் தேர்ச்சி பெறவில்லை. இரண்டாவது அணியில் 1972 நவம்பர் முதல்

---

**பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கல்வி, வேலை ஆகியவற்றில் அளிக்கப்படும் சலுகைகளைச் சோழிய வேளாளர்களுக்கும் அளிக்க வகை செய்யும் உத்தரவைத் தமிழ்நாடு அரசு பிறப்பித்துள்ளது.**

**ஏற்கெனவே, கொங்கு வேளாளர் சமூகத்தினருக்குப் பிற்பட்டோருக்கான சலுகைகள் அளிக்கப்படுமென்று, தமிழ்நாடு அரசு கடந்த மே மாதம் அறிவித்தது.**

**சோழிய வேளாளர்களுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படவேண்டுமென்று அப்போது கோரிக்கை தெரிவிக்கப்பட்டது.**

**அதன் அடிப்படையில் சோழிய வேளாளர், அதைச் சார்ந்துள்ள சோழிய வேளாள வெற்றிலைக்காரன், கொடிக்கால் காரன், கீரைக்காரன் ஆகிய உட்பிரிவினரும், கருணீகர் வகுப்பாரும் பின்தங்கியவர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.**

**அதன்படி இந்தச் சமூகத்தினருக்குப் பின்தங்கியோருக்கான கல்விச் சலுகைகள் இந்தக் கல்வி ஆண்டு முதல் கிடைக்கிறது. அரசு வேலைகளில் இடம் ஒதுக்குவதிலும் இந்தச் சமூகத்தினர் தகுதி பெறுகிறார்கள்.**

1973 அக்டோபர் வரை 67 பேருக்குப் பயிற்சி அளித்ததில், ஒருவர் ஐ.ஏ.எஸ்ஸுக்கும், இருவர் மத்திய அரசுப் பணியாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். மூன்றுவது அணி 1973 நவம்பரில் தொடங்கப் பட்டது. இதில் ஒருவர் ஐ. ஏ. எஸ்ஸுக்கும் மற்றொருவர் ஐ. பி. எஸ்ஸுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நான்காவது அணிக்கு 1974 நவம்பர் முதல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இப்பயிற்சி நிலையத்தில் பெண்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பட்ட மேற்படிப்பு உள்ளவர்கள்தான் நேரிடைத் தேர்வின் மூலம் சேர்க்கப்படுகின்றனர். இதில் சேர்வதற்குப் பெற்றோரின் வருமான வரம்பு கணக்கிடப் படுவது இல்லை. இப்பயிற்சியில் சேர ஆர்வம் உடைய மாணவர்கள் பயிற்சி நடைபெறும் ஆண்டில் ஆகஸ்டில் முதல் தேதியில் 25 வயதைக் கடந்து இருக்கக் கூடாது.

**கே: பல்வேறு தொழில்களில் பயிற்சி பெறுவதற்கான கைத்தொழில் நிலையங்களும் உள்ளனவா?**

ப : ஆம். உள்ளன. முன்னாள் குற்றப் பரம்பரையினருக்கும், பிற்பட்டோருக்கும் தொழில் கல்வி அளிக்கப்படுகிறது. அவை :

1. பொதுப் பொறியியல் பட்டறைகள் : செக்காணூரணி (மதுரை மாவட்டம்), முதுகுளத்தூர் (முகவைமாவட்டம்), வீரகேரளம்புதூர் (நெல்லை மாவட்டம்) ஆகிய இடங்களிலும்; 2. பிரம்புப்பொருள்கள் செய்யும் பயிற்சி நிலையம் : பிரஸ்லி நகர், பெரம்பூரிலும்; 3. பெண்களுக்காக, மதுரை மாவட்டம் உசிலம்பட்டியிலும், நெல்லை மாவட்டம் கூலவணிகபுரத்திலும், கிண்டி ராஜபவனம் மற்றும் தருமபுரி மாவட்டம் சாமியாபுரத்திலும் தையற் பயிற்சி நிலையங்கள் உள்ளன. இதேபோல, 4. கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையில், தும்புப் பொருள் தயாரிப்பு மற்றும் பாகோடில், பிரம்புப் பொருள் தயாரிப்புப் பயிற்சி நிலையங்கள் உள்ளன.

**கே: பிற்பட்டோர் நலனுக்காக புதிய திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா?**

ப : இன்றளவில் நடைபெறும் திட்டங்களினால் ஏற்பட்ட பயனை ஆய்வு செய்து புதுத் திட்டங்கள் உருவாக்கினால் நலம்.

பிற்பட்டோர் நலத் துறை பிற்பட்ட மக்களின் கல்வி மேம்பாட்டை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு ஏராளமான மக்களுக்கு உபகாரச் சம்பளம் மற்றும் இதர சலுகைகளை வழங்கி வருகிறது. ஆண்டுதோறும் இதற்காகவே ஏறத்தாழ 5 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. இந்தத் துறைக்கு ஒதுக்கப்படும் மொத்த நிதியில் இது சுமார் 82 சதவிகிதம்.

வீட்டு வசதி, தொழில் மேம்பாடு, பொருளாதார வளர்ச்சி போன்ற துறைகளில் பிற்பட்ட மக்களுக்கு என்று தனித் திட்டங்கள் தேவைப்படினும் நமது அரசு எந்தெந்தத் துறைகளில் வளர்ச்சித் திட்டங்களை வகுத்தாலும் அவை சமுதாயத்தின் பிற்பகுதியில் இருக்கும் ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் முறையில்தான் வகுக்கப்படுகின்றன.

ஆகவே, நம் அரசு இதரத் துறைகளில் வகுக்கும் வளர்ச்சித் திட்டங்களும் பிற்பட்ட மக்களுக்குச் சாதகமானவையாக இருப்பதாகவே கொள்ளலாம்.

இவ்வாறு எந்த மாநிலத்திலும் இல்லாத முறையில் பிற்பட்டோர் நலனுக்காக ஒரு தனித் துறையையே ஏற்படுத்தி அவர்கள் நலனில் அக்கறையும் ஆர்வமும் கொண்டு தமிழக அரசு ஆக்கப் பணிகளை அயராது ஆற்றி வருகிறது என்பதை நான் பெருமையாகக் கூறிக் கொள்ளவிரும்புகிறேன்.

—பேட்டி : பி. வி. ஜி.






# பயிர்ப்பூச்சி மருந்து ஜோலோன் உபயோகியுங்கள். மிகச்சிறந்த செழுமையான பருத்தி விளைச்சலைப் பெறுங்கள்.



## ஜோலோன் பல்வேறு பூச்சிகளை அழிக்கும் ஒருமித்த பூச்சிமருந்து.

உலகெங்கும் உபயோகிக்கப்பட்டு ஆராய்ச்சி செய்யப்பட்டதன் விளைவே ஜோலோன் ஆகும். எல்லாவித பயிர்ப்பூச்சிகளிலிருந்தும் பயிர்களை எப்பொழுதும் காப்பதற்கு ஜோலோன் ஒன்றே போதுமானது. பயிரிட்டது முதல் அறுவடைக்காலம் வரை பயிர்களின் ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும், எப்பருவத்திலும்—மாரி காலத்திற்கு முன்னும் பின்னும்—ஜோலோன் உபயோகிக்க உகந்தது. ஒரு முறை தெளித்தால் அதன் செயல்திறன் 2-3 வாரங்கள் வரை நிலைக்கிறது.




ஜோலோன் ஈ.ஸி. திரவ வடிவிலும், ஜோலோன் டஸ்ட் துகள் வடிவிலும் கிடைக்கிறது.



விநியோகஸ்தர்கள்:
**வோல்டாஸ் லிமிடெட்** கெமிக்கல்ஸ் டிவிஷன்
பம்பாய் - அகமதாபாத் - செகந்த்ராபாத் - புதுடில்லி
கல்கத்தா - சென்னை - பெங்களூர்

HT-VT-8799

# தமிழ்நாட்டில் பெருந் தொழிற்சாலைகள்!



தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெருந் தொழிற்சாலைகள் மிகவும் இன்றியமையாததாகும். ஆனால் தற்பொழுது தமிழ்நாட்டில் ஒருசில பெருந் தொழிற்சாலைகளே உள்ளன! எனவேதான், தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டில் பெருந்தொழிற்சாலைகளை அமைப்பதற்குள்ள வாய்ப்புகளை எடுத்துக்கூறி, அத்தகையத் தொழிற்சாலைகளைத் தமிழ்நாட்டில் மைய அரசுத் திட்டத்தின்கீழ் அமைத்திடும்படி இந்திய அரசிடம் வற்புறுத்தி வருகிறது. மேலும் தமிழ்நாடு அரசே பொதுத் துறையிலும், கூட்டுத்துறையிலும் பல தொழிற்சாலைகளைத் துவக்கிட முயன்று வருவதுடன், பெருந்தொழிற்சாலைகளைத் துவக்கிட முன்வரும் தொழில் முனைவோர்களுக்கும் உதவி வருகிறது.

தமிழகத்தில் உள்ள பெருந் தொழிற்சாலைகள் பின்கண்டவாறு 4 வகையில் அடங்குகின்றன.

1. மைய அரசுத் துறையைச் சார்ந்தவை.

2. மாநில அரசின் பொதுத் துறையைச் சார்ந்தவை.

3. மாநில அரசின் கூட்டுத் துறையைச் சார்ந்தவை.

4. தனியார் துறையைச் சார்ந்தவை.

தழிம்நாட்டில் தற்பொழுது உள்ள பெருந்தொழிற்சாலைகளைப் பற்றிய விவரங்கள் கீழே விவரிக்கப்பள்டுள்ளன.

## மைய அரசுத் துறையைச் சார்ந்த பெருந் தொழிற்சாலைகள்!

**1. நெய்வேலி நிலக்கரி தொழிற்சாலை:**



நெய்வேலி நிலக்கரி தொழிற்சாலை நிருவாகத்தை, நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இக் கழகத்தில் சுரங்கப் பிரிவு, அனல் மின் உற்பத்திப் பிரிவு, உர உற்பத்திப் பிரிவு, சுட்ட அச்சுக் கரித் தொழிற் பிரிவு ஆகிய நான்கு பெரும் பிரிவுகள் உள்ளன. சுரங்கப் பிரிவில் முதல் நிலையில் ஆண்டு ஒன்றுக்கு 3.5 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி கிடைக்கும் என்றிருந்தது. இந்த அளவை ஆண்டு ஒன்றுக்கு 6.5 மில்லியன் டன்னாக உயர்த்த முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இப் பிரிவுகள் அனைத்தும் 1974-ல் செயல்பட்டன. இப்பிரிவுகள் 17,903 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கின்றன. பழைய கருவிகளுக்குப் பதிலாக புதிய கருவிகள் வாங்க ரூபாய் 36 கோடி முதலீடு செய்யவும், ஆண்டொன்றுக்கு சுரங்கத்தின் நிலக்கரி வெட்டியெடுக்கும் திறனை 6.5 டன் மில்லியனாக உயர்த்தவும் இக்கழகம் கருதியுள்ளது.

**இரண்டாவது சுரங்கப் பிரிவை வெட்டுமாறு இந்தியஅரசைத் தமிழ்நாடு அரசு வலியுறுத்தி வருகிறது.** இது, மின்சக்தி உற்பத்தியைப் பெருக்க உதவும். அதனால் நிலையாக நீடித்து வருகிற நமது மின்சக்தி பற்றாக் குறையை ஓரளவுக்குத் தணிக்க முடியும். நமது வேண்டுகோளுக்கு இந்திய அரசு இன்னும் செவி சாய்க்கவில்லை.

**2. இணைப்பு ரயில் பெட்டித் தொழிற்சாலை.**

இந்திய அரசு ரயில்வே அமைச்சகத்தின் கீழுள்ள உற்பத்திப் பிரிவான இணைப்பு ரயில் பெட்டித் தொழிற்சாலை, ஸ்விட்சர்லாந்து நாட்டு உடனுழைப்புடன் அமைக்கப்பட்டது. 1958-59-ல் இத்தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு இருக்கை மற்றும் வசதிகளில்லாத 350 ரயில் பெட்டிகளை உற்பத்தி செய்தது. பின்னர் முழு வசதிகள் நிறைந்த 750 ரயில் பெட்டிகளாக இந்த உற்பத்திக் திறன் படிப்படியாக உயர்ந்தது. இச்சாதனை 1973-74-ல் திட்டமிட்டபடி எய்த முடிந்தது. ஏற்றுமதியில் இணைப்பு ரயில் பெட்டித் தொழிற்சாலையும் முக்கிய பங்கு வகிக்கிறது. இத்தொழிற்சாலை தைவான், பர்மா, ஜாம்பியா, தாய்லாந்து, போன்ற பல நாடுகளுக்கு ரயில் பெட்டிகள் உதிரிப் பகுதிகள் முதலியவற்றை வழங்கியுள்ளன. பிலிப்பைன் தேசீய ரயில்வேயிடமிருந்து 30 ரயில் பெட்டிகளுக்கும், தைவானிலிருந்து 96 ரயில் பெட்டிகளுக்கும், பர்மா ரயில்வேயிலிருந்து உதிரிப் பகுதிகளுக்கும் வழங்கல் ஆணை கிடைத்துள்ளது. இதனிடமுள்ள ஏற்றுமதி ஆணையின் மொத்த மதிப்பு ரூபாய் 3.38 கோடியாகும். இத்தொழிற்சாலை தொடங்கிய நாளிலிருந்து இதுவரை 10,527 இருக்கை மற்றும் வசதிகளில்

லாத ரயில் பெட்டிகளை உற்பத்தி செய்துள்ளது. இதில் 8,527 பெட்டிகள் முழு வசதிகள் நிறைந்த பெட்டிகளாக மாற்றப்பட்டன. இத் தொழிற்சாலை 13,351 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கிறது.

**3. இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம்.**

ரூபாய் 123 இலட்சம் செலுத்தப்பட்ட மூலதனத்துடன் 'இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம்', 6,000 டெலிபிரிண்டர்களை உற்பத்தி செய்கிறது. இது 1,413 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கிறது. மின்சார தட்டச்சு இயந்திரம், 'பவர் க்யூபிகில்ஸ்' ( Power Cudicles ), 'ஸ்டாம்ப் கான்சலிங்' இயந்திரங்கள் போன்ற புதிய பொருள்களை உற்பத்தி செய்வதில் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது. 'ஸ்டாம்ப் கான்சலிங்' இயந்திரங்கள் 100-ஐ உற்பத்தி செய்ய இந்நிறுவனம் தொழில்நுட்ப வளர்ச்சி தலைமை இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளது.

**4. இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம்.**

அரசுத் துறையிலுள்ள பெரிய அளவுத் தொழிற்சாலைகளில் இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் ஒன்றாகும். இந்நிறுவனம் புகைப்படம் சம்பந்தப்பட்ட பொருள்கள், மற்றும், எக்ஸ்-கதிர் சுருள்களையும் தயாரிக்கின்றன. இத் தொழிற்சாலையின் மூலதன முதலீடு ரூபாய் 13.60 கோடியாகும். இது 1,957 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

சென்ற ஆண்டில் இந்த நிறுவனம் இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படச் சுருளுக்கான மூலப் பொருளை (Jumboos) மாற்றுவதன் மூலம் பாஸிடிவ் திரைப்படச் சுருளைத் தயாரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. மேலும் பாலியஸ்டரை மூலப் பொருளாகக் கொண்டு எக்ஸ்-கதிர் படச் சுருள், கற்பரப்பில் வரைந்த ஓவியங்கட்கான அச்சுப் படச்சுருள் ( Graphic Arts film ) ஆகியவற்றை உற்பத்திச் செய்யவும் திட்டமிட்டு வருகிறது.




**5. பாரத் கனரக மின் கருவிகள் நிறுவனம், திருச்சிராப்பள்ளி.**

இது இந்திய அரசு நிறுவியுள்ள முக்கியமான பெருந் தொழிற்சாலையாகும். இது செக்கோஸ்லோவாகியாவைச் சேர்ந்த திருவாளர்கள் ''டெக்னோ எக்ஸ்போர்ட்ஸ்'' ( M/s. Techno Exports ) நிறுவனத்தின் ஒத்துழைப்புடன், நிறுவப்பட்டுள்ளது. அனல் மின் நிலையத்துக்குத் தேவைப்படும் பெரும் கொதிகலன்கள் முதலியவற்றைத் தயாரிக்கிறது. திருச்சியிலுள்ள இத் தொழிற்சாலை இந்நாட்டில் அமைந்துள்ள பாரத் கனரக மின் கருவிகள் நிறுவனத்தைச் சேர்ந்த நான்கு பெரியதொழிற்சாலைகளில் ஒன்றாகும். இந்நிறுவனத்தின் நிறுவிய நிலை உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 31,000 மெட்ரிக் டன் கொதிகலன் கூட்டு உறுப்புகள் அல்லது 750 மெகாவாட்டுக்குச் சமமான ஆற்றல் ஆகும். இத் தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை 1,100 மெகாவாட்டாக உயர்த்துவதற்கு, ' 1973-74-ஆம் ஆண்டில், தனது முதல் நிலை விரிவாக்கத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தியுள்ளது. 1973 செப்டம்பரில், ரூபாய் 12.12 கோடி மதிப்பீட்டுச் செலவில் அரசு அனுமதித்துள்ள 2-ஆம் நிலை விரிவாக்கத் திட்டத்தைத் தற்போது இத்தொழிற்சாலை நிறைவேற்றி வருகிறது. இத் திட்டம், இதன் உற்பத்தித் திறனை 2,500 மெகாவாட்டாக அதாவது ஆண்டுக்கு 87,000 மெட்ரிக் டன் கொதிகலன்கள் கூட்டு உறுப்புகளாக உயர்த்தும். இத்தொழிற்சாலையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் விரிவாக்கப் பணித் திட்டம் 1976-77-ஆம் ஆண்டில் நிறைவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொழிற்சாலையின் தற்போதைய மூலதன முதலீடு சுமார் ரூபாய் 60.63 கோடியாகும். இது 8,565 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உற்பத்தியைப் பல திறப்படுத்துதல், புதிய பொருள் உற்பத்தி தொடங்கல் ஆகியவை குறித்த செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. விவரங்களுக்கு இறுதி வடிவமளிக்க இன்னும் சிறிது காலம் ஆகும்.



**6. அறுவை சிகிச்சை கருவிகள் தொழிற்சாலை, நந்தம்பாக்கம்.**

இந்திய மருந்துகள், மருந்துத் தயாரிப்புகள் நிறுவனம் சென்னைக்கு அருகில் உள்ள நந்தம்பாக்கத்தில் சோவியத் நாட்டின் ஒத்துழைப்புடன் அறுவை சிகிச்சைக் கருவிகள் தொழிற்சாலை ஒன்றை நிறுவியுள்ளது. இது ஆண்டொன்றுக்கு 25 இலட்சம் அறுவைச் சிகிச்சைக் கருவிகள் உற்பத்தி செய்யும் திறனுடையது. இத் தொழிற்சாலை 1965-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டு உற்பத்தியைத் தொடங்கியுள்ளது இது 1,011 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கிறது.

**7. உயவு எண்ணெய்க் கலவைத் தொழிற்சாலை.**

இந்திய எண்ணெய்க் கழகத்தின் உயவு எண்ணெய்த் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 1.4 இலட்சம் டன் கலவை லூப் ( Lube ) எண்ணெயை உற்பத்தி செய்யும் திறனுடையதாகும். இது ரூபாய் 1.10 கோடி மூலதன

முதலீட்டுடன் தொடங்கப் பட்டது. இது 125 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. இக்கழகம் 1,650 தார் பீப் பாய்களையும், 1,650 லூப் எண்ணெய் பீப்பாய்களையும் தயாரிக்கிறது. இதற்காக இந்திய எண்ணெய் கழகம் ரூபாய் 50 இலட்சம் மூலதன முதலீடு செய்துள்ளது. இத் தொழிற்சாலை 160 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது. இது சென்னையிலுள்ள எண் ணெய்த் தூய்மைத் தொழிற் சாலையின் விற்பனைத் தேவை களை நிறைவு செய்கிறது. இது 'டிகாயிலிங்' ( Decoiling ) தொழிற்சாலை ஒன்றை நிறுவு வதற்கும் திட்டமிட்டுள்ளது. இத்தொழிற்சாலை 1975-76-ல் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.


சென்னை உரத் தொழிற்சாலை

### 8. எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை, சென்னை.

மணலியில் நிறுவப்பட்டுள்ள சென்னை எண்ணெய்த் தூய் மைத் தொழிற்சாலை இம்மா நிலத்தின் தொழில் துறையின் வரலாற்றில் பெரும் வளர்ச்சி யைக் காட்டுவதாகும். இது ரூபாய் 43.02 கோடி மூலதன முதலீட்டுடன் செயல்பட்டு வருகிறது. இது ஆண்டொன் றுக்கு 25 இலட்சம் டன் தூய் மைப்படுத்தப்படாத எண்ணெ யைத் தூய்மைப்படுத்துகிறது. இது 505 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. இத் தொழிற்சாலை எம்.ஆர்.எல். ரப்பர் எக்ஸ்டெண்டர் ஆயில் ( M.R.L. Rubber Extender Oil ) அதிர்ச்சி தாங்கும் திர வம், டர்பன் தர எண்ணெய் ( Turbine Grade Oil ) முதலி யன போன்ற சிறப்புப்பொருள் களைத் தோற்றுவித்துள்ளது. இக்கழகம் ஆண்டொன்றுக்கு தூய்மைபடுத்தப்படாத 25 இலட்சம் டன் எண்ணெயைத் தூய்மைப்படுத்தும். தனது திறனை உயர்த்த அதாவது ஆண்டுக்கு 35 இலட்சம் டன் தூய்மைப் படுத்தப்படாத எண்ணெயைத் தூய்மைப் படுத்தும் அளவிற்கு உயர்த்த திட்டமிட்டுள்ளது. அதுபோல ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் டன் லூப் எண்ணெய் அளிக் கும் திறனை, ஆண்டுக்கு 2.7 இலட்சம் டன் லூப் எண்ணெய் அளிக்கும் திறனை உயர்த்தவும் கருதப்பட்டுள்ளது. மேலும் ஆண்டொன்றுக்கு 20 ஆயிரம் டன் உற்பத்தித் திறன் கொண்ட பாரஃபின் மெழுகை உற்பத்தி செய்யும் தொழிற் சாலை ஒன்றை நிறுவுவதற்கான செயற் குறிப்பும் உள்ளது.

### 9. சென்னை உரத் தொழிற்சாலை

சென்னை எண்ணெய்த் தூய் மைத் தொழிற்சாலையின் இணைத் தொழிற்சாலையாக நாஃப்தாவை மூலப்பொரு ளாகக் கொண்டு சென்னை உரத் தொழிற்சாலை என்னும் பெய


எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை, சென்னை.



ரில், பெரிய இரசாயன உரத் தொழிற்சாலை ஒன்று நிறுவப் பட்டுள்ளது. இத்தொழிற்சாலை அமோனியா, யூரியா, நைட்ரஜன், பொட்டாசியம், சோடியம் ஆகியவற்றை உற்பத்தி செய்கிறது. இது ரூபாய் 7,337 இலட்சம் மூலதனத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் ஏறத்தாழ 920 பேர் பணியாற்றுகின்றனர். 1974-ஆம் ஆண்டில் இது உற்பத்தி செய்த பொருள்களின் மதிப்பு ரூபாய் 5,194 இலட்சம் ஆகும். நைட்ரஜன், பொட்டாசியம், சோடியம் தயாரிக்கும் தொழிற்சாலையின் மூன்றாவது பிரிவு ஒன்றைக் கட்டுவித்துச் செயல்படத் தொடங்குவதற்காக இந்நிறுவனம் திருவாளர்கள் ''டார் ஆலிவர் இந்தியா நிறுவனத்துடன்'' ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது. இம்மூன்றாவது பிரிவு 1976-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வாக்கில் கட்டி முடிக்கப்பட்டு, செயல்படத் தொடங்கி வைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.



**10. கனரக வண்டிகள் தொழிற்சாலை, ஆவடி**

இத்தொழிற்சாலை படையினருக்குத் தேவைப்படும் எல்லா வகையான போர்முனை வண்டிகளையும், ஏனைய கனரக வண்டிகளையும், கருவிகளையும் உற்பத்தி செய்கிறது. இந்தத் தொழிற்சாலையின் மூலதன முதலீடு சுமார் ரூபாய் 20 கோடி ஆகும். இது 5,758 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

**11. படைக்கலன்கள் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.**

இத்தொழிற்சாலை பாதுகாப்புக் காரியங்களுக்கான துப்பாக்கிகளைச் செய்கிறது. இந்திய அரசு இத்தொழிற்சாலைக்கு ஏறத்தாழ ரூபாய் 14.5 கோடி மூலதன முதலீடு செய்துள்ளது. இத்தொழிற்சாலையின் பணி மனநிறைவளிப்பதற்காக உள்ளது.

**12. சேலம் உருக்காலை**

சேலத்தில் சிறப்பு உருக்காலை ஒன்றை நிறுவுவதென்று 1972-ஆம் ஆண்டு மே திங்களில் இந்திய அரசு, முதலீட்டு முடிவு எடுத்துள்ளது. அவ்வுருக்காலையில் கீழ்க் காணும் பொருள்கள் செய்யப்படும்:—

| தகடுகளும் துண்டுகளும் | ஆண்டொன்றுக்கு (டன்கள்) |
|---|---|
| துருப்பிடிக்காத எஃகு-குளிரூட்டி உருட்டி அடிக்கப் பட்டவை | 65,000 |
| வெப்பம் ஊட்டி உருட்டி அடிக்கப் பட்டவை | 5,000 |
| சிலிகான் உருக்கு (Silicon steel) குளிரூட்டி உருட்டி அடிக்கப்பட்டவை | 75,000 |
| ஏனைய சிறப்பு உருக்குகள்-வெப்பம் ஊட்டி உருட்டி அடிக்கப்பட்டவை | 50,000 |
| மொத்தம் | 1,95,000 |



இத்திட்டத்தைச் செயற்படுத்தும் பொருட்டு 1972-ஆம் ஆண்டு அக்டோபரில் சேலம் உருக்காலை நிறுவனம் அமைக்கப்பட்டது. இத்தொழிற்சாலையை இரண்டு கட்டங்களில் நிறுவுவதென்று இந்திய அரசு முடிவு செய்துள்ளது. உருக்காலைக்கும், நகரியப் பகுதிக்கும் நிலம் கையகப்படுத்தும் பணி பெரும்பாலம் முடிவடைந்து விட்டது. 31-3-1974-ஆம் நாள்வரை ரூபாய் 4.75 கோடி செலவிடப்

பட்டுள்ளது. 1974—75-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ஏறத்தாழ ரூபாய் 9.75 கோடி ஆகியிருக்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அரசு போதுமான நிதி ஒதுக்கீடு செய்யாத காரணத்தால், இத்தொழிற்சாலை குறித்த பணிகள் பெரும்பாலும் மிக மெதுவாகவே நடைபெறுகின்றன. 1974-75-ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட ரூபாய் 15 கோடிக்கு எதிராக ரூபாய் 3 கோடியாக உயர்த்தப்பட்டது. அவ்வாறிருப்பினும், இந்நிதி ஒதுக்கீடு தேவைக்குப் பெரிதும் குறைவாகவே உள்ளது. 1975-76-ஆம் ஆண்டுக்காக மத்திய அரசு வரவு-செலவு திட்டத்தில் செய்துள்ள நிதி ஒதுக்கம் ரூபாய் 3 கோடி அளவில் மிகச் சொற்பமாகவே உள்ளது. இந்த ஒதுக்கீடு முந்தைய நிதி ஆண்டின் ஒதுக்கீட்டைவிட குறைவானது.

### மாநில அரசுத்துறை-கூட்டுத்துறை

தமிழக அரசுத் துறையில் தொழில் திட்டங்கள் பல ஏற்படுத்தப் பட்டுள்ளன. மேலும் புதிய திட்டங்கள் பலவற்றை உருவாக்கிட திட்டமிடப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் சிமிட்டி, உருக்கு, சர்க்கரை, ஸ்கூட்டர், நைலான் தொழில்கள் ஆகியவை இடம் பெறுகின்றன.

அதுபோலவே, கூட்டுத் துறையில் பெரிய அளவில் சர்க்கரைத் தொழிற்சாலைகள், நூற்பு ஆலைகள் ஆகியவை ஏற்படுத்தப் பட்டுள்ளன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் கூட்டுத் துறையில் பெரிய தொழில்களுக்கான 20 புதிய திட்டங்களை நிறைவேற்ற எடுத்துக் கொண்டுள்ளது. மேலும், பல திட்டங்களுக்கும் திட்டமிடப்பட்டு வருகிறது.

### தனியார் துறை

இம்மாநிலத்தில் 1974-ஆம் ஆண்டில் தனியார் தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்களில், இயந்திரக் கருவிகளுக்கான கியர்கள் பதப்படுத்தப்பட்ட தோல், ஸ்பைரல் ஹைபாய்ட் கியர்கள் (Spiral Hypoid Gears), 'ரீடுகான்டாக்ட்ஸ்', காகிதக் கூழ், சிப்பம் கட்டும் காகிதம், மேலுறைக் காகிதம் ஆகியவை தயாரிப்பதற்கான தொழில்கள் இம்மாநிலத்தில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் குறிப்பிடத்தக்க தொழில் பிரிவுகளாகும்.

மேலும், பதப்படுத்தப்பட்ட தோல், கயிறு, விசைத்தறி, ஸ்பின் கியர்கள் மோட்டார் வண்டி அதிர்ச்சித் தடை கருவிகள் (Automobile Shock Absorbers), எஸ். ஜி. இரும்பு வார்ப்படங்கள், பி.எல்.எஸ். சோடியம், பதப்படுத்தப்பட்ட கடற் பொருட்கள், மோட்டார் வண்டி அச்சுக்கள், சாலிசிலிக் அமிலம் Salicylic Acid) சிவப்புப் பாஸ்வரம் உலர் மின்கலங்கள், ஃபைபர் கண்ணாடி (Fibre glass), பாலதீயன் தொழில் (நுட்பம், செயற்கை ரப்பர் பாலங்கள், அச்சு வார்ப்படங்கள், கலப்பின எஃகு வார்ப்படங்கள், மென் ஃபெரைட்ஸ் (Soft Ferites) காரயாத சல்ஃபர் மற்றும் 'பென்சீன் ஹெக்ஸர் குளோரைடு' போன்றவை தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கான அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**பதிவு பெற்ற தொழிற்சாலைகளின் வளர்ச்சி :**

தமிழகத்தில் பதிவு பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும், அந்தத் தொழிற்சாலைகளில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கையும் நிலையாக உயர்ந்து வருவது கீழ்க்காணும் அட்டவணையிலிருந்து புலனாகின்றது.

அட்டவணை

| ஆண்டு | | தொழிற்சாலைகளின் எண்ணிக்கை. | தொழிலாளர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 1970 | ... | 6,365 | 4,22,640 |
| 1971 | ... | 6,412 | 4,32,488 |
| 1972 | ... | 6,651 | 4,45,100 |
| 1973 | ... | 6,816 | 4,53,000 |
| 1974 | ... | 6,985 | 4,98,798 |

மேற்கண்ட அட்டவணையிலிருந்தும் தமிழகம் தொழில் வளர்ச்சியில் முன்னேறி வருகிறது என்பது புலனாகிறது.

**பதிவுபெற்ற நிறுவனங்கள்:**

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில் பெரிதும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. அது, கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து தெரியவருகிறது.

அட்டவணை

| ஆண்டு | | நிறுவனங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | அரசுத் துறை | தனியார்துறை |
| 1969—70 | ... | 13 | 103 |
| 1970—71 | ... | 12 | 127 |
| 1971—72 | ... | 27 | 141 |
| 1972—73 | ... | 20 | 166 |
| 1973—74 | ... | 37 | 212 |

# தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில்

தமிழ் நாட்டில் சர்க்கரைத் தொழில் நான்காவது ஐந்தாண்டுத்திட்டக் காலம் (1969 74) முழுவதும் சிறந்த சாதனை புரிந்து வந்துள்ளது. இத் தொழில் 1973-74 சர்க்கரை ஆண்டில், ஒரு புதிய சாதனைச் சிகரத்தை எட்டியது. முன்னெப்போதுமிராத அளவு, 4.43 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்து அருஞ் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. அனைத்திந்திய நோக்கில் பார்க்கின்றபோது, இந்நிலை மேலும் சிறப்பாகப் போற்றப்படுவதற்குரியதெனக் கருதப்படுகிறது.

### கரும்பு பயிரிடும் பரப்பு குறைந்த நிலையிலும் சாதனை!

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்திலும் (1969-70), 1972-73—ஆம் ஆண்டிலும் இருந்த நிலையைக் காட்டிலும், 1973-74-ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவு உற்பத்தி உயர்வை எட்டியுள்ளது. இந்த மாநிலத்தில் கரும்பு பயிரிடப்படும் மொத்தப் பரப்பு குறைந்த நிலையிலும் நாம் அடைந்த பெரிய சாதனையாகும்!

### நான்காவது திட்டக் காலத்தின் போது எய்திய சாதனை!

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின்போது (1969-74) தமிழ் நாட்டில் சர்க்கரைத் தொழில் படிப்படியாக முன்னேற்றமடைந்து வந்தது, 1969-70—ஆம் ஆண்டில் 2.88 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. 1972-73—இல் உற்பத்தியளவு 3.31 இலட்சம் டன்னை எட்டியது. 1973-74-இல் 4.43 இலட்சம் டன் என்னும் சாதனைச் சிகரத்தை எட்டியது. ஆக, 1972-73-ஆம் ஆண்டின் உற்பத்தியளவைக் காட்டிலும் 1973-74-ஆம் ஆண்டில் 1.12 இலட்சம் டன் கூடுதலாக உற்பத்தியாகியுள்ளது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தியளவு சுமார் 54 சதவீதம் உயர்ந்துள்ளது. முந்திய ஆண்டு உற்பத்தியளவைக் காட்டிலும், 1973-74-ஆம் ஆண்டில் உற்பத்தியளவு சுமார் 34 சதவீதம் உயர்ந்துள்ளது. இதே ஆண்டில் நாடு முழுவதையும் எடுத்துக் கொண்டால் மொத்த உற்பத்தியளவில் கிட்டத்தட்ட 10 சதவீதம் குறைந்துள்ளது. இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் தமிழ்நாட்டில் 1972-73-ஆம் ஆண்டைக்காட்டிலும் 1973-74-ல் உற்பத்தியளவு 1.12. இலட்சம் டன் உயர்ந்திருக்க நாட்டின் மற்றப் பகுதிகளின் மொத்த உற்பத்தியளவு 0.35 இலட்சம் டன் குறைந்துள்ளது. மேலும், ஒரு சிறப்பான கூறு என்னவெனில், தமிழ்நாட்டில் மொத்தம் கரும்பு பயிரிடப்படும் பரப்பு குறைந்திருந்த நிலையிலும் இச்சாதனையை எட்டினோம் என்பதேயாகும்.

1967-70-ல் கரும்புப் பயிரிடப்பட்ட நிலங்களின் மொத்தப் பரப்பு 1.72 இலட்சம் எக்டேர்கள்; அப்பரப்பு 1973-74-ல் 1.13 இலட்சம் எக்டேர்களாகக் குறைந்துவிட்டது.

1973—74—ஆம் ஆண்டில் பிழியப்பட்ட கரும்பு, உற்பத்தியாகிய சர்க்கரை இவற்றின் அளவு.

தமிழகத்திலுள்ள 16 சர்க்கரை ஆலைகளாலும் பிழியப்பட்ட கரும்பின் மொத்த அளவு, 1972-73-ஆம் ஆண்டில் 40.08 இலட்சம் டன்னாக இருந்தது. இது, 1973-74-இல் 52.87 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள 7 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும், பிழிந்த கரும்பின் அளவு, 1972-73-ல் 12.91 இலட்சம் டன்னாக இருந்தது. 1973-74-இல் 19.76 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இதிலிருந்து 1972-73-ஆம் ஆண்டினை விட 1973-74-ஆம் ஆண்டில் 53 சதவீதம் கூடுதலாகக் கரும்பு பிழியப்பட்டது என்பது தெளிவாகிறது.

தமிழ்நாட்டிலுள்ள 9 கூட்டு பங்கு சர்க்கரை ஆலைகளும் 1972-73-ல் 27.18 இலட்சம் டன் கரும்பு பிழிந்திருக்க, 1973-74-ல் 33.11 இலட்சம் டன் கரும்பு பிழிந்துள்ளன.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் உற்பத்தியளவைப் பொறுத்த வரை, 1972-73-ஆம் ஆண்டில் 1.10 இலட்சம் டன்னாக இருந்த சர்க்கரை உற்பத்தி 1973-74-ஆம் ஆண்டில் 1.73 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. கூட்டுறவுத் துறையில், 1972-73-ஆம் ஆண்டில் எய்திய சர்க்கரை உற்பத்தியளவைக் காட்டிலும், 1973-74-ஆம் ஆண்டு 58 சதவீதம் கூடுதல் அளவு சர்க்கரை உற்பத்தியாகியுள்ளது.

கூட்டுப் பங்கு சர்க்கரை, ஆலைகளைப் பொறுத்தவரை சர்க்கரை உற்பத்தியளவு 1972-73-ல் 2.21 இலட்சம், டன்னாக இருக்க, 1973-74-ல் 2.70 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இந்திய அரசு, தற்போது கரும்புக்கு வரையறுத்துள்ள குறைந்த அளவு விலையானது, இம்மாநிலத்தில் கரும்பு பயிரிடுவதற்குரிய ஆர்வத்தைக் குறைக்கும் முட்டுக்கட்டையாக உள்ளது.

இதன் விளைவாக, கரும்பு பயிரிடும் பரப்பு குறைய நேரிடும்; அதுவும் குறிப்பாக நெல், வாழை முதலிய வேறு பயிர்கள் பயிரிடுவதற்குக் கிடைக்கின்ற கவர்ச்சிகரமான விலையையும், கரும்புப் பயிரிடும் செலவு உயர்வையும் கருத்திற்கொண்டு பார்த்தால், கரும்பு பயிரிடுவது இனி வெகுவாகக் குறைந்து விடும்.

### கரும்பு விலைபற்றிய மாநில அரசு தெரிவித்த கருத்துக்கள்

கடந்த ஆண்டில், குறிப்பாக இரசாயன உரங்களின் விலை பெரிதும் உயர்ந்த காரணத்தால், கரும்பு பயிரிடுவதற்காகும் செலவு பெருமளவுக்கு உயர்ந்ததை யொட்டி, கரும்பு பயிரிடுவோர்க்கு ஆதாயமளிப்பதாயிருக்கும் வகையில் உள்ள நிலையை யொட்டி, கரும்புக்கு விலைகளை வரையறுக்குமாறு வேளாண் விளைபொருள் விலைகள் குறித்த ஆணைக்குழுவிடமும், இந்திய அரசிடமும் மாநில அரசு பரிவுரை செய்து வந்துள்ளது. மாநில அரசானது 8.5 சதவிகித சர்க்கரை உற்பத்தி அளவுடன் இணைந்து 1974-75—ஆம் ஆண்டில் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 125/- விலை வழங்கப்பட வேண்டுமென்று கருத்துத் தெரிவித்திருந்தும்கூட, இந்திய அரசானது 1973-74-ஆம் ஆண்டின் விலை அளவுக்கு மேல் டன் ஒன்றுக்கு ரூபாய் 5 மட்டும் என்கின்ற மிகக் குறைந்த அளவில் விலை ஏற்றம் அளித்து, கரும்பின் விலையை டன் ஒன்றுக்கு ரூபாய். 85 ஆக வரையறுப்பதென முடிவு செய்துள்ளது. கரும்புக்கு இந்த அளவு விலை வரையறுப்பதானது, கரும்பு பயிரிடும் செலவு உயர்வைச் சரிகட்டுவதற்கு முற்றிலும் போதுமானதாக இராது. இப்போது, ஏக்கர் ஒன்றுக்கு கரும்பு பயிரிட குறைந்தது ரூபாய் 1,100/- செலவு ஆகிறது. மீண்டும், 1975-76 சர்க்கரை ஆண்டில் கரும்புக்கு ஒரு டன்னுக்கு ரூபாய் 125/- என்னும் குறைந்த அளவு வரையறுக்கப்பட வேண்டுமென்று தமிழ் நாடு அரசு மறுபடியும் வற்புறுத்தியுள்ளது. மேற்சொன்னவாறு கரும்புக்கு ஆதாயமளிக்காத வகையில் விலை வரையறுத்ததன் காரணமாக, கடந்த சில ஆண்டுகளில் இம் மாநிலத்தில் கரும்பு பயிரிடப்படும் பரப்பு குறைந்துள்ளதை யொட்டி, தமிழ்நாடு அரசு தெரிவித்த கருத்துக்களுக்கு



இந்திய அரசு உரிய மதிப்பு அளிக்கும் என்று நம்பப்படுகிறது.

### சர்க்கரை ஏற்றுமதி !

நமது நாட்டில் அண்மை ஆண்டுகளில் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் நமக்கு அந்நியச் செலாவணி கிடைக்கிறது. அந்நிய வாணிபத்தில் இது ஒரு சிறப்பான அம்சமாகும்!

மின்சக்திப் பற்றாக்குறை, உலகின் பெரும்பகுதிகளில் சிறந்த கரும்புப் பயிர் விளைச்சல் தவறியமை ஆகிய காரணங்களால் உலக நாடுகளில் சர்க்கரை விலை பெரிதும் உயர்ந்தது. ஐந்து ஆண்டுகளாக டன் ஒன்றுக்கு ரூபாய் 1000-க்கு குறைவாக இருந்த T. O. B. விலை டன் ஒன்றுக்கு ரூபாய் 10,000 ஆக உயர்ந்தது. அனைத்து நாடுகள் அங்காடியில் ஒரு சமயம் டன் ஒன்றுக்கு 700 டாலர்களாக உயர்ந்தது. சர்க்கரையின் இந்த அந்நியச் செலாவணி உயர்வைச் சாதகமாக்கிக் கொண்டு, ஐந்து இலட்சம் டன் சர்க்கரையை ஏற்றுமதி செய்ய இந்திய அரசு திட்டமிட்டது. இதனால் சுமார் ரூபாய் 275 முதல் 300 கோடி வரை அந்நியச் செலாவணி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது முன் எப்போதையும் விட அதிகமானதாகும். இவ்வாறு நாட்டின் அந்நியச் செலாவணி ஈட்டித் தரும் பொருள்களில் சர்க்கரையும் ஒன்றாக விளங்குகிறது. மேலும் மத்தியக் கருவூலத்திற்குச் சுமார் ரூபாய் 150 முதல் 170 கோடி வரை சேரும். 1974-75-ல் ஐந்து இலட்சம் டன் சர்க்கரையை ஏற்றுமதி செய்ய இந்திய அரசு ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ளது.

இத்தேசிய நடவடிக்கையில் தமிழ்நாடு சர்க்கரைத் தொழில் குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளது. 1973-74-ல், ஏறத்தாழ 50,000 டன் சர்க்கரை பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 1973-74-ல் மொத்த ஏற்றுமதியில் 17,000 டன்சர்க்கரையைத் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஏற்றுமதி செய்துள்ளன என்பது பெருமைப்படத்தக்கதாகும். வெளிநாடுகளுக்கு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் சர்க்கரை ஏற்றுமதி செய்தது இதுவே முதல் முறையாகும்.

1974-75-ல், இம் மாநிலத்தில் 21,000 டன் சர்க்கரையை ஏற்றுமதி செய்ய ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதை விரைவுபடுத்தவும், தற்போதுள்ள சர்க்கரை ஆலைகளை விரிவுபடுத்தவும் பொருத்தமான இறக்குமதித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது. அப்போதுதான் டர்போ ஆல்டர்னேட்டர்,(Turbo Alternators) கொதிகலன்கள் போன்ற அதிக மின் சுமை உள்ள கருவிகள் கூட்டுப் பொருளாக அல்லது மூலப் பொருளாகவும் அதற்குத்தேவைப்படும் துணைப் பொருளாகவும் இறக்குமதி செய்யப்படலாம். சர்க்கரை ஏற்றுமதி மூலம் சேர்ந்து வரும் ஆதாயத்தைப் பகிர்ந்து கொள்ள வேளாண்மை விலைக் குழு கருத்து தெரிவித்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. சர்க்கரைத் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக உபரியாக உள்ள தொகையிலிருந்து மைய அரசு நிதி ஒதுக்க வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் அனைத்து நாடுகள் அங்காடியில் சர்க்கரைக்குள்ள விலையேற்றத்தை வைத்து நமது நாடு முழு அளவிலும் பயனடைய முடியும்.



# தொழில் நுட்பப் பயிற்சி நிலையங்கள்

கிண்டியிலுள்ள தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளி, பொறியியல் பட்டதாரிகளுக்கும், தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்கும், தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்றவர்களுக்கும், அச்சு வடிவமைப்பு, அச்சு வார்த்தல், கருவிகள் செய்தல், இயந்திரங்களை இயக்குதல், உலையில் காய்ச்சி அடித்துப் பக்குவப் படுத்துதல் (Forge and Heat treatment) ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சியை அளித்து வருகிறது. இப்போது 60 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். பட்டதாரிகளுக்குத் திங்கள் தோறும் ரூபாய் 200/-ம், தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்கு ரூபாய் 125/-ம், தொழில் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்றவர்களுக்கு ரூபாய் 75/-ம் பயிற்சி உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. பயிற்சிக் கால அளவு, கருவி, அச்சு வடிவமைப்புக்கு 12 மாதமும், ஏனையவற்றிற்கு 18 மாதமும் ஆகும்.

அறிவியல் தொழில் நுட்பத் துறையில் ஏற்படும் முன்னேற்றங்களையொட்டி இருக்கும் வகையில், மின் அணுக் கருவிகள், ரப்பர் தொழில், நுட்பவியல் குளிர் வசதி இயந்திரம் போன்ற புதிய பாட முறைகளில் பயிற்சி அளிப்பதற்காக நான்காவது திட்டத்தில் ரூபாய் 22.35 இலட்சம் செலவில் விரிவுபடுத்தும் திட்டம் ஒன்றுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இந்தக் கூடுதல் பாட முறைகள் பொறியியல் பணியாளர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதுடன் தொழிற்சாலைகளின் நவீனத் தேவைகளை நிறைவு செய்யும். கூடுதல் கட்டட வேலை முடிந்து, தேவைப்பட்ட இயந்திரங்களும் சாதனங்களும் வாங்கப்பட்டுள்ளன. இந்த கூடுதல் பாடமுறைகளை விரைவில் தொடங்குவதற்கான தொடக்க ஏற்பாடுகள் நடந்தேறி வருகின்றன.

திண்டுக்கல்லில் அமைக்கப்பட்ட கருவிகள், அச்சு அமைப்புப் பயற்சி நிலையம், பற்பல பொறியியல் பிரிவுகளுக்கும், குறிப்பாக, பூட்டு தயாரிப்பதற்கும் வேண்டிய கருவிகளையும் அச்சுக்களையும் வடிவமைத்துத் தயாரிப்பதிலும் (நூலறிவிலும், செயலறிவிலும்) சிறப்புப் பயிற்சியளித்து வருகிறது. பயிற்சிக் காலம் 3 ஆண்டுகளாகும். இப் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்வதற்கான குறைந்த அளவு கல்வித் தகுதியானது பள்ளியிறுதித் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பயிற்சியாளர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூபாய் 50 பயிற்சி உதவித்தொகையாகக் கொடுக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தில் இதுவரை 92 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். தற்போது 60 பயிற்சியாளர்களுக்கு மூன்று தொகுதிகளாகப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

# தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள்

தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்குத் தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள் மிகவும் இன்றியமையாததாக இருப்பதால் கிண்டி, மதுரை, பேட்டை, அம்பத்தூர், காட்பாடி ஆகிய 5 இடங்களில் நூலகங்களுடன் கூடியதொழில் நுட்பத் தகவல் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றினுள் கிண்டியிலுள்ள தொழில் நுட்பத் தகவல் பிரிவு மிகவும் முக்கியமானதாகும். நல்ல பல நூல்களைக் கொண்ட நூலகம் ஒன்று இந்தப் பிரிவில் உள்ளது. வெளியீடு-மொழி பெயர்ப்புப் பிரிவு ஒன்றும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவில், தொழில் நுட்பத் திரைப் படங்களைத் திரையிடுவதற்கும், தொழில் நுட்பக் கருத்தாங்குகளை நடத்துவதற்கும் சிறந்த சாதனங்களைக் கொண்ட அரங்கு ஒன்று உள்ளது. திரைப்படங்கள் தயாரிப்புப் பிரிவு ஒன்றும், நுண் செய்திப் படங்கள் தயாரிப்புப் பிரிவு ஒன்றும் இத்துடன் இணைந்துள்ளன.

சிறு தொழில் குறிப்பேடு, பெருந்தொழில் குறிப்பேடு, சிறு தொழில் வழி காட்டி நூல் போன்ற பயனுள்ள நூல்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் இப் பிரிவு வெளியிட்டு வருகிறது.

மதுரை, பேட்டை, அம்பத்தூர் காட்பாடி ஆகிய 4 இடங்களிலுள்ள தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள், தொழிற்பேட்டையிலும், தொழிற்பேட்டையைச் சுற்றிலும் உள்ள தொழிலதிபர்களுக்கு இது போன்ற வசதிகளைத் தங்களுடன் இணைந்துள்ள நூலகங்கள் மூலமாக அளிக்கின்றன. 1974-75ல் கிண்டி, அம்பத்தூர் ஆகிய 2 இடங்களிலுள்ள தொழில் நுட்பத் தகவல் பிரிவுகளில் இதுவரை 908 தொழில் நுட்ப நூல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. 18,363 தொழிலதிபர்கள் இந்த இடங்களைப் பார்வையிட்டுள்ளனர்.







தமிழ்நாடு அரசு எந்தத் திட்டமானாலும்-விரைவாகவும் தீவிரமாகவும்-முன்னோடியாகவும் செயல்படுத்தி வருகிறது. சமூக- பொருளாதாரத்துறையில் சாதனைப் பட்டியல்கள் குவிந்து வருவதைப் போல், பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையிலும் சாதனைகளைத் தொடர்ந்து செய்வதில் தமிழக அரசு முதன்மையாகத் திகழ்கிறது. உணவு-உடை-இருப்பிடம் இம்மூன்றும் தனிமனிதனின் தேவைகளாகும். இதில் பெரும் பகுதிப் பணியைத் தமிழக அரசு முடித்துவிட்டது என்றே சொல்லலாம். தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு வசதிகளை மக்களுக்கு ஏற்படுத்தித் தருகின்ற பணியையும் நிறைவேற்றி வருகிறது.

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு எல்லாவிதமான முயற்சிகளையும், ஒத்துழைப்பையும் கொடுத்து வருகிறது. விவசாயிகளுக்குத் தேவையான கடன்-தரமான விதைகள் - உரம் இவை யாவும் வழங்கி ஊக்குவித்து வருகிறது. அத்துடன் பணியை நிறுத்திவிடாமல் மேலும் பொதுப் பணித்துறையின் மூலம் வேளாண்மைக்குத் தேவையான தண்ணீரையும் கொடுத்து வருகிறது. பாசனத்திற்கு வழியில்லாத இடங்களில், புதிதாக அணைக்கட்டுகளைக் கட்டி நீரைக் தேக்கி வருகிறது. அதன்மூலம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. விவசாயிகளின் துயர் துடைக்கப்படுகிறது. அத்துடன் உணவு உற்பத்தியும் பெருகுகிறது.

திருச்சி மாவட்டம் கடவூர் பகுதியில் பொன்னனி ஆற்று நீர் பாசனத்திற்குப் பயன்படாமல் சென்று கொண்டிருந்தது. அங்கு பொன்னனி ஆற்று நீர்த் தேக்கத்தை தமிழ்நாடு அரசு ஒரு கோடி ரூபாய் செலவில் அமைத்துள்ளது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொன்னனி ஆற்று நீர்த் தேக்கத்தை 13-7-75 அன்று திறந்து வைத்துப் பாசனத்திற்கு வழி செய்துள்ளார்கள். இந்த நீர்த் தேக்கத்தில் சுமார் 1,500 ஏக்கர் நிலம் பாசனவசதி பெறுகிறது. ஒருபோகச் சாகுபடிக்கும் வழியின்றி இருந்த நிலங்கள் இருபோகச் சாகுபடிக்குப் பாசன வசதி பெற்றுள்ளது. மேலும் இந்த நீர்த் தேக்கத்தால் நூற்றுக்கணக்காக கிணறுகளில் நீர்பிடிப்பு ஏற்பட்டு மேலும் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

திருச்சி மாவட்டத்தில் கண்ணூத்து ஓடை நீர்த் தேக்கத் திட்டப்பணிகளை முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்துள்ளார்கள். இதன்மூலம் சுமார் 600 ஏக்கர் நிலத்திற்கு மேல் புதிய பாசன வசதி பெறுகின்றன. 200 ஏக்கர் நிலம் நிரந்தரப் பாசன வசதி பெறுகின்றன.

சென்னையில் பல்வேறு இடங்களில் சாலைகளில் வாகனங்களும் பாதசாரிகளும் கடந்து செல்வதற்கு நெருக்கடியும், தாமதமும் ஏற்படுவதால், அதைத்தவிர்க்க் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் அரசு சுரங்கப் பாதைகளை அமைத்து வருகிறது. ஏற்கெனவே அண்ணா சாலையிலும், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அரசுப் பொது மருத்துவமனை அருகிலும் சுரங்கப் பாதைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது மூர்மார்க்கெட் பகுதியில் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு 15-7-75 அன்று முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சென்னை மெரீனா சாலையில் கண்ணகி சிலை அருகிலும் சுரங்கப் பாதை வேலைகள் நடைபெற்று வருகின்றன. நெரிசல் நேரங்களில் ஏற்படுகின்ற நெருக்கடியைத் தவிர்ப்பதற்காகச் சுரங்கப் பாதைகள் தொடர்ந்து அமைக்கப்பட்டு வருகின்றன.

எந்தத் துறையானாலும் தமிழ்நாடு அரசு சாதனைகளைப் புரிகிறது.; மக்கள் வேதனைகளைத் தீர்க்கிறது! பொதுப் பணித் துறையும், நெடுஞ்சாலைத் துறையும் பல்வேறு வசதிகளை அளித்து வருகின்றன! தமிழ்நாடு அரசின் பணிகள் தொடரும்! வெல்லும்!

ம. அரி.

## சென்னையில் புதிய சுரங்கப் பாதை





# பூம்புகார் பாவை மன்றத்தில்....

ஆண்டநாள் ஆண்டு மாண்ட புகழ் படைத்த பூம்புகார்ப் பெருநகரம் மீண்டும் அப்புகழை அடைந்துவரும் இந்நாளில்—

முதல்பணியாகச் சிலப்பதிகாரக் கலைக் கூடம் அங்கே உருவாகியது!

இளங்கோவடிகளின் காப்பியச் சிலம்பு, சிற்பிகளின் கைவண்ணத்தாலும் கலைநயத்தாலும் சிற்பச் சிலம்பாக உருவாகிச் சிலப்பதிகாரக் கலைக்கூடமாகக் காட்சியளித்து வருகிறது.

எழுநிலை மாடமும் தோரணவாயில்களும் அக் கலைக்கூடத்தின் எழிலுக்கு ஏற்றம் கூட்டி, ஈடில்லாப் பெருமை சேர்க்கின்றன.

இத்தனையையும் உருவாக்கிப் பூம்புகாருக்குப் புதிய வாழ்வும் பெருமையும் அளித்து வரும் நமது முதல்வர் கலைஞர் அவர்கள், பூம்புகாருக்குப் பொலிவூட்டும் பணிகளைத் தொடர்ந்து செய்ய வகுத்தளித்த திட்டங்கள் தாம்—

பூம்புகாரிலே மீனவர்களுக்கு 800 புதிய குடியிருப்புகள், நெடுங்கல் மன்றம், இலஞ்சி மன்றம், பாவை மன்றம் இன்ன பிறவும் புதிய பொலிவுடன் அமைக்கப்பட்டுள்ள பாவை மன்றத்தில் திருக்குறள் இன்பத்துப் பாலிலுள்ள எட்டுக் குறட்பாக்கள் எழிலோவியச் சிற்பங்களாக உருவாக்கப்பெற்றுள்ளன. அந்தக் குறட்பாக்கள் வருமாறு:

''அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்''

''துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து''

''வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர் சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்''



# அட்டை சொல்லும் செய்தி

''எழுதுங்கால் கோல்காணுக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து''

''அவர்தந்தார் என்னும் தகையால் இவர் தந்துஎன்
மேனிமேல் ஊரும் பசப்பு''

''அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை.''

''யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.''

''கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.''

இக்குறள் எட்டுக்கும் எட்டுச் சிற்பங்கள். ஒவ்வொரு சிற்பமும் ஆறடி உயரம். வனப்புக் குலுங்கும் அந்தச் சிற்பங்கள் போன்று இது வரை யாரும் செய்யவில்லை. அதுவும் தமிழ் நாட்டில் திருக்குறளுக்கு விளக்கமாகச் சிற்பங்கள் செய்யப்பட்டிருப்பது இதுதான் முதல்தடவையாகும்.

குறளுக்குச் சிற்ப வடிவமைத்து, ஆளு யரத்துச் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ள முத லிடம் பூம்புகாரிலுள்ள பாவைமன்றம் ஒன்றில்தான்!

பாவை மன்றத்திலுள்ள எட்டுத் தூண் களிலும் இந்தச் சிற்பங்கள் வைக்கப்பட் டுள்ளன.

எழில் குலுங்கும் அந்தச் சிற்பங்களில் நான்கை இந்த இதழ் 'தமிழரசு' முகப்பில் காணலாம்.

—'மாணு'

# சிறு துளி பெரு வெள்ளம்

## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்யுங்கள்

TNSC BANK

**டெபாஸிட்டுகளுக்கு எங்கள் வட்டி விகிதங்கள் :**

1. சீசன் டெபாஸிட்டுகள்- ரூ 1000/-மும் அதற்கு மேலும் — வருடத்திற்கு
   15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை — 3.25%
   46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை — 3.75%
2. தவணை டெபாஸிட்டுகள்- ரூ 100/-ம் அதற்கு மேலும்

| காலம் | வருடத்திற்கு |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக | 5.75% |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக | 6.25% |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக | 7.25% |
| 1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக | 8.25% |
| 3 வருடங்களும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை | 9.25% |
| 5 வருடங்களுக்கு மேல் | 10.25% |

3. சேவிங்ஸ் கணக்கு — 5.75%
4. நடப்பு (current) கணக்கு — வட்டி கிடையாது



## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்,

379, நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ரோடு, சென்னை-600 001
தந்தி : 'URBANK' போன் : 20367 (3 லைன்கள்)
டெலக்ஸ் : MS 7225

கிளைகள் : அண்ணா நகர், அண்ணா சாலை (காமதேனு), அண்ணா சாலை (அண்ணா சிலை), அசோக் நகர், பெஸண்ட் நகர், எழும்பூர், காந்தி நகர், கிரீன்வேஸ் ரோடு, ஜவஹர் நகர், கெல்லீஸ், தங்கசாலை, மைலாப்பூர், மைலாப்பூர் குளம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், ராயப்பேட்டை, ராஜா அண்ணாமலைபுரம், சாந்தோம், சாஸ்திரி நகர், ஷெனாய் நகர், தியாகராய நகர் & திருவல்லிக்கேணி.

TNSCB : 122/75

# பார்த்தோம்! படித்தோம்!!

### வேண்டுவோர் பலர் :

தமிழரசு தொழில் வளர்ச்சி மலர் கண்டேன். எங்கே தேடினாலும் கிடைக்காத தகவல்களைத் தொகுத்துத் தந்துள்ளீர்கள். ஆதாரப்பூர்வமான அந்தச் செய்திகள் என்று பயன்தரும். பாதுகாத்து வைத்துக் கொள்ளலாம். இது போன்று தொடர்ந்து ஒவ்வொரு துறையிலும் சிறப்பு மலர் வெளியிடுங்கள்.

—பத்தூர் மகாலிங்கம்,
சென்னை-35.

### தொடரும் கேள்வி ?....

தொடர்கதை பற்றி ஒரு முறை அறிவிப்பு வந்ததே அவ்வளவுதானா? தொடர்கதை வெளியிடுங்கள் என்று தொடர்ந்து கேட்கவேண்டுமா?

—பா. சிவஞானம்,
சேலம்-2.

### தொடரும் ஆசை !....

சென்ற ஆண்டு சிறுகதைப் போட்டி அறிவிப்பு வெளிவந்தபொழுது தொடர்ந்து ஆண்டுதோறும் சிறுகதைப் போட்டி அறிவிக்கப்படும் என்று வெளியிட்டிருந்தீர்கள். ஆனால் இதுவரை எதுவும் அறிவிப்பு வரவில்லையே? ஆசையோடு உங்கள் அறிவிப்பை எதிர்பார்க்கிறேன்.

—ஆவாரணி நடராசன்,
சென்னை-17.

### பயனுள்ள பனை !

பனைமரம் பல வகைகளிலும் பயன்படுகிறது என்கின்ற உண்மையினை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது, 'பனை வழங்கும் செல்வம்' என்னும் கட்டுரை. வீட்டுக்கொரு கோழிப்பண்ணை அமைத்திடுவது போல — வீட்டுக்கொரு பனைத் தோட்டம் அமைக்கலாம் போல எனக்குத் தோன்றுகிறது! அவ்வளவு சிறந்த கட்டுரை இது.

—அ. சரசுவதி,

### சிறப்புமிக்க சிறுகதை !

திரு. சோம. மகாதேவன் எழுதிய "வாழ்விலே ஓர் திருநாள்" சிறுகதை, சீரிய கருத்தைச் சித்திரிக்கிறது. விதவையின் கண்ணீரைத் துடைக்கச் சாரங்கன் எடுத்த முயற்சி, அந்த முயற்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கிற பழங்கால மூடப்பழக்கம், அதற்குத் தலைவிதி என்ற பட்டயம் அத்தனையையும் சுக்கு நூறு ஆக்குகிற சாரங்கனின் முயற்சி, அந்த முயற்சிக்கு முதுகெலும்பாக இருக்கும் "கைம்பெண் துயர் துடைக்க கலைஞர் தந்திருக்கும் திட்டம்"—அப்பப்பா! சிறப்புமிக்க சிறுகதை.

—ஜி. சுப்பிரமணியன்,
நெய்வேலி-2.


ESTD: 21-3-52. **தபால்மூலம்** GOVT REGD: 3072.

## இலவசக்கல்விபோதனை

**E குருப் வகுப்புகள் ஆரம்பம் : 13-8-1975**

ஆண்—பெண் இருபாலரும் 1975-76-ம் வருட சர்க்கார்-பல்கலைக் கழக தேர்வுகளில் தேர்ச்சி பெற உத்திரவாதத்துடன் மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி அளிக்கப்படும்.

1. S. V. B. A., B. Com., B. Sc., March- 1976 (P.U.C./இண்டர் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 2. B. L., M.A., M.Com., A.M.I.B.M., (பட்டதாரிகள் அருகதையுடையவர்கள்.) 3. ஆக்ரா-டில்லி-கர்நாடக் B.A., B.Com., B. Sc., (S. S. L. C. (அ) S. S. C. ஆ, மெட்ரிக் தேறியவர்கள் கலந்து கொள்ளலாம்.) 4. போபால்-ஆந்திரா-கர்னாடக்-டெல்லி இண்டர் (S.S.L.C./S.S.C. மெட்ரிக் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 5. A. C. B- I. (London) S.S.L.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள், 6. Account Text Exmns. (I. M. C., S.S.L.C./S.S.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 7. டெலிபோன் ஆப்ரேட்டர்-டெலிகிராபிக் ஒயர்லெஸ். 8. சென்னை-மதுரை-திருப்பதி மெட்ரிகுலேஷன். 9. சென்னை-மதுரை P. U. C. 10. தமிழ் வித்துவான்-புலவர் தேர்வுகள். 11. விவசாயம். 12. போஸ்ட்மென். 13. போஸ்டல் கிளார்க். 14. கைத்தறி நெசவு. 15. அக்கவுண்டன்ஸி. 16. கிராம மணியம்-கர்ணம். 17. சர்வீஸ் கமிஷன் (தமிழ் அண்ட் ஆங்கிலம் அக்-75). 18. S.S.L.C. (8 ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 19. Com INTER. D. Com., B. Com., B. Com (Hons) M. Com., S. S. L. C. அல்லது P. U. C. தேறியவர்களும்-தவறியவர்களும் 75-நவம்பர் தேர்வில் கலந்து கொள்ளலாம். 20. பேசிக் ஆங்கிலம். 21. பிரி-மெட்ரிக். 22. ஹோமியோபதி.

முழு விவரங்களுக்கு 25 பைசா தபால் தலையுடன் விண்ணப்பித்து நீங்கள் விரும்பும் வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

'தமிழகத்தின் தனிப் பெரும் தபால் கல்வி ஸ்தாபனம்'

Affiliated by I.A. & A.I.S. Educations & Com. University, New Delhi

**ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிட்யூட்**

ரிஷிவந்தியம்--S.O., Pin : 606205. தென்னார்க்காடு மாவட்டம். தமிழ்நாடு.

கிளைகள் : சிலோன், மலேசியா, தெ. ஆப்பிரிக்கா, மாரிஷஸ் அண்ட் இந்தோனேஷியா.



விலை உயர்ந்த ரசாயன உரத்தைக்
களைகள் தின்று விடுகின்றன

லாஸ்ஸோ அவற்றை முளைக்கும்
முன்னரே அழித்து விடுகிறது.

# லாஸ்ஸோ அதிகரித்த பருத்தி விளைச்சலைப் பெற உங்களுக்கு உதவுகிறது




லாஸ்ஸோ அகன்ற இலைக் களைகளையும், புல்பூண்டு களையும் பயனுள்ள முறையில் கட்டுப் படுத்துவதனால், உங்கள் பருத்திப் பயிர் ரசாயன உரத்தின் உயர்ந்த பட்சப் பயனைப் பெறுகிறது. பூச்சிகளும் வெகுவாகக் குறைந்து விடுகின்றன. எனவே, நீங்கள் அதிக லாபத்தைப் பெறுகிறீர்கள்— லாஸ்ஸோவின் உதவியினால்!

**களைகளைப் போக்கி விளைச்சலைப் பெருக்குங்கள்**

**மான்ஸான்டோ-இந்திய விவசாயிக்குச் சேவை புரியும் களைக்கொல்லி தயாரிப்போர்.**

## லாஸ்ஸோ.

களைநீக்கி தயாரிப்பாளர்— **Monsanto** மான்ஸான்டோ

50% ஈஸி மற்றும் 10% குறுணையாகக் கிடைக்கிறது.

**மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா பிரைவேட் லிட்.**
தலைமை அலுவலகம்: வேக்ஃபீல்ட் ஹவுஸ்,
11, ஸ்ப்ரோட் ரோடு, பாலர்டு எஸ்டேட்,
பம்பாய் 400 001.
கிளைகள்: 3/8, அஸஃப் அலி ரோடு,
புது டில்லி 110 001
19, ராஜேந்திர நாத் முகர்ஜீ ரோடு,
கல்கத்தா 700 001
310/311, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001

® மான்ஸான்டோ கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேட் மார்க் அங்கீகாரத்துடன் மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா பிரை. லிட். உபயோகிப்பது.

Grant-22 Tm

## குறுவைப் பயிர் சாகுபடியைத் துரிதப்படுத்த அரசின் உதவிகள்

தஞ்சை மாவட்டத்தில் குறுவைப் பயிர் சாகுபடியைத் துரிதப்படுத்துவதற்காக சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வேளாண்மைத் துறையைச் சார்ந்த 70 டிராக்டர்களும் 3 பவர் டில்லர்களும் தயார் நிலையில் உள்ளன. குறுவை சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்களது வேளாண்மைப் பணிகளுக்கு மேற்படி டிராக்டர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். விவசாயிகள் தங்களது தேவைக்கு அருகிலுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை அணுகி வேளாண்மைத் துறையின் டிராக்டர்களை வாடகைக்குப் பெறலாம்.

இவ்வரிய சந்தர்ப்பத்தை தஞ்சை மாவட்ட விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு அதிகப் பரப்பளவில் துரிதமாக குறுவைப்பயிர் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் தேவையான விவரங்களுக்கு திருவாரூரில் இருக்கும் டிராக்டர் பணிமனை பொதுக் கண்காணிப்பாளரை அணுகவும்.

## மத்திய விற்பனை வரிச் சட்டம் 1956— 'சி' மற்றும் 'எப்' படிவங்கள் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

1956-ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், பிற மாநிலங்களிலிருந்து சரக்குகளை வாங்க விரும்பும் ஒவ்வொரு வணிகரும் மத்திய விற்பனை வரியில் சலுகையான விகிதமாகிய 3 சதவித விற்பனை வரியை அடைய விரும்பினால் அதற்குரிய 'சி' மற்றும் 'எப்' படிவங்களை தாக்கல் செய்ய வேண்டும். பழைய 'சி' மற்றும் 'எப்' படிவங்கள் சிறிது மாற்றத்துடன் 31.12.'74 வரை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது. இந்திய அரசு இந்த படிவங்கள் சட்டப்படி செல்லும்படியாக கூடிய காலத்தை 31.12.'75 வரை நீடித்துள்ளது.

### கடன் நிவாரணச் சட்டம்

*இந்தியாவில் எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டும் வகையில் கடன் நிவாரணச் சட்டத்தைத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.*

*முன்பு விவசாயிகளுக்காகக் கடன் நிவாரணச் சட்டம் உள்ளது. இப்பொழுது பிறப்பிக்கப்பட்டுள்ள கடன் நிவாரணச் சட்டத்தால் விவசாயிகள் அல்லாத ஏழை எளிய மக்கள் வாங்கிய கடன்களுக்கு 22-7-'75 முதல் 15-1-'76 வரை வட்டி கிடையாது.*


இலக்கியங்களுக்கு
இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோரூவரை......

*தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுறா வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.*

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்**

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB

*The Watermark of Quality*

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்

# மறவாதீர்கள்;

# உங்கள் மகள் ஒருநாள்

# மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினுல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்ருேம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |



இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

## களிப்பு !

கவியரசு முடியரசன் அவர்களின் "கொடி கண்டேன் !" கவிதையைப் படித்தேன். களிகொண்டேன். பாவேந்தரின் பரம்பரையில் தாமும் ஒருவர் என்பதை ஒவ்வொரு வரியின் வாயிலாகவும் தெரிவித்திருக்கும் முடியரசனுருக்குப் பாராட்டு !

—இரா. கோதண்டபாணி,
சாத்தூர்.

## இணைப்பு !

இராஜாஜி மண்டபத்தில் சமீபத்தில் தமிழ்ச் சான்றோர்களின் உருவப் படங்கள் இடம் பெற்ற செய்தியைப் பத்திரிகைகளில் படித்தோம். அவற்றைக் காண்பதற்கு ஏங்கிக் கொண்டிருந்தோம். எங்களின் ஏக்கத்தைப் போக்கும் வகையிலே பன்னிரண்டு படங்களையும் வண்ணப் பக்கங்களில் அச்சிட்டு இலவச இணைப்பாக அளித்துள்ள 'தமிழரசு' இதழுக்கு நன்றிகள் ஆயிரம், ஆயிரம் !

—ஏ. சுப்பையா,
ஆர். எஸ். வேலன்,
துடியலூர்.

## வியப்பு !

பிற்பட்டோர் நலனில் தமிழக அரசு காட்டிவரும் அக்கறைக்கு விளக்கமாகக் காட்சி தருகிறது பிற்பட்டோர் நலத்துறை இயக்குநரின் பேட்டிக் கட்டுரை. படிக்கும் போது வியப்பு ஏற்படுகிறது. அடேயப்பா! பிற்பட்டோருக்கு எத்தனை எத்தனை நன்மைகளை இந்த அரசு வழங்கி வருகிறது!

—மு. மாரியப்பன்,
நிலக்கோட்டை.

## தொகுப்பு !

தமிழ்நாடு அரசின் கூட்டுத் துறையைச் சார்ந்த தொழிற்சாலைகளின் பட்டியலை விவரமாகவும், விளக்கமாகவும் தெரிவித்திருப்பது பாராட்டுக்குரியது.

—கே. கதிரேசன்,
காரியாபட்டி.

## பொறுப்பு !

'27 கோடி ரூபாய் செலவில் 25 ஆயிரம் வீடுகள்' —முதல்வர் உரைக் கட்டுரை கண்ணுற்றேன். ஏழை எளிய மக்களுக்கு அரசு அளித்து வரும் குடியிருப்புக் கட்டடங்கள் எழிலாகக் காட்சி தருகின்றன. பொறுப்புள்ள தமிழக அரசுக்கு நன்றி !

—எஸ். மீனாட்சிசுந்தரம்,
மதுரை.


# தமிழரசு

மலர்: 6
இதழ்: 4
16-8-'75


# பார்த்தோம்!

# படித்தோம்!!